# அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்



# ஆண்டறிக்கை 2015

மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு

# அரிமரச் சந்தைக்கான
## உண்மையான
# தலைமைத்துவம் ...

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

# எமது எதிர்காலம்




## நோக்கு

நாட்டின் நம்பிக்கையை வென்ற பெறுமதிமிக்க அரிமரம் மற்றும் மரத்தாலான பொருட்களை வழங்குவோனாக இருத்தல் மற்றும் அரிமரச் சந்தையில் தலைமைத்துவத்தைப் பெறல்.

## பணி

எம்மிடமுள்ள தொழில்நுட்ப அறிவு,புகழ், தேர்ச்சி ஆகியவற்றைப் பயன்படுத்தி சட்டரீதியாக சூழல் நேயமிக்க வகையில் நாட்டின் தேவைக்கேற்ப எமது வாடிக்கையாளரின் அரிமர மற்றும் மரத்தாலான பொருட்களுக்கான கேள்வியைப் பூர்த்தி செய்யும் விதத்தில் உற்பத்தி செய்து பெற்றுக் கொடுத்தல்.



*அரிமரம் மற்றும்*
*மரத்தாலான பொருட்களை*
*உற்பத்தி செய்வதில்*
*முதலிடத்தை வகிக்கும்*
*அரசாங்க மரக்*
*கூட்டுத்தாபனம்*
*இலங்கையின்*
*முன்னேற்றத்திற்காகவும்*
*அபிவிருத்திக்காகவும்*
*47 வருட காலமாக*
*அன்றும் இன்றும்*
*சளைக்காது முன்னோக்கிச்*
*செல்கின்றது.....*
*கடந்து சென்ற*
*காலம் முழுதும்*
*பல்வேறு மேடு பள்ளங்கள், தடைகளை எல்லாம் வென்று*
*நாம் உங்களுடன் கைகோர்த்துள்ளோம்.*

*உங்கள் விருப்பப்படி பொருட்களையும் சேவைகளையும்*
*உயர் தரமிக்கதாக வழங்குவதை*
*தேசிய பணியாகக் கருதி நாட்டின் அபிவிருத்திக்கு*
*உறுதுணையாக இருப்பதற்கு*
*முனைப்புடன் இருக்கின்றோம்.*



# உள்ளடக்கம்


| | |
|---|---|
| ஆரம்பமும் இன்று நாமும் | 6-7 |
| நிதிக்கூற்றுக்களின் முக்கிய பதிவுகள் | 8-9 |
| நிறுவனத் தகவல்கள் | 10 |
| முகாமைத்துவக் குழு | 11-13 |
| தலைவரின் மீளாய்வு | 14-16 |
| சன்மானங்களும் விருதுகளும் | 17 |
| பொது முகாமையாளரின் மீளாய்வு | 18-19 |
| எமது பொறுப்புக்கள் மற்றும் எமது வர்த்தகப் பெறுமானங்கள் | 20-21 |
| பணிப்பாளர் சபை | 22-23 |
| சிரே'ட முகாமைத்துவக் குழு | 24-25 |
| முதலாம் அத்தியாயம் | 26 |
| 2015ஆம் ஆண்டிற்கான பணிப்பாளர் சபை மீளாய்வு | 27-36 |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கமிட்டியின் அறிக்கை | 37 |
| இரண்டாம் அத்தியாயம் | 38 |
| நிதி மற்றும் உற்பத்திச் செயலாற்றுகை | 39-42 |
| ஒரு தசாப்தத்திற்கான தகவல்கள் | 43 |
| தேசிய பொருளாதாரத்திற்கு அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் பங்களிப்பு | 44-47 |
| நிறுவனஞ்சார் நிர்வாகம் | 48-55 |
| நீடித்த உறுதிப்பாடு மிகு எதிர்காலத்திற்காக | 56-63 |
| இடர் முகாமைத்துவம் | 64-71 |
| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை | 72-93 |
| வருடாந்த கணக்குகள் | 94-117 |
| கலைச் சொற்கள் | 118 |




## ஆரம்பம்

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் அரசாங்கத்திற்குரிய வர்த்த நிறுவனமொன்றாகும். அது 1968ஆம் அண்டில் காணி, நீர்ப்பாசன மற்றும் மின்வலு அமைச்சரினால் 1957இன் இல 49ஐக் கொண்ட அரசாங்கக் கைத்தொழல் கூட்டுத்தாபன சட்டத்தின் பிரகாரம் தாபிக்கப்பட்டதுடன், 1982 பெப்ரவரி மாதம் 05 ஆந் திகதிய இல 178/10ஐக் கொண்ட விசேட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2009ஆம் ஆண்டு யூன் 26 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் பிரகாரம் மேலும் திருத்தப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டது. ஈடுபடுத்தப்பட்டுள்ள ஆரம்ப மூலதனம் 2.5 மில்லியன் ரூபாவாகும்.

## இன்று நாம்...

அதன் தலைமை அலுவலகம் பத்தரமுல்லை, சம்பத்பாயாவில் அமைந்துள்ளதுடன், பிராந்திய அலகுகள் நாட்டின் எல்லா பிரதேசங்களிலும் அமைந்துள்ளன. அரசாங்க மரக்கூட்டுத்தாபனத்தின் முக்கிய வருமான மூலமானது அரிமரம் மற்றும் மர உற்பத்திகள் ஆகியவற்றின் விற்பனையாவதுடன், வளம்மிகு அறுவடைக்காக அரசாங்க மரக்கூட்டுத்தாபனம், வன பாதுகாப்பு திணைக்களத்துடன் இணைந்து வளம்மிகு வன நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துகின்றது.

அதி உயர் தரத்தில் மர உற்பத்திகளையும் சிறந்த சேவையினையும் வழங்குவதற்கு நாம் எப்போதும் முயற்சிப்பதுடன், 47 வருட காரமாக அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் அரிமரம் மற்றும் மர உற்பத்தித் துறையில் உயர்ந்த நிலையினை அடைவதற்கு இது காரணமாக அமைந்ததுடன், உயர் தர உற்பத்திகளை மதிப்பீடு செய்கையில் எமது உற்பத்திகள் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஓர் அங்கமாக பாவனையில் உள்ளது.

# நிதிக்கூற்றுக்களின் முக்கிய பதிவுகள்

**வருவாய் (மில்லியன் ரூபா)**

| 2015 | 2014 | வித்தயாசம |
|---|---|---|
| 3,836 | 3,474 | 10% |

**திறைசேரி மற்றும் வருமான வரிகளுக்கு முன் இலாபம(மி.ரூ.)**

| 2015 | 2014 | வித்தியாசம |
|---|---|---|
| 769 | 427 | 80% |

**திறைசேரிக்கு செலுத்திய வரி (மி.ரூ.)**

| 2015 | 2014 | வித்தியாசம |
|---|---|---|
| 50 | 25 | 100% |

**வருமான வரி (மி.ரூ.)**

| 2015 | 2014 | வித்தியாசம |
|---|---|---|
| 349 | 196 | 78% |

**வருடத்திற்கான தேறிய இலாபம் (மி.ரூ.)**

| 2015 | 2014 | வித்தியாசம |
|---|---|---|
| 370 | 206 | 80% |

**உரிமைப் பங்கு மீதான ஈட்டல்கள்**


| 2015 | 2014 | வித்தியாசம |
|---|---|---|
| 9.4% | 5.7% | 63% |


**சொத்துக்கள் மீதான ஈட்டல்கள்**

| 2015 | 2014 | வித்தியாசம |
|---|---|---|
| 6.3% | 3.6% | 73% |

**மொத்தச் சொத்துக்கள் (மி.ரூ.)**

| 2015 | 2014 | வித்தியாசம |
|---|---|---|
| 5,859 | 5,660 | 4% |






**மொத்த உரிமைப்பங்கு (மி.ரூ.)**

| 2015 | 2014 | வித்தியாசம |
|---|---|---|
| 3,953 | 3,583 | 10% |

**மொத்த கடன்பட்டோர் (மி.ரூ.)**

| 2015 | 2014 | வித்தியாசம |
|---|---|---|
| 1,906 | 2,077 | -8% |

**கடன்ஃ உரிமைப்பங்கு**

| 2015 | 2014 | வித்தியாசம |
|---|---|---|
| 48.2% | 58.0% | -17% |

**கடன்/மொத்தச் சொத்துக்கள்**

| 2015 | 2014 | வித்தியாசம |
|---|---|---|
| 32.5% | 36.7% | -11% |

**மொத்த ஊழியர்கள் (எண்ணிக்கை)**


| 2015 | 2014 | வித்தியாசம |
|---|---|---|
| 2,145 | 2,186 | -2% |


**ஊழியர் ஒருவருக்கான வருவாய் (மி.ரூ.)**


| 2015 | 2014 | வித்தியாசம |
|---|---|---|
| 1.8 | 1.6 | 13% |

**ஊழியர் ஒருவருக்கான இலாபம்**
(திறைசேரி மற்றும் வருமான வரிகளுக்கு முன் ) மி.ரூ.)

| 2015 | 2014 | வித்தியாசம |
|---|---|---|
| 0.36 | 0.2 | 80% |



# நிறுவனத் தகவல்கள் 2015

| | |
|---|---|
| கௌரவ திரு. மைத்ரீபால சிறிசேன | - மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சர் |
| திரு. டீ.எம்.ஏ.எல்.பி. ஜயரத்ன | - மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பிரதி அமைச்சர் |
| திரு. உதய ஆர். செனெவிரத்ன | - செயலாளர்-மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு |

## பணிப்பாளர் சபை

| | |
|---|---|
| திரு பி திசாநாயக்கா | - தலைவர் - அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் |
| திரு எச்.வை.ரீ. பவரகுமார | - செயற்படு பணிப்பாளர் - அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் |
| திரு எம்.ஏ. கருணாரத்ன | - பணிப்பாளர் (திறைசேரிப் பிரதிநிதி) |
| திரு எஸ்.ஏ.ஏ. சத்துருசிங்க | - பணிப்பாளர் (வனப் பாதுகாப்பு ஜெனரால்) |
| திரு. எம்.வீ. கருணாரத்ன | - பணிப்பாளர் |
| திரு. பி. பன்சலவத்த | - பணிப்பாளர் |
| திரு. ஏ.எம்.சீ. பெரேரா | - பணிப்பாளர் |
| திரு கே. சிரினிவங்' | - பொது முகாமையாளர் - அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் |

## கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கமிட்டி

| | |
|---|---|
| திரு எம்.ஏ. கருணாரத்ன | - கமிட்டி தலைவர் |
| திரு எஸ்.ஏ.ஏ. சத்துருசிங்க | - கமிட்டி உறுப்பினர் |
| திரு. எம்.வீ. கருணாரத்ன | - கமிட்டி உறுப்பினர் |

## கணக்காய்வு

கணக்காய்வாளர் தலைமை அதிபதி
கணக்காய்வாளர் திணைக்களம்
306/72, பொல்தூவ வீதி,
பத்தரமுல்லை.

## தலைமை அலுவலகம் (பதியப்பட்ட விலாசம்)

82, "சம்பத்பாய"
ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை
இலங்கை.

## பிரதான வங்கியாளர்கள்

இலங்கை வங்கி

## நிதி ஆண்டு

ஜனவரி 01ஆந் திகதி முதல் டிசம்பர் 31ஆந் திகதி வரை
தொலைபேசி : #94112866600-5
தொலைநகல : #94112866623
இணையத்தளம : www.timco.lk



# முகாமைத்துவக் குழு - 2015

| | | |
|---|---|---|
| பொது முகாமையாளர் | கே. சிரினிவங்ஷ | Bsc., Msc (Forestry), Dip (Bus.mgt), Post Grad. Dip. (Forest Survey - Netherland), Dip. (Forest products reaserch - Japan) |
| **பிரதிப் பொது முகாமையாளர்கள்** | | |
| பி. பொது முகாமையாளர் | தகவல் தொழில்நுட்பம் | டீ.யூ. தயாரத்ன Bsc. Msc.(Com. Sc) |
| பி. பொது முகாமையாளர் | ஆய்வு,பயிற்சி,அபிவிருத்தி | கலாநிதி என்.ருவன்பத்திரண Bsc. Msc. Ph. D. (Forestry) |
| பி. பொது முகாமையாளர் | உள்ளகக் கணக்காய்வு | டப்ளியூ.டப்ளியூ.எம்.ஜே.குரே FCA |
| பி. பொது முகாமையாளர் | நிதி | ஜீ.டீ.எஸ். குமாரசிங்க டீஎஉ. (Acct. Fin. Mgt.), ACA, ACMA |
| பி. பொது முகாமையாளர் | இயக்குதல | எச்.பீ.எஸ் நவரத்ன Bsc. Msc. (Forestry),Pg Dip.in Forestry for Rural Mgt. (Netherland) |
| பி. பொது முகாமையாளர் | விநியோகம் | பி.பி.ஆர். சமரவீர Bsc. Msc. (Forestry) |
| **உதவிப் பொது முகாமையாளர்கள்** | | |
| உ. பொது முகாமையாளர் | எஸ்.எஸ். பண்டுவாவல | B.Sc., M.Sc (Forestry), Post Grad. Dip. (Forest Survey - Netherland), Post Grad. Dip. (Mech. Wood Tech. & Prod.Mgt - Finland) |
| உ.பொது முகாமையாளர் | (பதில்) | எம்.சீ. தேவேந்திர B.Sc., M.Sc. (Forestry) |
| உ.பொது முகாமையாளர் | (பதில்) | பி. குணவங்ஷ BA (SP), Dip in Forestry |
| **முகாமையாளர்கள்** | | |
| முகாமையாளர் | நிதி | பி.டீ.ஏ.எம.டீ. விக்கிரமசிங்க Dip. (FA) |
| முகாமையாளர் | நிதி | ஆர்.எம்.ரத்னபால H.N.D.A, Post Grad.Dip. in Finance (India) - 1st class, Member A.A.T, Member U.K.A.P. |
| முகாமையாளர் | நிதி | எச்.ஏ.ஜே.எம் பீரிஸ் ICAL (I), Higher. Dip. (Accountancy) |
| முகாமையாளர் | நிர்வாகம் | ஈ.ஜீ.எச்.குலரத்ன Dip. in English, Dip. in Forestry, Dip. in Mgt., PgD LRHRM, ACPM |
| முகாமையாளர் | உற்பத்தி | கலாநிதி எம்.ஜீ.எம். தாரிக் Bsc, Msc, Phd. |
| முகாமையாளர் | மனித வள | ஈ.ஏ.டீ.எஸ்.ஏ. அமரசிங்க |
| முகாமையாளர் | கொள்வனவு செய்தல், கப்பலேற்றல் | அருண டி சில்வா |
| முகாமையாளர் | தகவல் தொழில்நுட்பம் | ஏ.பி. மாதுவகே |
| முகாமையாளர் | ஆய்வு,பயிற்சி,அபிவிருத்தி | சீ.கே. முத்துமால Bsc (Agric) Hons ,Msc. (Forestry) |

| | | |
|---|---|---|
| முகாமையாளர் | விசாரணை | ஈ.ஜீ. திலக்கரத்ன |
| முகாமையாளர் | அரிவாலைகள் | டப்ளியு.பீ. சமந்த Bsc.(Gen), Msc (Forestry) ,National Dip in Teaching |
| முகாமையாளர் | மீள் வனநடுகை | ஏ.பி. ரத்னசூரிய |
| முகாமையாளர் | விசேட செயற்றிட்டம் | ஏ.என்.டப்ளியூ.ஏ. ஆனந்த |
| முகாமையாளர் | தளபாட பொறிகூடம் | எம்.கே.டப்ளியூ. திசாநாயக்க B.com, Post Grad. Dip in International Affairs |
| | | ஜே.ஜீ. திசர கமகே Bsc. |
| முகாமையாளர் | பாதுகாப்பு | சந்திம வீரமன் |
| முகாமையாளர் | அரிமரத் தரப்படுத்தல | வை.பீ.எம். அமீர் Dip. in Forestry |
| முகாமையாளர் | நிதி | பி.ரீ.என் போவத்த |
| முகாமையாளர் | நிதி | கே.டீ.கே.சீ. டி சில்வா |
| முகாமையாளர் | நிதி | எச்.பி.ஆர். விஜேநாயக்க |
| முகாமையாளர் | வன குற்றங்கள் மற்றும் அன்பளிப்பு அரிமரம் (பதில்) | எச்.பி.எஸ். திசாநாயக்க BA |

**பிராந்திய முகாமையாளர்கள்**

| | | |
|---|---|---|
| பி. முகாமையாளர் | பொலன்னறுவை | ஆர். எதிரிசிங்க |
| பி. முகாமையாளர் | பண்டாரவளை | ஜீ.கே. அஜித் சந்தன B.Sc |
| பி. முகாமையாளர் | கொழும்பு | டப்ளியூ. கீர்த்தி ரோய் |
| பி. முகாமையாளர் | அனுராதபுரம் | யூ.எஸ்.எம். பெர்னாண்டோ BA (SP) |
| பி. முகாமையாளர் | இரத்தினபுரி | டீ.எச். ராஜபக்' Bsc, Msc (Agri) |
| பி. முகாமையாளர் | நுவரெலியா | எச்.பீ. ரஜவத்த BA |
| பி. முகாமையாளர் | மொனராகலை | யூ.பி.எச். உளுவடுகே Bsc. (Physical Science) |
| பி. முகாமையாளர் | கண்டி | ஈ.எம்.எஸ். ஏக்கநாயக்க |
| பி. முகாமையாளர் | யாழ்ப்பாணம் | எஸ். ஸ்ரீஸ்கந்தராஜா |
| பி. முகாமையாளர் | குருணாகலை | ஏ. எஸ் விஜேசுந்தர |
| பி. முகாமையாளர் | மாத்தறை | டப்ளியூ.ஐ. சாரங்க B.Sc (Hons) |
| பி. முகாமையாளர் | அம்பாறை | எம்.கே.பி. வசந்த ராஜ் |

**தொகுதிகளுக்கு பொறுப்பாகவுள்ள முகாமையாளர்கள்**

| | | |
|---|---|---|
| முகாமையாளர் | சிலிப்பர், மின்சார தூண்கள் கல்தமுல்லை | டீ.எம்.நில்மிணி ப்'பகுமார Bsc. |



| | | |
|---|---|---|
| பிராந்திய முகாமையாளர் | கெப்பெட்டிபொல | ஏ.பீ.எம். வீரசிங்க BA |

**பிரதி முகாமையாளர்கள்**

| | | |
|---|---|---|
| பி.பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் | | எச்.எம்.எஸ். மாதவ B.Com (sp) |
| பி. முகாமையாளர் | அரிமரத் தரப்படுத்தல்/ஏலவிற்பனை | ரீ.எச் குணதாச |
| பி. முகாமையாளர் | சட்டம் | கே.ஐ.டீ.பி. காரியவசம் LLB.Attorney at Law |
| பி. முகாமையாளர் | சிவில் பொறியியலாளர் | டப்ளியூ.பி.எஸ்.என். டி சொய்ஸா |
| பி. முகாமையாளர் | நிர்மாணிப்பு, தரக்கட்டுப்பாடு | ஈ.எம்.எம். பெர்னாண்டோ |
| தொகுதிப் பகுப்பாய்வாளர் | டப்ளியூ.எச்.ஏ. சந்திரகுமார | B.Sc |
| | ஜே.எம்.எம்.பீ. ஜயசுந்தர | B.Sc ( Special Hons) |

**பிரதிப் பிராந்திய முகாமையாளர்கள்**

| | | |
|---|---|---|
| பி.பி. முகாமையாளர் | அனுராதபுரம் | கே.பீ.சீ. ரத்னசேக்கர BA |
| பி. பி. முகாமையாளர் | பண்டாரவளை | சுனில் ஜயரத்ன |
| பி. பி. முகாமையாளர் | மாத்தறை | ஆர் விஜேதுங்க B.Sc (Agri. Sp.) எல்.எஸ். ஜயசேக்கர |
| பி. பி. முகாமையாளர் | அம்பாறை | எம்.டீ.சமில சம்பத் |
| பி. பி. முகாமையாளர் | நுவரெலியா | டீ.ஏ. ஹெந்தாவித்தாரண எம்.டப்ளியூ.யூ.ஜே. பியநந்தன |
| பி. பி. முகாமையாளர் | அம்பாறை (தளபாட உற்பத்தித்தளம்) | ஏ.சீ.ஜினேஜுதீன் |
| பி. பி. முகாமையாளர் | கண்டி | டீ.ஜீ.சிரில் ஆர்.சீ. சமன் குமார |
| பி. பி. முகாமையாளர் | மொணராகலை | துமிந்த நவரத்ன BA |
| பி. பி. முகாமையாளர் | குருணாகலை | ஆர்.எம்.எஸ்.கே. ரத்னாயக்கா சுனில் விஜித்த பண்டார |
| பி. பி. முகாமையாளர் | யாழ்ப்பாணம் | ரீ.பீ. ரமே' |
| பி. பி. முகாமையாளர் | இரத்தினபுரி | எச்.எல். நந்தன B.Sc எச்.ஏ. காமினீ அல்விஸ் |
| பி. பி. முகாமையாளர் | மாத்தளை | டீ.எல். அபேநயக்கா |
| பி. பி. முகாமையாளர் | கல்தேமுல்லை | என்.ஜீ. நிகால் ரீ.எஸ். ரூப்பசிங்க |
| பி. பி. முகாமையாளர் | மின்னேரியா | எஸ்.சீ. ஜயமான்ன B.Sc |

# தலைவரின் மீளாய்வு



> "வன முகாமைத்துவம் குறித்து பொருளாதார, சமூக, அரசியல், உயிரியல் ஆகியவற்றின் பின்னணியினைப் புரிந்து கொள்வதும், அப்பிரிவினை சமநிலைப்படுத்துவதும் ஆபத்துமிக்கதும் சவால்மிக்கதும் என்றாலும் முறையான முகாமைத்துவத்தின் மூலம் எதிர்கால அரிமர வழங்கலை நிலையான மட்டத்தில் பேணலாம."

2015 திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடையும் நிதியாண்டிற்கான ஆண்டறிக்கையை மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களை பெரு மகிழ்ச்சியுடன் முன்வைக்கின்றேன். ஏறத்தாழ ஐந்து தசாப்த கால சேவை வரலாறு பூராகவும் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் மக்களின் நம்பிக்கையை வென்ற பெறுமதிமிக்க அரிமரம் மற்றும் மரத் தளபாடங்களை வழங்குவோனாக முன்னோடித் தலைமைத்தவத்தினைத் தாங்கி நிற்கின்றது. விரிவாக்கப்பட்ட செயற்பாட்டு வலையமைப்பு மற்றும் நம் வசமிருக்கும் 12 பிராந்திய அலுவலகங்கள், 54 விற்பனை நிலையங்கள், 200ற்கும் மேற்பட்ட மரம் வெட்டுகை நடைபெறும் செயற்படு வேலைத்தளங்கள், மரப் பதனிடல் மற்றும் பரிகரித்தல் ஆகியவற்றிற்கான பொறித்தொகுதிகளைக் கொண்ட 3 தளபாட உற்பத்தி உற்பத்தி நிலையங்கள் என்பன அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் நாட்டின் மாபெரும் அரிமர உற்பத்தி உற்பத்தி வலையமைப்பின் உரிமையாளர் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. புதிய அனுபவங்கள் பலவற்றுடன் 2015ஆம் ஆண்டு ஆரம்பத்துடன் நாட்டின் அரசியல், பொருளாதார மற்றும் சமூக ரீதியாக பாரிய மாற்றத்திற்கு முகம்கொடுக்க நேரிட்டதும், அதனூடாக அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் அபிவிருத்தியை நோக்கி இட்டுச்செல்லும் பாரதுரமான கடமையினை நான் பொறுப்பேற்றேன். இவ்வாறான பின்னணியிலும் உற்பத்தி, விற்பனை, நிதி ஆகிய பிரிவுகளை முறையாக ஒழுங்குபடுத்துவதும் அதற்கு இணைவாக புதிய தொழில்நுட்பம் மற்றும் புதிய உபாய வழிமுறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் மிகவும் வெற்றிகரமாக இவ்வாண்டினை நிறைவுசெய்வதற்கு எம்மால் முடிந்தது.
இலங்கை 2014இல் அடைந்த 4.9% பொருளாதார அபிவிருத்திக்கு ஒப்பாக அரச கொள்கைகள் மற்றும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சவால்களுக்கு முகங்கொடுத்து 2015 ஆம் ஆண்டின் போது 4.8% அபிவிருத்தி காட்டப்பட்டுள்ளது. 2015ஆம் ஆண்டினுள் விவசாய, தொழில்நுட்ப, சேவைகள் ஆகியன முறையே 5.5%, 5.3%, 3.0% ஆல் அபிவிருத்தி காணப்பட்டதுடன், அரச துறையினை நோக்கின் அரச ஊழியர்களின் வருமானம் உயர்வடைந்ததன் காரணமாக உள்நாட்டு நுகர்வில் மாற்றம் ஏற்பட வழிகோலியது. உலகப் பொருளாதாரத்தின் மந்தமான அபிவிருத்தி உள்நாட்டுப் பொருளாதாரத்திலும் செல்வாக்குச் செலுத்துவதாயிற்று. பணவீக்கம் நிலையான மட்டத்தில் பேணப்படுகின்றமை போன்றே வட்டி வீதம் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றமை பொருளாதார அபிவிருத்திக்கு உறுதுணையாக இருந்தன. இவ்வாறு இலங்கை பொருளாதாரம் காணப்பட்ட நிலைமையில் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் 2015ஆம் ஆண்டின் சவாலினை எதிர்கொண்டு வெற்றிகரமாகத் தமது வியாபார நடவடிக்கைகளைச் செயற்படுத்தியது.

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் செயலாற்றுகையில் முக்கியமாகச் செல்வாக்குச் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளுள் ஒன்றான வன முகாமைத்துவம் குறித்து பொருளாதார, சமூக, அரசியல், உயிரியல் ஆகியவற்றின் பின்னணியினைப் புரிந்து கொள்வதும், அப்பிரிவினை சமநிலைப்படுத்துவதும் ஆபத்துமிக்கதும் சவால்மிக்கதும் என்றாலும் முறையான முகாமைத்துவத்தின் மூலம் எதிர்கால அரிமர வழங்கலை நிலையான மட்டத்தில் பேணலாம். ஏனைய பொருட்களுக்கான கேள்வியைப் போன்றல்லாது, தளபாடங்களுக்கான கேள்வி பொருளாதாரம் மற்றும் சுற்றாடல் ஆகியவற்றுடன் பின்னிப்பிணைந்துள்ளது. அதனால், மூலப்பொருட்களின் பற்றாக்குறை மற்றுமட கூடிய செலவு காரணமாக அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் இலாபம் தொடர்பில் சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. காடழிப்பு தற்போது காணப்படும் பாரிய சுற்றாடல் பிரச்சினையாகும். அரிமரம் மற்றும் அரிமரஞ்சார் பொருட்களுக்கு உள்ள உயர் கேள்வியின் விளைவாக சட்டரீதியற்ற முறையில் காடழிப்பை மேற்கொள்வதற்கு உந்தப்பட்டுள்ள இக்காலகட்டத்தில் வன முகாமைத்துவத்தினூ டாக மாத்திரமே வனவளங்களை எதிர்கால பரம்பரையினரின் தேவைகளுக்காக பாதுகாக்க முடிகிறது. பேண்தகு அரிமர விளைச்சல் அறுவடைசெய்வதன் மூலம் காடழிப்பினைக் குறைக்கலாம்.

அதாவது, அரிமர விளைச்சலை அறுவடை செய்யும் பொது வன பயிர்ச்செய்கை நிலத்தில் உற்பத்தி ஆற்றலைப் பாதுகாக்கும் விதத்தில் மிகவும் முறையான மற்றும் விஞ்ஞான ரீதியில் செயற்படுவதனாலும் முதிர்ந்த மரங்களுக்குப் பதிலாக புதிய மரங்களை நட்டி, புதிய வன பயிர்ச்செய்கையினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் சமூகத்திற்கு நீண்ட கால நலன்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு முடிகிறது. எவ்வாறெனினும், மரம் என்பது நிலையாக இருக்கக்கூடிய ஓர் உயிர் அன்று. ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் முதிர்ச்சியடைந்த மரங்கள் உக்கிப் போய், அதற்குப் பதிலாக வேகமாக வளரும் இளம் மரங்கள் அந்நிலத்தினை ஆக்கிரமிப்பதன் மூலம் இயற்கையாகவே புதிய மரங்களின் மீள் நடுகை நடைபெறுகின்றது.



வன பாதுகாப்பு திணைக்களத்தினால் உரிய முகாமைத்துவத் திட்டத்தின் பிரகாரம் வருடாந்தம் எம்மிடம் விடுவிக்கப்படும் முதிர்ச்சியடைந்த வனப்பயிர்ச்செய்கை, சரியான முறைமைகளின் படி விஞ்ஞான ரீதியாக வீணாதலைக் குறைக்கும் விதத்தில் அரிமரமாக மாற்றி, அந்நிலத்தினை மீண்டம் வனப்பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக விடுவிப்பது எமது நிறுவனத்தினால் நிறைவேற்றப்படுகின்றது.
அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தால், அதன் செயற்பாடுகளை முறையான முகாமைத்துவத்தின் மூலம் மிகச் சிறந்த பெறுபேற்றினைப் பெற்றுக் கொள்வதற்கும் தொழிற்றுறையின் அபிவிருத்திக்காகவும் பாரிய பங்களிப்பினை வழங்குவதற்கு முடிகின்றமை எமக்கு கிடைத்தற்கரிய பெரும் பேறாகும். மென்மேலும் போட்டிமிக்க நன்மைகளைப் பெற்றுக் கொள்ளல், தரத்தில் உயர்ந்த பொருட்களை உற்பத்தி செய்தல் மற்றும் வாடிக்கையாளரைத் தெரிவுசெய்யும் வரம்பினை விரிவுபடுத்தல் ஆகிய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக புதிய நிதி ஆண்டின் போது புதிய தொழில்நுட்ப முறைகளை அறிமுகப்படுத்துதல் , புதிய சந்தைப்படுத்தல் உத்திகளை அறிமுகப்படுத்தல் ஆகியவற்றிற்கு மூலதன முதலீடுகளை விரிவாக்குவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன், 2015ஆம் ஆண்டினை எல்லா தடைகளையும் வென்று எதிர்பார்த்த விதத்திலேயே மிக வெற்றிகரமாக நிறைவுசெய்வதற்கு எம்மால் முடிந்தது.
இவ்வாறான பின்னணியில், மீளாய்விற்கு உட்படும் ஆண்டிற்கான பதிவு செய்யப்பட்ட வருமானம் 3,836 மீல.லியன. ரூபா என்பதுடன், கடந்த வருடத்தில் 3,474 மி.ரூபாவாக இருந்தது. இவ்வருமானத்தினை ஈட்டிக் கொள்வதற்காக இவ்வாண்டினுள் அறிமுகப்படுத்தப்பட்ட புது விற்பனை மற்றும் உற்பத்தி உபாயங்களை மேற்கொண்டமை பெரிதும் வழிகோலின. கடந்த வருடத்தின் 204 மி.ரூபா செயற்படு இலாபம் இவ்வருடத்தில் 546 மி.ரூபா வரை வளர்ச்சி கண்டுள்ளதுடன், திறைசேரி வரி மற்றும் வருமான வரிக்கு முன்னரான தேறிய இலாபம் 2015ஆம் வருடத்தில 769 மி.ரூபாவாக உள்ளதுடன், கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 2015இல் 80% வளர்ச்சியினைக் காட்டுகின்றது. 2014ஆம் வருடத்தல் 206 மி.ரூபா திறைசேரி வரி மற்றும் வருமான வரிக்குப் பின்னரான தேறிய இலாபமாக உள்ளதுடன், 2015இல் 370 மி.ரூபாவாக உள்ளது. அவ்வாறே, 2015ஆம் ஆண்டினுள் 1,594 மி.ரூ. உரிமைப்பங்கு, செயற்படு வரி, திறைசேரிக்குச் செலுத்திய விசேட வரி என அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினால் தேசிய பொருளாதாரத்திற்கு குறிப்பிடத்தக்க அளவு பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2015ஆம் ஆண்டு காலப்பகுதியில் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினால் சிலிப்பர் கட்டடைகளை ஏற்றுமதி செய்வதன் மூலம் 54 மி. ரூபா அந்நிய செலவாணி ஈட்டப்பட்டுள்ளது. உயர்ந்து செல்லும் கேள்விக்கு பரிகாரமாக கிழித்த மரங்களை இறக்குமதி செய்வதற்கும், உயர் தரத்தில் கிழித்த மரங்களை இறக்குமதி செய்வதன் மூலம் சந்தையில் காணப்படும் தரக்குறைவான அரிமரப் பாவனையிலிருந்து வாடிக்கையாளரைப் பாதுகாக்க முடிகின்றது. மேலும், அதிகரித்துச் செல்லும் அரிமரக் கேள்வியினை நிவர்த்தி செய்வதற்காக மென்பலகைகளை நீண்ட காலம் நீடிக்கக் கூடிய விதத்தில் தேவையான தொழில்நுட்பம் மற்றும் துறைசார் அறிவினை அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினுள் பெற்றுக் கொண்டு, அரிமரப் பரிபரிப்பு மூலம் நாட்டின் பெறுமதிமிக்க அரிமர வளத்தினைப் பாதுகாத்து அதன் உற்பத்திக்காக பொருத்தமான சந்தை வாய்ப்பினை

உருவாக்குவதற்கு எம்மால் முடிந்தது. நவீன இயந்திரோபாயங்களைப் பயன்படுத்தி அரிமரம் வீணாதலைக் குறைத்தும், அரிமரத்தினால் உச்ச பயன்பாட்டினைப் பெற்றுக் கொள்ள முடியுமான முறைமைகளை அறிமுகப்படுத்தல் மூலம் நிலையான அபிவிருத்தியினை நோக்கி அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் வழியமைத்துக் கொண்டுள்ளது. கூட்டுத்தாபனத்திற்குரிய பெறுமதிமிக்க வளம் மனித வளம் என்பது எமது நம்பிக்கையாகும். 2015ஆம் ஆண்டில் முன்னைய ஆண்டினைப் போன்றே, எமது கூட்டுத்தாபனத்தினால் மனித வளப் பயிற்சி மற்றும் தொழிற்சார் அபிவிருத்தி நிகழ்ச்சிகள் மூலம் ஆற்றல்கள் மற்றும் திறன்களை மேலும் விருத்தி செய்து வாடிக்கையாளருக்கு கூடிய வினைத்திறனுடனும் உச்ச அளவில் சேவைகளை வழங்குவதற்கும் நிறுவனத்தின் இலக்குகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

2015ஆம் ஆண்டினுள், நாம் குழுவாக கூட்டுத்தாபனத்தின் எல்லா பக்கங்களிலும் நிர்வாக நியமங்களை  மற்றும் வர்த்தகப் பாவனைகளை மேம்படுத்துவதற்கு முடிந்துள்ளதுடன், மாண்புமிகு ஜனாதிபதி அவர்களின் எண்ணக்கருவின் பிரகாரம் எதிர்கால சந்ததியனருக்காக சுற்றாடலைப் பாதுகாக்கும் நோககத்தினை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு, பொறுப்புமிக்க குடிமகனாக தேசத்தின் தேவைக்காக மரநடுகையினை மேலும் வலுப்படுத்துவதற்காக அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தில் நிறுவப்பட்டுள்ள பிரத்தியேக அலகொன்றினால் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு இடையில், விவசாய உபகரணங்கள், மரக்கன்றுகள், வனம் மற்றும் உயிரினப் பல்வகைமை குறித்து எழுதப்பட்ட புத்தகங்கள், கற்றல் துணை சாதனங்கள் ஆகியவற்றைப் பெற்றுக் கொடுத்து இளஞ் சந்ததியினரின் மர நடுகைக் குறித்த ஆர்வத்தினை அதிகரிக்கும் நோக்கில் துருஜன மாணவர் வங்கி மரநடுகை இவ்வாண்டிலும் செயற்படுத்தப்பட்டது. இதற்கு இணைவாக, பதுளை மாவட்டத்தில் பண்டாரவளை, பஸ்ஸர, பதுளை, வெலிமடை ஆகிய கல்வி வலயங்களில் உள்ள மிகவும் க்‘டப்பிரதேச பாடசாலைகளுக்கு தேவையான பௌதிக வளங்களைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் வெளிநாட்டுக்குரிய மரக்கன்றுகளை அகற்றி, உள்நாட்டு மர நடுகைகளை பாடசாலை மாணவர்களின் பங்களிப்புடன் ஏற்படுத்தி, அழகான, சூழல் நேயமிக்க பாடசாலைச் சுற்றுச் சூழலொன்றை உருவாக்குவதற்கு எம்மால் 2015ஆம் ஆண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அவ்வாறே, பொலன்னறுவை, செவனபிட்டடி பிரதேசத்தில் 50 ஏக்கரில் தேக்கு மரச்செய்கை 2015ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டதுடன், மேலும் பதுளை, அனுராதபுர, வவுனியா மாவட்டங்களை மையமாகக் கொண்டு தற்போதுள்ள வர்த்த வனப் பயிர்சசெய்கையினை முறையான முகாமைத்துவத்தின் கீழ் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. “வன ரோப்பா” மர நடுகை நிகழ்ச்சித்திட்டத்திற்கு செயற்படு பங்களிப்பினை வழங்குவதற்கு கூட்டுத்தாபனத்தினால் முடிந்துள்ளதுடன், மக்கள் மற்றும் பல்வேறு நிறுவனங்களுக்கு இடையில் மரநடுகை தொடர்பில் உள்ள விருப்பினை அதிகரிக்கச் செய்யும் விரிவுரைத் தொடரொன்றினை நடாத்தியதுடன், கருங்காலி போன்ற பெறுமதிமிக்க அரிய மரக்கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. மேலும், சுற்றாடல், காட்டு மரப் பாதுகாப்பு, உயிரினப் பல்வகைத்தன்மை குறித்து விரிவுரை நடாத்தப்பட்டதுடன், புத்தகங்கள், சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரங்களும் இனங்காணப்பட்ட குழுக்களிடையே, அழிந்துபோகும் அச்சுறுத்தலுக்காளாகி உள்ள கருங்காலி போன்ற பெறுமதிமிக்க மரக்கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. புதிய கண்டுபிடிப்புக்களை சமூகத்தில் முன்வைப்பதற்காக மரக் கூட்டுத்தாபனத்தினால் இவ்வாண்டினுள் ஆராய்ச்சிகள் பலவற்றை மேற்கொள்வதற்கு முடிந்தது.

அவ்வாறே, அமைச்சினால் செயற்படுத்தப்படும் சுற்றாடல் பாதுகாப்பிற்காகவும் சமூக நலனுக்காகவும் ஏற்பாடு செய்யப்பட்ட பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களுக்கு தேசிய பணியாகக் கருதி உச்ச பங்களிப்பினை வழங்க எம்மால் முடிந்தது. நவீன அபிவிருத்தித் திட்டங்களுக்கு பெரும் பங்களிப்பினை வழங்கி மொரகஹகந்த, உமா ஓயா போன்ற பன்னோக்கு நிகழ்ச்சித் திட்டங்களால் நீரில் மூழ்கும் பிரதேசங்களில் உள்ள மரங்களை அகற்றும் நடவடிக்கைக்காக அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் தமது செயற்படு பங்களிப்பினை வழங்கியதுடன், அதன் மூலம் பெரும் தொகையினை தேசிய பொருளாதாரத்திற்கு பெற்றுக் கொடுக்க எம்மால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

பணிப்பாளர் சபை சார்பாக கௌரவ மகாவெலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சரும் மாண்புமிகு ஜனாதிபதி மைத்ரீபால சிறிசேன அவர்களுக்கும், பிரதி அமைச்சர் அனுராத ஜயரத்ன அவர்களுக்கும் அமைச்சின் செயலாளர் மற்றும் அதன் பணிக்குழாதினருக்கும், வனப் பாதுகாப்பு தலைமை அதிபதி அவர்கள் மற்றும் அத்திணைக்களத்துடன் இணைந்துள் எல்லா பணிக் குழாத்தினருக்கும், ஏனைய சகல அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் எமக்கு வழங்கிய பாரிய ஆதரவிற்கு நன்றிகளை மணப்பூர்வமாகத் தெரிவிக்கின்றேன்.  பல்வேறு க்‘டங்களுக்கும் சவால்களுக்கும் மத்தியில் எமது பொது முகாமையாளர் உட்பட பணிக்குழாத்தினர் அவர்களது ஆற்றல் மற்றும் நிபுணத்துவ அறிவைப் பயன்படுத்தி கூட்டுத்தாபனத்தின் செயலாற்றுகையை உயர்ந்த மட்டத்திற்கு இட்டுச் செல்வதற்கு எடுத்தக் கொண்ட பாராட்டுதலுக்குரிய முயற்சிகளுக்காக எனது விசேட நன்றிகளை அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றேன்.

2016̀ புதிய வருடம் சவால்மிக்கதும் உறுதிமிக்கதுமான அபிவிருத்தி இலக்குகளை நோக்கி முன்னேறிச் செல்லக்கூடிய புது வருடமாக நாம் திட்டமிட்டுள்ளதுடன், , குறுகிய கால சவால்களைச் சளைக்காது முகங்கொடுத்து, எதிர்பார்க்கும் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு எமது ஆற்றல்களை உச்ச அளவில் பயன்படுத்தி மிகச் சிறந்த பெறுபேற்றினை அடைவதற்கு அர்ப்பணிப்புடன பணிபுரிய கடப்பாடு



**பி. திசாநாயக்க**

தலைவர் - அரசாங்க மரக் கூட்டுத்தாபனம



## “எல்லா விதத்திலும் எமது அதி சிறந்த அர்ப்பணிப்பினை வழங்குவதனால் நாம் சன்மானத்திற்கு உரியவர்களாவோம்.”



தேசிய வணிக சபையினால் நடத்தப்பட்ட 2014 வியாபார சிறப்பு விருது வைபவத்தின் போது அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் அரசதுறை உற்பத்திக்காக வழங்கப்படும் வெள்ளி விருதினைச் சுவீகரித்துக் கொண்டது.




தேசிய வணிக சபையினால் நடத்தப்பட்ட 2013 வியாபார சிறப்பு விருது வைபவத்தின் போது அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் அரசதுறை உற்பத்திக்காக வழங்கப்படும் சிறப்புத் தேர்ச்சி விருதினைச் சுவீகரித்துக் கொண்டது.






2009 2010 2011

தேசிய வணிக சபையினால் வழங்கப்படும் தங்கச் சன்மானங்களைத் தொடர்ச்சியாக 2009, 2010, 2011 ஆகிய வருடங்களில் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் சுவீகரித்துக் கொண்டது.



- ஹரித்த மெக்கோ விருது 2008 - இலங்கை ஊடகவியலாளர் சங்கம்
- வன மற்றும் சுற்றாடல் கல்விக்கு வழங்கிய பங்களிப்பிற்காக பாரம்பரிய மற்றும் மதிப்பீட்டு மெக்கோ விருது 2010
- 2009 தேசத்தின் மகுடம் கண்காட்சியின் போது மிகவும் ஆக்கபூர்வமான கண்காட்சிக் கூடம்

# பொது முகாமையாளரின் மீளாய்வு



"சாதகமான மற்றும் நெகிழ்வான பணிபுரியும் சூழலை ஏற்படுத்துவது தொடர்பில் எமது கவனத்தை ஏற்கனவே செலுத்தியுள்ளோம். இதன் மூலம், எமது சக ஊழியர்களின் வாழ்க்கை மட்டத்தினை உயர்த்துதல் மற்றும் அவர்களது உடல், உள வளர்ச்சியினை மேம்படுத்துதல் மூலம் வினைத்திறன் மற்றும் விளைபயனை மேல் மட்டத்திற்கு கொண்டு செல்வதற்கு ஆண்டு முழுதும் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன"

அரசாங்க மரக்கூட்டுத்தாபனத்தின் 2015 திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடையும் நிதியாண்டிற்கான ஆண்டறிக்கையை மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களை முன்வைக்க முடிவதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சியடைவதுடன், சந்தையில் 47 வருட அனுபவத்துடன் 2015ஆம் ஆண்டிலும் முன்னைய ஆண்டுகளைப் போன்றே சவால்களுக்கு சளைக்காது முகங்கொடுத்து ஒஉவெற்றிகள் பலவற்றுடன் சிறந்த செயலாற்றுகையைப் பதிவு செய்வதற்கு முடிந்ததை மிகத் திருப்தியுடன் கூறிக்கொள்கின்றேன்.

நாம் மிகப் பெறுமதியான மரத்தாலான பொருட்களை உற்பத்தி செய்து, அப்பொருட்களை நியாயமான விலையில் விற்பனை செய்வதுடன், நிரந்தர வாடிக்கையாளரும் புதிய வாடிக்கையாளரும் எமது சேவை குறித்து மிகத் திருப்தியானது எனகூறுமளவிற்கு உள்ளது. தற்போது அரிமர உற்பத்திக்கு உலகில் உள்ள புதுத் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி, அரிமரம் மற்றும் மரம் சார் பொருட்களை வழங்கும் முன்னோடியாக அரிமர உற்பத்தியினை மேம்படுத்துவதற்கு அரசாங்க மரக்கூட்டுத்தாபனம் மிக முக்கியமான பணியினைத் தொடர்ந்தும் நிறைவேற்றுகின்றது. நாடு முழுதும் வியாபித்திருக்கும் 12 பிராந்திய அலுவலகங்களுடன், 54 விற்பனை நிலையங்கள், 200இற்கும் மேற்பட்ட மரங்களை வெட்டுதல் மேற்கொள்ளும் செயற்படு வேலைத்தளங்கள் மற்றும் மரங்களை பதப்படுத்தும் மற்றும் பரிகரிக்கும் பொறித் தொகுதிகள் ஆகியவற்றினைக் கொண்ட தளபாட உற்பத்தி நிலையங்கள் 03 மற்றும் 06 காட்சியறைகள் ஆகியவற்றை அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் கொண்டுள்ளது.

இலங்கைப் பொருளாதாரம் 2014 ஆம் ஆண்டின் வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2015ஆம் ஆண்டில் 4.8மூஆல் வளர்ச்சி கண்டுள்ளது. அரசின் மத்திய கால பொருளாதார உபாயங்கள் மற்றும் முறைப்படுத்தப்பட்ட பொருளாதார கொள்கைகளைச் செயற்படுத்துவதன் மூலம் நிலயான பொருளாதார அபிவிருத்தியினை அடைந்து கொள்ளும் அரசின் நோக்கங்களை முன்னிலைப்படுத்தியவாறு அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் 2015ஆம் ஆண்டின் போது நோக்கங்கள் மற்றும் கொள்கைகளை முறைப்படுத்தியது. 2014ஆம் ஆண்டில் 3,474 மில்லியன் ரூபாவாகிய வருடாந்த வருமானம் 2015ஆம் ஆண்டின் போது 10.4மூ வளர்ச்சியுடன் 3,836 மில்லியன் ரூபா வளர்ச்சியினை அடைய எம்மால் முடிந்தது. 80மூ அதி உயர் வளர்ச்சியினைஅடைந்தபடி முன்னைய ஆண்டின் 427 மில்லியன் ரூபா வரிக்கு முன்னரான தேறிய இலாபம் இவ்வாண்டினுள் 769 மில்லியன் ரூபாவாக ஈட்டியுள்ளதுடன், தேசிய பொருளாதாரத்திற்கு 1,594 மில்லியன் ரூபா பங்களிப்பினை வழங்கி 370 மில்லியன் ரூபா வரிக்கு பின்னரான இலாபத்தினை இவ்வாண்டில் ஈட்டியுள்ளது. எமது உயர்ந்த உற்பத்தி நியமங்களை மென்மேலும் உறுதிப்படுத்தியவாறு 2015ஆம் நிதி ஆண்டின் போது, தடைகள் பலவற்றை வெற்றி கொள்வதற்கு முடிந்தமை முகாமையினதும் பணிக்குழாத்தினரினதும் அர்ப்பணிப்பின் பெறுபேறு எனக் குறிப்பிட விரும்புகின்றேன்.

பொருளாதாரம் மட்டுமன்றி சுற்றாடல் குறித்து காணப்படும் மானப்பாங்கின் விளைவால், நிலையான அபிவிருத்தியனை நோக்கி அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தை இட்டுச் செல்லும் பாரதூ ரமான பொறுப்பினை சிரமேற்கொண்டு எல்லா செயற்படு நடவடிக்கைகளையும் சுற்றாடல் நேயமிக்கதாக மேற்கொள்வதற்கும், சுற்றாடல் பாதுகாப்பிற்காக 2015ஆம் ஆண்டு பூராகவும் பல்வேறு நிமழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்தி அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் அரசு துறையில் மிகச்சிறந்த நிறுவனமாக மாறியுள்ளது. பொறுப்புமிக்க பிரஜையாக மரநடுகையை மேலும் வலுப்படுத்துவதற்காக 2015ஆம் ஆண்டில் இனங்காணப்பட்ட பாடசாலைகள் பலவற்றிற்கு பொருள் ரீதியாகவும் பண ரீதியாகவும் நன்கொடைகளை வழங்கி, இளஞ் சந்ததியினரின் மர நடுகைக் குறித்த ஆர்வத்தினை அதிகரிக்கும் நோக்கில் துருஜன மாணவர் வங்கி மரநடுகைத் திட்டம் செயற்படுத்தப்பட்டது. மேலும், தேசிய மரநடுகை நிகழ்ச்சிக்காக சிறிய கன்றுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன. அத்துடன், இளஞ் சந்ததியினரின் மரநடுகை தொடர்பில் விருப்பினை அதிகரிப்பதற்காக கருத்தரங்குத் தொடர்கள் நடாத்தப்பட்டதுடன், பெறுமதிமிக்க மரக்கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. இதற்கு மேலதிகமாக பொலன்னறுவை மாவட்டத்தில் கூட்டுத்தாபனத்தின் காணிகளில் செய்யப்பட்ட தேக்கு நடுகை வெற்றிடங்களை நிரப்பும்



விதத்தில் புதிய தேக்கு கன்றுகள் பயிரிடப்பட்டன. சுற்றாடல், வனாந்தரம், அரிமரப் பாதுகாப்பு, உயிரினப் பல்வகைமை ஆகியவை குறித்து விரிவுரைகள் நடாத்தப்பட்டதுடன், சஞ்சிகைகள், புத்தகங்கள், சுவரொட்டிகள், துண்டுப்பிரசுரங்கள் என்பன தெரிவுசெய்யப்பட்ட குழுக்கள் மற்றும் நிறுவனங்களுக்கு இடையில் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இதற்கு மேலதிகமாக, "வன ரோப்பா" மர நடுகை நிகழ்ச்சித்திட்டத்திற்கு செயற்படு பங்களிப்பினை வழங்குவதற்கு கூட்டுத்தாபனத்தினால் முடிந்தது. நிறுவனஞ்சார் சமூக பொறுப்பொன்றாக எமது கூட்டுத்தாபனத்தினால் பட்டதாரி மாணவர்களுக்கு பயிற்சிகள் மற்றும் ஆராய்ச்சிகள் செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினால் நுகர்வோர் கேள்வியின் பிரகாரம் அரிமரத்தினை இனங்காணல் மற்றும் அத்தாட்சிப்படுத்தல் சேவைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்விதமாக, பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களைச் செயற்படுத்தி இலட்சத்திற்கும் மேலான சிறு கன்றுகளைப் பயிர்ச்செய்வதற்காக நாடு முழுதும் பகிர்ந்தளித்து, அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் தமது நோக்கங்களை அடைந்து கொள்ளும் பாரிய பொறுப்பினை மிகச் சிறப்பாக நிறைவேற்றிக் கொண்டது.

சாதகமான மற்றும் நெகிழ்வான பணிபுரியும் சூழலை ஏற்படுத்துவது தொடர்பில் எமது கவனத்தை ஏற்கனவே செலுத்தியுள்ளோம். இதன் மூலம், எமது சக ஊழியர்களின் வாழ்க்கை மட்டத்தினை உயர்த்துதல் மற்றும் அவர்களது உடல், உள வளர்ச்சியினை மேம்படுத்துதல் மூலம் வினைத்திறன் மற்றும் விளைபயனை மேல் மட்டத்திற்கு கொண்டு செல்வதற்கு ஆண்டு முழுதும் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. திறன்கள் மற்றும் மனப்பாங்கினை விருத்தி செய்யும் நோக்கில் பயிற்சிவ ாய்ப்புக்களை வழங்குதல், பல்வேறு பயிற்சிப் பட்டறைகளை ஒழுங்கு செய்தல் மூலம் உயர் சேவை திருப்தியினைப் பெற்றுக் கொடுத்து, கூட்டுத்தாபனத்தின் அபிவிருத்திக்காக ஊழியர்களை நெறிப்படுத்துவதற்கு முகாமையினால் இயலுமாகியது. இலங்கை அரசின் அபிவிருத்தி கொள்கைகளை நிறைவு செய்வதற்கு துணைபுரிந்து 2100ற்கும் மேற்பட்ட எண்ணிக்கையிலான ஊழியர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கி தேசிய பணியாக் கருதி செயற்படுவதற்கு நாம் கடப்பாடு கொண்டோம். நிறுவனத்தின் கொள்கைகள் மற்றும் நோக்கங்களை செயற்படுத்தும் போது ஏற்படும் பிரச்சினைகளுக்கு முகங் கொடுக்கையில் சரியான தீர்மானங்களை உரிய நேரத்தில் எடுத்து தீர்க்கப்பட்ட பல பிரச்சினைகள் நிறுவனத்தின் அகிவிருத்திக்கு ஏதுவாயின. சவால்களுக்கு முன்னால் சளைக்காது நிற்கும் ஆற்றலைக் கொண்ட முகாமைத்துவக் குழு மற்றும் ஊழியர்களும் பணிப்பாளர் சபையின் தீர்மானங்களுடன் இணைந்து சிறப்பாகப் பணிபுரிந்தமை பாராட்டுக்குரியதாகும். ஈற்றில் கூட்டுத்தாபனத்தின் மேம்பாட்டிற்காக தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்படும் தலைவர், செயற்படு பணிப்பாளர் ஆகியோர் உட்பட பணிப்பாளர் சபையினை நான் பெரிதும் பாராட்டுவதுடன், அரிமரம் மற்றும் மரத்தாலான உற்பத்திகளின் வழங்குனராக தொர்ந்தும் எம்மிடம் கடும் பக்கசார்பினைக் காட்டும், எமது வெற்றிக்கு அத்திவாரமாக உள்ள வாடிக்கையாளர் நண்பர்களுக்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், எமது பிணைப்பு மென்மேலும் வலுப்பெற முடியுமான உச்ச முயற்சியுடன் தாங்களுக்கு தரம் மிக்க உற்பத்திகளை வழங்குவதற்கும் நாம் தயாராக இருக்கின்றோம். இதற்கு மேலாக, எமது குறிக்கோள்களையும் நோக்கங்களையும் அடைந்து கொள்வதற்கு முழு அனுசரணையையும் ஆதரவையும் வழங்கிய கௌரவ மகாவெலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சர் அவர்கள், பிரதி அமைச்சர் அவர்கள் மற்றும் அமைச்சின் செயலாளர் அவர்களுக்கு எனது உளங்கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வெற்றிமிக்க பாதை வழியே வேகமானதும் உறுதியானதுமான பயணஞ் செல்ல சளைக்காத ஆதரவை வழங்கும் எனது முகாமைத்துவக் குழுவின் அனைத்து அன்பர்களுக்கும் என்றும் ஆர்வத்துடன் கூடிய அர்ப்பணிப்புடன் செயற்படும் 2,100க்கும் மேற்பட்ட எமது பணிக் குழாத்தினருக்கும் எனது மதிப்பிற்குரிய பாராட்டுதல்களைத் தெரிவிப்பதுடன், 2015ஆம் ஆண்டினை மிக வெற்றிகரமாக நிறைவு செய்துகொள்வதற்கு பல்வேறு விதத்திலும் ஆதரவினை வழங்கிய அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கே. சிறிநிவங்ஷ
பொது முகாமையாளர் -அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

# எமது பொறுப்புக்கள்

காடுகளிலிருந்து மரங்களை வெட்டி அகற்றுதல், அம்மரங்களை அரிமரங்களாகவும் முடிவுப் பொருட்களாகவும் மாற்றுதல், மரக்குற்றிகள், அரிமரங்கள், முடிவுப் பொருட்களை விற்பனை செய்தல் மற்றும் இக்காரியங்களுக்கான காட்டுப் பாதைகளை அமைத்தல்

மரக்குற்றிகளாக்கும் நிலையங்கள், அரியும் ஆலைகள், எண்ணெய் இடுதல் மற்றும் பாதுகாப்புப் பொறித்தொகுதிகள், அரிமரங்களை உலர வைத்தல் மற்றும் உலரவைக்கும் சூளைகள், தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்தல், அமைத்தல், செயற்படுத்துதல்

அரிமர விற்பனை நிலையங்களை நடாத்துதல்

அரிமர உப பொருட்களை உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை

அரிமரங்களை இறக்குமதி செய்தல்

புதிய காடுகளை நடும் செயற்றிட்டங்களை ஆரம்பித்தல், மீள் நடுகைகளை மேற்கொள்ளல், காடு மற்றும் காட்டு நடுகைகளை விஞ்ஞான ரீதியாக முகாமைத்துவம் செய்தல்

விவசாய உற்பத்திகள்

அரிமரம் தொடர்பான முடிவுப் பொருட்கள் மற்றும் அரை முடிவுப் பொருட்கள் உற்பத்திகளை ஏற்றுமதி செய்தல்

தனியார் காணிகளிலிருந்து மரங்களைக் கொள்வனவு செய்தல்

காடு சார்ந்த உற்பத்திகளைப் பதனஞ் செய்தல்

பிரம்புகளை இறக்குமதி செய்தல்

மாதிரிகளைப் பரீட்சிப்பதன் மூலம் உள்நாட்டு மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட அரிமரங்களை இனங் காணல் மற்றும் அரிமரச் சான்றிதழ்களை வழங்கல்

அரிமரக் கைத்தொழில் சார்ந்த விடயங்கள் பற்றிய பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல், சான்றிதழ்கள் வழங்குதல், சுற்றாடல் தொடர்பான அறிவுறுத்தல் நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தல்

கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டடங்களின் முழுப் பயனையும் பெற்றுக் கொள்வதற்காகத் திட்டமிடல் மற்றும் அதற்கு முதலீடு செய்தல்

# எமது வர்த்தகப் பெறுமானங்கள்

- சூழல் நேயம் மிகுந்த மற்றும் வர்த்தக ரீதியாக வெற்றிகரமாகச் செயற்படக்கூடிய அரசாங்கத்துறை நிறுவனமொன்றாக எமது நிலைப்பாட்டைப் பேணுவது எமது முதன்மையான பொறுப்பு என இனங்கண்டுள்ளோம்.
- சுத்தமான மற்றும் ஆரோக்கியமான சூழலைப் பாதுகாப்பதற்கு காடுகள் மற்றும் அரிமரங்களை அகற்றும் விஞ்ஞான ரீதியான முகாமைத்துவம் தொடர்பான அனைத்து நியதிச்சட்ட ஒழுங்குவிதிகளுக்கு அமைய அவற்றை நிறைவேற்றுவதற்கு நாம் கடமைப்பட்டுள்ளோம்.
- எமது வாடிக்கையாளர்களுடன் நேர்மையான வர்த்தகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டு, அவர்களுக்கும் அனைத்து இலங்கையர்க்கும் பெறுமதிகளை உருவாக்குதல் எமது நிலைப்பாட்டின் முதன்மைக் காரணி என நாம் எற்றுக் கொண்டுள்ளோம்.
- திறன்களின் வளர்ச்சி, தொழில் அபிவிருத்தி, தொடர்ச்சியான கல்வி மற்றும் பயிற்சி ஆகியவற்றால் எமது ஊழியர்களின் விளைபயன் மட்டத்தை மேம்படுத்துவதற்கு செயற்படுகின்றோம்.
- எமது வாடிக்கையாளர்களுக்கு வினைத்திறன் மற்றும் நேர்மையான சேவையை வழங்குவதற்கு எமது எல்லா காரியங்களிலும் அவர்களை முதன்மைப்படுத்தி செயற்படுகின்றோம்.
- எமது அனைத்து செயற்பாடுகளின் போதும் மற்றும் சேவைகளை வழங்கும் போதும் தனிப்பட்ட விசுவாசத்தினை உயர் மட்டத்தில் பேணுவதாக உறுதிப்படுத்துகின்றோம்.
- எமது எதிர்கால சந்ததியினரின் பெறுமதிமிக்க தேசிய மரபுரிமைகளான சூழல் மற்றும் வன வளங்களைப் பாதுகாத்தலும் விருத்தி செய்தலும் தொடர்பான அனைத்து நியதிச்சட்ட ஒழுங்குவிதிகளையும் சமூக விழுமியங்களையும் பின்பற்றுகின்றோம்.



# பணிப்பாளர் சபை - 2015



**பி. திசாநாயக்க**
தலைவர் - அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்




**எச்.வை.ரீ. பவரகுமார**
செயற்படு பணிப்பாளர்-அரசாங்க மரக்



**எம்.ஏ. கருணாரத்ன**
பணிப்பாளர் (திறைசேரிப் பிரதிநிதி)



**எஸ்.ஏ.ஏ. சத்துருசிங்க**
பணிப்பாளர் (வனப் பாதுகாப்பு ஜெனரல்)



**எம்.வீ.கருணாரத்ன**
பணிப்பாளர்




**பி. பன்சலவத்த**
பணிப்பாளர்



**ஏ.எம்.சீ. பெரேரா**
பணிப்பாளர்

# சிரேஷ்ட முகாமைத்துவக் குழு - 2015



கே. சிறிநிவங்' | பொது முகாமையாளர்

டீ.யூ. தயாரத்ன | பிரதிப் பொது முகாமையாளர் (தகவல் தொழில்நுட்பம்)

கலாநிதி என். ருவன்பத்திரண | பிரதிப் பொது முகாமையாளர் (ஆராய்ச்சி, பயிற்சி, அபிவிருத்தி)

எச்.பி.எஸ். நவரத்ன | பிரதிப் பொது முகாமையாளர (இயக்குதல்)

டப்ளியூ.டப்ளியூ.எம்.ஜே. குரே | பிரதிப் பொது முகாமையாளர் (உள்ளகக் கணக்காய்வு)

ஜீ.டீ.எஸ். குமாரசிங்க | பிரதிப் பொது முகாமையாளர் (நிதி)


பி.ஜீ.ஆர். சமரவீர | பிரதிப் பொது முகாமையாளர் (விற்பனை)



**எஸ்.எஸ். பண்டுவாவல**
உ. பொது முகாமையாளர்



**எம்.சீ. தேவேந்திர**
உ. பொது முகாமையாளர்



**ஜீ. குணவங்'**
உ. பொது முகாமையாளர்

*“ தடைகளை வெற்றி கொண்டு எழுந்து நிற்கும் எல்லா சந்தர்ப்பங்களிலும் உண்மையான அர்ப்பணிப்பு மற்றும் நவீனமயப்படுத்தல் மூலம் நிறைவை நோக்கி நடை போடுவோம்.”*



# முதலாவது அத்தியாயம்

*கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களையும் இலக்குகளையும் அடையும் ஆர்வத்தில் மற்றும் எதிர்பார்க்கப்பட்ட பணப்பாய்ச்சலை அடைந்து நிதி ரீதியாக சக்திமிக்க நிறுவனம் என்பதை உறுதிப்படுத்தும் நோக்கில் புதிய வாய்ப்புக்கள், புதிய கருத்துக்கள் மற்றும் செய்யவேண்டிய மாற்றங்கள் தொடர்பில் இடையறாது கவனஞ் செலுத்தப்படும்.*



## 2015ஆம் ஆண்டிற்கான பணிப்பாளர் சபை மீளாய்வு

இவ்வாண்டில் கூட்டுத்தாபனத்தால் 3,836 மி. ரூபா மொத்த விற்பனையொன்றினை அடையப் பெற்றுள்ளதுடன், (கடந்த வருடத்தில் மொத்த விற்பனை 2,474 மி.ரூ.) அதனைக் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 10மூ அதிகரிப்பாகும். கடந்த வருடத்தின் மொத்த இலாபம் 1,453 மி.ருபா என்பதுடன், இவ்வருடத்தின் மொத்த இலாபம் 1,757 மி.ரூபாவாகும். அதனைக் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 21மூ அதிகரிப்பாகும். 2015ஆம் ஆண்டில் கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் உயர் மொத்த விற்பனையினை அடைந்து கொள்வதற்கு அறிமுகப்படுத்தப்பட்ட புதிய கொள்கைகள், பொருளாதார நிலைமைகள், அரசியல் காரணிகள் என்பன ஏதுவாகிதுடன், அதன் மூலம் கூட்டுத்தாபனத்தின் இலாபம் மற்றும் செயலாற்றுகையில் அதிகரிப்பு ஏற்படுவதிலும் நேரடியாகத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.


*கடந்த ஆண்டின் 427 மி.ரூபா திறைசேரி மற்றும் வருமான வரிகளுக்கு முன் தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் திறைசேரி மற்றும் வருமான வரிகளுக்கு முன் தேறிய இலாபம் 769 மி.ரூபா வரை 342 மி.ரூபாலால் அதிகரித்துள்ளது. நிறுவன மற்றும் நிர்வாக, விற்பனை மற்றும் விநியோகச் செலவினங்கள் 1,284 மி.ரூபா வரை குறைவடைந்துள்ளதுடன் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் அது 2மூ குறைவாகும்.*


| செயலாற்றுகை | 2015 மி. ரூ. | 2014 மி. ரூ. |
|---|---|---|
| மொத்த விற்பனை | 3,836 | 3,474 |
| இலாபம் | 1,757 | 1,453 |
| ஏனைய செயற்படு வருமானங்கள் | 73 | 60 |
| செயற்படு இலாபம் | 546 | 204 |
| செயற்பாடற்ற இலாபம் | 223 | 223 |
| திறைசேரிக்கு செலுத்திய விசேட வரி | 50 | 25 |
| திறைசேரி மற்றும் வருமான வரிகளுக்கு முன் இலாபம் | 769 | 427 |


கடந்த ஆண்டின் 427 மி.ரூபா திறைசேரி மற்றும் வருமான வரிகளுக்கு முன் தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் திறைசேரி மற்றும் வருமான வரிகளுக்கு முன் தேறிய இலாபம் 769 மி.ரூபா வரை 342 மி.ரூபாலால் அதிகரித்துள்ளது. நிறுவன மற்றும் நிர்வாக, விற்பனை மற்றும் விநியோகச் செலவினங்கள் 1,284 மி.ரூபா வரை குறைவடைந்துள்ளதுடன் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் அது 2மூ குறைவாகும்.


கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் நிறுவன மற்றும் நிர்வாகச் செலவினங்களில் குறைவினைக் காண முடிந்ததுடன், குறிப்பிட்ட வருடத்தில் நிறுவன மற்றும் நிர்வாகச் செலவினங்கள் 5மூஆல் குறைவடைந்துள்ளது. 2015 ஆம் ஆண்டில் நிறுவன மற்றும் நிர்வாகச் செலவினங்கள் மற்றும் விற்பனைகளுக்கும் விநியோகித்தலுக்குமான செலவினங்களை குறைத்ததன் பின்னர் விசேட திறைசேரி வரி மற்றும் வருமான வரிக்கு பின்னரான தேறிய இலாபம் 370 மில்லியன் ரூபாவாகும். அது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 164 மில்லியன் ரூபா அதிகரிப்பாகும்.

சொத்துக்கள் மீதான நன்மைகள் வீதம் மற்றும் உரிமைப்பங்கு மீதான நன்மைகள் வீதம் 2014ஆம் ஆண்டின் போது முறையே 6மூ மற்றும் 9மூ ஆகும்.












| ஆண்டு | சொத்துக்கள் மீதான நன்மைகள் வீதம் | உரிமைப்பங்கு மீதான நன்மைகள் வீதம் |
|---|---|---|
| 2015 | 6% | 9% |
| 2014 | 4% | 6% |

2015ஆம் ஆண்டில் அரச வருமானத்திற்கு கூட்டுத்தாபனத்தின் பங்களிப்பு 1,594 மி.ரூபாவாகும். கடந்த ஆண்டில் அது 1,396 மி.ரூபாவாகும்.




## உற்பத்தி

### அரச காடுகளிலிருந்து அரிமரங்களை வெட்டுதல்

வனப் பாதுகாப்பு திணைக்களத்தின் மூலம் வன முகாமைத்துவ திட்டத்திற்கு ஏற்ப வெட்டுவதற்காக தேக்கு, பைனஸ், யூகலிப்டஸ் போன்ற காட்டு மரங்கள் விடுவிக்கப்பட்டுள்ளதுடன், 2014 மற்றும் 2015ஆம் ஆண்டுகளில் வெட்டுவதற்கு விடுவிக்கப்பட்டுள்ள ஹெக்டேயர் அளவு மேலே குறித்துக் காட்டப்பட்டுள்ளது.

| மர வகை | முற்றாக வெட்டுதல் ( ஹெக்டேயர்) | | மெல்லியதாக்குதல் (ஹெக்டேயர்) | |
|---|---|---|---|---|
| | 2015 | 2014 | 2015 | 2014 |
| தேக்கு | 444.9 | 538.0 | 221.70 | 382.3 |
| யூகலிப்டஸ் | 40.3 | 20.0 | 272.54 | 98.0 |
| பைனஸ் | 104.6 | 136.3 | - | - |
| காயா | - | - | 45.20 | - |
| எக்கேசியா | 16.0 | 9.0 | - | 6.5 |

### வெட்டிய மரங்களை மரத்துண்டங்களாக்குதல்

2014ஆம் வருடத்தில் மரத்துண்டங்கள் உற்பத்தி 4,239 கன மீற்றருக்கு ஒப்பாக 2015 ஆம் வருடத்தில் 4,562 கன மீற்றர் மரத்துண்டங்கள் அரியும் ஆலைகள் மூலம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதுடன், நாடு முழுதும் உள்ள அரிமர விற்பனைக் களஞ்சியசாலைகளிலிருந்து 3,124 கன மீற்றர் மரத்துண்டங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

### மின்கம்பங்கள் மற்றும் சிலிப்பர் கட்டைகளைப் பரிகரித்தல்

2015ஆம் வருடத்தில் 21,919 சிலிப்பர் கட்டைகள், 21,636 மின்கம்பங்கள், 76,061 யானை வேலிக் கம்பங்கள் என்பன அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் கல்தமுல்லை, கெப்பெட்டிபொலை, பூசா ஆகிய பரிகரிப்பு நிலையங்களில் பரிகரிப்பு செய்யப்பட்டுள்ளன. கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் 2015ஆம் ஆண்டில் யானை வேலிக் கம்ப உற்பத்தியில் குறிப்பிடத்தக்க அளவு அதிகரிப்பு காணப்பட்டது.

### தளபாட உற்பத்தி

அரசாங்க மரக கூட்டுத்தாபனத்தின் அம்பாறை, கல்தமுல்லை, பூசா ஆகிய தளபாட உற்பத்தி நிலையங்களிலிருந்து 255.6 மில்லியன் ரூபா பெறுமதியான தளபாடங்கள் மீளாய்வாண்டில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. அத்துடன் 264 மில்லியன் ரூபா பெறுமதிமிக்க தளபாடங்கள் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் இரத்மலானை, கண்டி, இரத்தினபுரி, தலல்ல, பூசா, அம்பாறை தளபாட காட்சியறைகளிலிருந்து விற்பனை செய்யப்பட்டுள்ளன.

## 2014 - 2015 ஆம் வருடங்களில் உற்பத்தி, விற்பனை, வருமானம்


| | | உற்பத்தி அளவு | | விற்பனை அளவு | | மொத்த விற்பனை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 2015 | 2014 | 2015 | 2014 | 2015 | 2014 |
| குற்றிகள் | க.மீ. | 126,465 | 131,162 | 127,424 | 118,231 | 2,889.9 | 2,336.8 |
| மரத்துண்டங்கள் | க.மீ. | 4,562 | 4,239 | 3,124 | 2,567 | 266.8 | 185.4 |
| சிலிப்பர் கட்டைகள் | அலகு | 21,919 | 39,389 | 27,727 | 64,761 | 247.5 | 568.7 |
| மின்கம்பங்கள் | அலகு | 21,636 | 41,332 | 25,637 | 32,567 | 259.6 | 314.0 |
| யானை வேலிக் கம்பங்கள | அலகு | 76,061 | 38,630 | 81,025 | 36,088 | 250.6 | 104.5 |
| வேலிக் கம்பங்கள் | அலகு | 89,927 | 126,333 | 88,074 | 126,130 | 10.7 | 12.8 |
| விறகு | க.மீ. | 87,159 | 105,537 | 86,541 | 102,301 | 56.1 | 47.0 |
| வேலிக் கம்பங்கள் | அலகு | 65,748 | 110,254 | 73,179 | 116,635 | 9.6 | 9.8 |






## எமது சேவைகள் கிடைக்கும் இடங்கள்

12 பிராந்திய அலுவலகங்கள், நாடு முழுதும் செயற்படும் 54 அரிமர விற்பனைக் களஞ்சியசாலைகள், கல்தமுல்லை, அம்பாறை, பூசா ஆகிய இடங்களில் 03 தளபாட உற்பத்தி நிலையங்கள், கண்டி, இரத்தினபுரி, தலல்ல, அம்பாறை, கல்தமுல்லை, பூசா ஆகிய இடங்களில் 06 தளபாட காட்சியறைகள், கெப்பெட்டிபொல, கல்தமுல்லை, பூசா ஆகிய இடங்களில் 03 அரிமரப் பதனிடல் பொறித்தொகுதிகள், அம்பாறை, கண்டி, பூசா, கல்தமுல்லை, இரத்மலானை, தலல்ல ஆகிய இடங்களில் 06 மர ஆலைகள், பண்டாரவளையில் 04 மர ஆலைகள், இரத்தினபுரியில் 02 மர ஆலைகள், கெப்பெட்டிபொலவில் 04 மர ஆலைகள், குருணாகலையில் 02 மர ஆலைகள் எனச் செயற்படும் வீததத்தில், நாட்டின் அனைத்து பாகங்களும் உட்படுமாறு நாட்டின் சகலருக்கும் எமது சேவைகள் கிடைக்கும் விதத்தில் எமது நிர்வாகக் கட்டமைப்பு மிகவும் சிறப்பாகத் திட்டமிடப்பட்டுள்ளது.




## அம்பாறைப் பிராந்தியம்




மட்டக்களப்பு விற்பனை நிலையம்
பதியதலாவ விற்பனை நிலையம்
அம்பாறை பிராந்திய அலுவலகம்
அம்பாறை விற்பனை நிலையம்
அம்பாறை அரிமர ஆலை
அம்பாறை காட்சியறை




## அனுரதாபுரப் பிராந்தியம்



வவுனியா விற்பனை நிலையம்
மதவாச்சி விற்பனை நிலையம்
அனுராதபுரப் பிராந்திய அலுவலகம்
அனுராதபுர விற்பனை நிலையம்
தலாவ விற்பனை நிலையம்



## பண்டாரவளைப் பிராந்தியம்



பொரலந்த விற்பனை நிலையம்
பண்டாரவளைப் பிராந்திய நிலையம்
பண்டாரவளை அரிமர ஆலை






## கொழும்புப் பிராந்தியம்



நைனாமடம விற்பனை நிலையம்
மீரிகம விற்பனை நிலையம்
கடவத்தை விற்பனை நிலையம்
ஒருகொடவத்தை விற்பனை நிலையம்
கொழும்புப் பிராந்திய அலுவலகம்
பன்னிப்பிட்டி விற்பனை நிலையம்
பிலியந்தலை விற்பனை நிலையம்
கல்தமுல்லை புதிய விற்பனை நிலையம்
கல்தமுல்லை விற்பனை நிலையம்
கல்தமுல்லை அரிமர ஆலை
இரத்மலானை விற்பனை நிலையம்
இரத்மலானை காட்சியறை
இரத்மலானை அரிமர ஆலை
எகொடஉயன விற்பனை நிலையம்
மொறட்டுமல்ல விற்பனை நிலையம்
வில்லேதரவத்த விற்பனை நிலையம்



## யாழ்ப்பாணப் பிராந்திய நிலையம்



யாழ்ப்பாணப் பிராந்திய அலுவலகம்
யாழ்ப்பாண விற்பனை நிலையம்
நல்லூர் விற்பனை நிலையம்
கிளிநொச்சி விற்பனை நிலையம்




## கண்டிப் பிராந்திய அலுவலகம்



தம்புளு ஓய விற்பனை நிலையம்
மாத்தளை விற்பனை நிலையம்
பல்லேகலே விற்பனை நிலையம்
கண்டிப் பிராந்திய அலுவலகம்
கண்டி காட்சியறை
நெலுந்தெனிய விற்பனை நிலையம்
எத்கல விற்பனை நிலையம்
எத்கல அரிமர ஆலை




## குருணாகலைப் பிராந்திய நிலையம்




## மொணறாகலைப் பிராந்தியம்





## மாத்தறைப் பிராந்தியம்








## நுவரெலியா பிராந்தியம்




## பொலன்னறுவைப் பிராந்தியம்




## இரத்தினப்புரிப் பிராந்தியம்



## இலக்குகள் மற்றும் இலக்குகளை அடைதல் தொடர்பான மீளாய்வு மற்றும் கண்காணிப்பு

தலைவரின் தலைமைத்துவத்தின் கீழ் மற்றும் அனைத்து பிராந்திய முகாமையாளர்கள், கூட்டுத்தாபனத்தின் சிரே'ட முகாமையாளர்களின் ஒத்துழைப்புடன் மாதாந்தம் முகாமைத்துவக் கூட்டங்கள் நடத்தப்படுவதுடன், அதில் உண்மையான செயலாற்றுகை, உற்பத்தி மற்றும் விற்பனை இலக்கு ஆகியவற்றுடன் ஒப்பிடப்பட்டு நோக்கப்படும். இக்கூட்டங்களில் அனைத்து தடைகளும் பிரச்சினைகளும் உரிய பிராந்திய முகாமையாளர்களுடன் கலந்துரையாடப்பட்டு இனங்காணப்படுவதுடன், அவை சம்பந்தமாக பல்வேறு தீர்மானங்கள் மற்றும் மாற்றீட்டு செயன்முறைகள் முன்மொழியப்பட்டு, பின்னர் அக்கருத்துக்கள் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டு செயற்படுத்தப்படும். மேலும், கூட்டுத்தாபனத்தின் இலக்குகள் மற்றும் இலக்குகளை அடைவதற்கான நெறிமுறைகள் மற்றும் எதிர்பார்க்கப்படும் பணப்பாய்ச்சல் ஆகியவற்றை அடைந்து நிதி சார் ஆற்றல்மிகு நிறுவனமாக உறுதிப்படுத்தும் இலக்காக புது சந்தர்ப்பங்கள், புது கருத்துக்கள், மேற்கொள்ளவேண்டிய மாற்றங்கள் சம்பந்தமாகவும் கலந்துரையாடப்படும்.

பணிப்பாளர் சபை சார்பாக ஒப்பமிடப்பட்டது.

**பி. திசாநாயக்க**
தலைவர் , அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்



**நாட்டின் அனைத்து பாகங்களும் உட்படுமாறு நாட்டின் சகலருக்கும் எமது சேவைகள் கிடைக்கும் விதத்தில் எமது நிர்வாக வலையமைப்பு மிகவும் சிறப்பாகத் திட்டமிடப்பட்டுள்ளது.**



# அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கமிட்டியின் அறிக்கை - 2015

## அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கமிட்டியின் உறுப்பினர்கள் - 2015

| | |
|---|---|
| திரு. எம்.ஏ. கருணாரத்ன | - கமிட்டித் தலைவர் |
| திரு.எஸ்.எஸ்.ஏ. சத்துருசிங்க | - கமிட்டி உறுப்பினர் |
| திரு. எம்.வீ. கருணாரத்ன | - கமிட்டி உறுப்பினர் |

2015ஆம் ஆண்டிற்குரிய கீழ்வரும் விடயங்கள் உரிய கூட்டங்களில் கலந்துரையாடப்பட்டிருப்பதுடன், அவற்றில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பணிப்பாளர் சபையின் அனுமதிக்காக பரிந்துரைகளுடன் முன்வைக்கப்பட்டுள்ளன.

1. மாதாந்த நிதி மற்றும் பௌதிக செயலாற்றுகை
2. வருடாந்த கணக்குகள்
3. வருடாந்த பாதீடு மற்றும் திருத்தப்பட்ட பாதீடு
4. உள்ளகக் கணக்காய்வு மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் கணக்காய்வு விசாரணைகளும் பதில்களும்
5. பணிக்குழாம் மற்றும் நிர்வாக விடயங்கள்
6. சட்ட நடவடிக்கைகள்
7. ஊழியர் கடன்கள், முற்பணம் மற்றும் விலைமனு கோரல்கள் வழங்குதல்

**திரு. எம்.ஏ. கருணாரத்ன**
AMC
தலைவர் - கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கமிட்டி



# இரண்டாவது அத்தியாயம்

*பணப்பாய்ச்சல், நிதி சார் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், மூலதனச் செலவினங்கள், இலாபங்கள் என்பன அடங்கும். கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்திருக்கும் இலாபங்கள் மற்றும் செலவினங்கள் ஆகியவற்றைக் காட்டும் சுட்டிகள் மூலம் முதலீட்டுத் திட்டங்கள், செயற்படு திட்டங்கள் என்பன பொருத்தமான நிதி கட்டுப்பாட்டுக்குள் அமைந்தன என்பது சான்று பகரப்படுகின்றது.*



# நிதி மற்றும் உற்பத்திச் செயலாற்றுகை

**கடந்த அறிக்கையின் படி ஐந்து வருட கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைப்பாட்டை பேணுவதற்கான நிதி நிலைமையை மேம்படுத்தல் தொடர்பான சுருக்கம்.**

*கடந்த சில வருடங்களுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டினுள் நிதி தொடர்பாக கிடைத்துள்ள முன்னேற்றத்தின் மூலம் கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைப்பாடு மற்றும் உறுதிநிலை தொடர்பில் எதிர்காலத்திற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது உறுதிபடுத்தப்படுகின்றது.*


ஐந்து வருடங்களுள் நிதிச் செயலாற்றுகையின் சுருக்கம், பணப்பாய்ச்சல், நிதி சார் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், மூலதனச் செலவினங்கள், இலாபங்கள் என்பனவற்றைக் கொண்டுள்ளது. கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்திருக்கும் இலாபங்கள் மற்றும் செலவினங்கள் ஆகியவற்றைக் காட்டும் சுட்டிகள் முதலீட்டுத் திட்டங்கள், செயல் திட்டங்கள் என்பன பொருத்தமான நிதி கட்டுப்பாட்டுக்குள் அமைந்தன என்பதற்கு சான்று பகர்கின்றன. கடந்த சில வருடங்களுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டினுள் நிதி தொடர்பாக கிடைத்துள்ள முன்னேற்றத்தின் மூலம் கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைப்பாடு மற்றும் உறுதிநிலை தொடர்பில் எதிர்காலத்திற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது உறுதிபடுத்தப்படுகின்றது.

மேலும், நிதிப் பிரிவில் மற்றும் செயற்பாட்டுப் பிரிவில் அனைத்து நோக்கங்களையும் நிறைவேற்றிக்கொள்வதன் மூலம் நிறுவன ரீதியான திட்டத்தின் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.




## வருமான வளரச்சிப் போக்குப் பகுப்பாய்வு

வரியுடன் (ரூ '000)





வரியின்றி (ரூ '000)





## இலாப வளர்ச்சிப் போக்குப் பகுப்பாய்வு


மொத்த இலாபம் (ரூ '000)




வருமானம் மற்றும் திறைசேரி வரி செலுத்துவதற்கு முன்னரான தேறிய இலாபம் (ரூ '000)





செயற்பாட்டு இலாபம் (ரூ '000)





## உற்பத்தி வளர்ச்சியடையும் போக்குப் பகுப்பாய்வு

குற்றிகள் உற்பத்தி (க.மீ.)





மரத்துண்டங்கள் உற்பத்தி (க.மீ.)








சிலிப்பர் கட்டைகள் உற்பத்தி (அலகு)





மின்மாற்றிக் கம்பங்கள் உற்பத்தி (அலகு)





தளபாட உற்பத்தி (மில்லியன் ரூ.)






யானைவேலிக் கம்பங்கள் உற்பத்தி (அலகு)




## பெறுமதி கூட்டல்



## மூலதன முதலீடு - 2015

| விபரம் | Rs. |
|---|---|
| உதவிப் பிராந்திய முகாமைத்துவ அலுவலகம் - | 10,210,054 |
| பொலன்னறுவைஉத்தியோகப்பூர்வ மனை – நுவரெலியா பிராந்தியக் காரியாலயம | 14,787,684 |
| உத்தியோகப்பூர்வ மனை – கந்தபொல | 11,437,881 |
| கங்காணியமுல்ல களஞ்சியம் மற்றும் உதவிப் பிராந்திய முகாமைத்துவ | 13,822,991 |
| அலுவலகம் | 8,583,796 |
| இரத்மலானை பிராந்திய முகாமைத்துவ அலுவலகம | 8,287,497 |
| இரத்தினபுரி தேல்ல களஞ்சியசாலைக் கட்டடம் | 15,690,000 |
| Cat - 03 பொலன்னறுவை | 15,690,000 |
| மொணறாகலை Log loader இயந்திரம் | 5,579,911 |
| Wide belt sander holytek - s2da கல்தேமுல்லை தளபாட உற்பத்தி நிலையம் | 7,709,007 |
| Wood mizer பண்டாரவளை | 20,400,000 |
| Toyota 4wd double cab - 3 nos. | 9,125,000 |
| Isuzu - mu - x 400 d jeep | 24,000,000 |
| Mistubishi l200 double cab - 4 nos. | 13,600,000 |
| Toyota hilux 4wd cab - 2 nos. | |

## முதலீடு

| | 31-12-2015 ரூபா | 31-12-2014 ரூபா |
|---|---|---|
| அரச நிறுவனங்களில் தற்காலிக மேலதிக நிதியக் | 382,550,525 | 360,226,630 |
| மக்கள் வங்கி | 738,673,524 | 696,410,412 |
| காணி நிரப்பல் மற்றும் அபிவிருத்தி செய்யும் சபை | 500,000 | 500,000 |
| இலங்கை வங்கி | 1,238,592,415 | 877,910,713 |
| அரச ஈட்டு, முதலீட்டு வங்கி | 140,049,121 | 130,485,324 |
| **மொத்தம்** | 2,500,365,585 | 2,065,533,079 |



## ஒரு தசாப்தத்திற்கான தகவல்கள்

| (முழுமையான பெறுமானங்கள்) | | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| முழு வருடாந்த வருமானம் | ரூபா '000 | 2,106,155 | 2,531,611 | 2,986,925 | 3,445,141 | 3,616,164 | 3,103,744 | 3,563,390 | 3,213,547 | 3,756,482 | 4,132,052 |
| வருடாந்த மொத்த இலாபம் | ரூபா '000 | 966,095 | 1,050,896 | 1,210,845 | 1,351,695 | 1,365,285 | 1,237,640 | 1,546,107 | 1,197,518 | 1,453,451 | 1,757,114 |
| வட்டி, வருமான வரிகளுக்கு முன்னர் தேறிய இலாபம் | ரூபா '000 | 480,641 | 488,535 | 647,039 | 810,612 | 877,623 | 603,499 | 801,681 | 382,337 | 427,222 | 768,699 |
| மொத்த ஊழியர் ஆகுசெலவு | ரூபா '000 | 774,751 | 841,831 | 852,879 | 898,652 | 901,910 | 953,498 | 1,065,052 | 1,117,036 | 1,254,516 | 1,449,746 |
| வருடாந்த மூலதனச் செலவினங்கள் | ரூபா '000 | 13,523 | 95,745 | 141,327 | 112,909 | 237,332 | 180,546 | 162,509 | 332,870 | 115,132 | 244,929 |
| வருட இறுதியில் நடைமுறையற்ற சொத்துக்கள் | ரூபா '000 | 1,579,613 | 1,338,570 | 1,523,553 | 1,793,467 | 1,801,988 | 1,739,893 | 1,479,880 | 1,658,535 | 1,654,908 | 1,743,579 |
| வருட இறுதியில் நடைமுறைச் சொத்துக்கள் | ரூபா '000 | 962,569 | 1,545,428 | 1,407,022 | 2,079,543 | 2,341,020 | 2,177,892 | 2,929,185 | 3,153,777 | 4,004,860 | 4,115,259 |
| வருட இறுதியில் நடைமுறைப் பொறுப்புக்கள் | ரூபா '000 | 528,005 | 690,558 | 455,460 | 1,028,979 | 1,034,258 | 497,229 | 804,102 | 1,050,258 | 1,591,991 | 1,480,965 |
| வருட இறுதியில் நடைமுறையற்ற பொறுப்புக்கள் | ரூபா '000 | 341,581 | 370,816 | 362,399 | 364,553 | 399,057 | 399,953 | 409,030 | 384,831 | 484,649 | 424,853 |
| வருட இறுதியில் உரிமைப் பங்கு | ரூபா '000 | 1,672,595 | 1,822,624 | 2,112,716 | 2,479,478 | 2,709,694 | 3,020,602 | 3,195,933 | 3,377,223 | 3,583,129 | 3,953,019 |
| ஒன்றிணைந்த நிதியத்திற்கான பங்களிப்பு | ரூபா '000 | 75,000 | 150,000 | 75,000 | 50,000 | 413,490 | 75,000 | 600,000 | 50,000 | 25,000 | 50,000 |
| வருட இறுதியில் ஊழியர் எண்ணிக்கை | எண்ணிக்கை. | 2,751 | 2,634 | 2,499 | 2,457 | 2,346 | 2,267 | 2,187 | 2,139 | 2,186 | 2,145 |
| வருட இறுதியில் மேலதிக நிதிய முதலீட்டு மீதி | ரூபா '000 | 1,267,102 | 834,037 | 777,101 | 858,717 | 605,235 | 764,328 | 298,546 | 338,010 | 360,227 | 382,550 |
| **பிரதான செயற்படு சுட்டிகள** | | | | | | | | | | | |
| உரிமைப் பங்கிற்கான வருமான வரிக்கு முன்னர் தேறிய இலாபம் | % | 28.74 | 26.80 | 30.63 | 32.69 | 32.39 | 19.98 | 25.08 | 11.32 | 11.92 | 19.45 |
| மொ. சொத்துக்களுக்கான வட்டி, வரிக்கு முன்னர் தேறிய இலாபம் | % | 18.91 | 16.94 | 22.08 | 20.93 | 21.18 | 15.40 | 18.18 | 7.94 | 7.55 | 13.12 |
| நடைமுறை வீதம் | முறைகள | 1.82 | 2.24 | 3.09 | 2.02 | 2.26 | 4.38 | 3.64 | 3.00 | 2.52 | 2.78 |
| ஊழியர் ஒருவருக்கான ஊழியச் செலவு | ரூபா '000 | 282 | 320 | 341 | 366 | 384 | 421 | 487 | 522 | 574 | 676 |
| உரிமைப்பங்கிற்கான சொத்துக்களின் வீதம் | முறைகள | 1.52 | 1.58 | 1.39 | 1.56 | 1.53 | 1.30 | 1.38 | 1.42 | 0.63 | 0.67 |
| சொத்துக்களின் மீதான பங்கிலாப வீதம் | % | 18.91 | 16.94 | 22.08 | 20.93 | 21.18 | 15.40 | 18.18 | 7.94 | 7.55 | 13.12 |
| மொத்த விற்பனை வளர்ச்சி | % | 37.74 | 20.20 | 17.99 | 15.34 | 4.96 | (14.17) | 14.81 | (9.82) | 16.89 | 10.08 |



# தேசிய பொருளாதாரத்திற்கு அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் பங்களிப்பு

நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்காக புதிய உற்பத்திகளை உருவாக்குவதற்கும், விளைபயன்மிக்கதாக மூலதன மற்றும் நிபுணத்தவ பாவனைக்கு உந்துதல் அளிப்பதற்கும் புதிய பொருட்கள் மற்றும் சேவைகள் உற்பத்தி உபாயங்களை அறிமுகப்படுத்தி சந்தையினை விருத்தி செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்கின்றது.

# தேசிய பொருளாதாரத்திற்கு அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் பங்களிப்பு

அரிமரத் தொழிற்றுறையின் முதன்மையாளர் என மிளிரும் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்காக அளப்பரிய சேவையினை நிறைவேற்றுகின்றது. அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் அரிமரத் தொழிற்றுறையின் முன்னேற்றத்திற்காக மட்டுமன்றி, ஏனைய துறைகளின் முன்னேற்றத்திற்காகவும் முக்கியமான பொறுப்பினை நிறைவேற்றுகின்றது. 2015ஆம் ஆண்டில் 1,594 மி.ரூபா உரிமைப்பங்கு, கூட்டப்பட்ட பெறுமதி மீதான வரி, நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான வரி, வருமான வரி மற்றும் திறைசேரிக்கு செலுத்திய வரி என அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் தேசிய பொருளாதாரத்திற்கு குறிப்பிடத்தக்களவு பங்களிப்பினை வழங்குகின்றது. 2011- 2015 ஆம் அண்டுகளில் உரிமைப்பங்கு, கூட்டப்பட்ட பெறுமதி மீதான வரி, நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான வரி, வருமான வரி மற்றும் திறைசேரிக்கு செலுத்திய வரி ஆகியவற்றின் சுருக்கம் பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

| | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| உரிமைப்பங்கு | 777,852,620 | 831,555,555 | 706,779,429 | 743,675,772 | 891,797,062 |
| VAT/NBT | 433,254,605 | 447,825,030 | 387,928,678 | 424,740,460 | 418,055,273 |
| வருமான வரி | 242,640,682 | 192,453,384 | 131,882,763 | 202,347,603 | 234,000,000 |
| திறைசேரிக்கு செலுத்திய வரி | 75,000,000 | 600,000,000 | 50,000,000 | 25,000,000 | 50,000,000 |
| மொத்தப் பங்களிப்பு | 1,528,747,907 | 2,071,833,969 | 1,276,590,870 | 1,395,763,835 | 1,593,852,335 |

## தேசிய பொருளாதாரத்தின் மேம்பாட்டிற்காக அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் பங்களிப்பு

1. அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் சமூகத்தில் அதிகமானோருக்கு தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுப்பதுடன், தேசிய பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கும் முக்கிய காரணியான வேலையில்லாப் பிரச்சினையைக் குறைப்பதற்கு பெரிதும் சேவையாற்றியுள்ளது.
2. அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் கடும் க்ட்ப் பிரதேசங்களில் பிராந்திய அலுவலகங்களை நிறுவி, பிராந்திய அபிவிருத்தியினை ஏற்படுத்தவதற்கும் பிராந்திய வேறுபாடுகளை இல்லாதொழிக்கவும் நடவடிக்கை எடுக்கின்றது. அவ்வாறான பிரதேசங்களில் வர்த்தக நடவடிக்கைகளை விரிவாக்குவதன் மூலம் பொது வசதிகள் பலவற்றை விருத்தி செய்வதறகு வழி ஏற்பட்டுள்ளது.
3. நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்காக புதிய உற்பத்திகளை உருவாக்குவதற்கும், விளைபயன்மிக்கதாக மூலதன மற்றும் நிபுணத்தவ பாவனைக்கு உந்துதல் அளிப்பதற்கும் புதிய பொருட்கள் மற்றும் சேவைகள் உற்பதி உபாயங்களை அறிமுகப்படுத்தி சந்தையினை விருத்தி செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்கின்றது.
4. நாட்டு மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்தல் என்பது பொருளாதார அபிவிருத்தியின் முக்கியமானதொரு அங்கமாகும். நியாயமான விலையில் தரமிக்க தளபாடங்களை வழங்கி, பல்வேறு பொருட்களையும் சேவைகளையும் சந்தையில் அறிமுகப்படுத்துவதற்கும் சமூகத்திற்குப் போன்றே சூழலிற்கும் சாதகமான உற்பத்திகள் மூலம் பொருளாதாரத்திறகு உயர்ந்த பங்களிப்பினைப் பெற்றுக் கொடுப்பதற்கும் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.
5. பொருளாதாரத்தின் சாதகமான நிலைப்பாடு மற்றும் அபிவிருத்தியினை உறுதிப்படுத்துவதற்கு ஏதுவான இறக்குமதிச் சந்தைக்கு எதிராக அந்நியச் செலாவணி வருமானத்தை மேம்படுத்துவதற்கு அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் ஏற்றுமதிச் சந்தையினை நோக்கி பிரவேசிப்பதன் மூலம் அந்நியச் செலாவணியை ஈட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.
6. அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் அரிமரச் சந்தையில் ஏகாதிபத்திய அதிகாரம் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு அரிமரத் தொழிற்றுறையின் முழுமையான செயற்பாடுளில் இணைந்து மற்றும் அதனைக் கட்டுப்படுத்தி அரசாங்க மற்றும் தேசிய மட்டத்தில் வசதிகளை வழங்குவதற்கு பங்களிக்கின்றது.
7. நாட்டில் அதிகமானோருக்கிடையிலும், பல்வேறு புவியியற் பிரதேசங்களுக்கிடையிலும் நியாயமான வருமானம் மற்றும் விரிவாக்கத்தை ஏற்படுத்த ஊக்கமளிக்கின்றது.
8. சமூகப் பொறுப்புமிக்க அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் சுற்றாடலைப் பாதுகாப்பதற்கும், சுற்றாடல் நேயமிக்க பணிகளை விருத்தி செய்வதற்கும் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்குபடுத்தி வருகின்றது.




அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் | ஆண்ட றிக்கை - 2015



# நிறுவனஞ்சார் நிர்வாகம்

நிறுவனஞ்சார் நிர்வாகம் என்பது நிறுவனத்தின் கட்டமைப்பு மற்றும் தொடர்பாடல் குறித்து நன்கு தெளிவினைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் நிறுவனத்தின் போக்கு மற்றும் செயலாற்றுகை தீர்மானிக்கப்படுவதுடன், பணிப்பாளர் சபை நிறுவனஞ்சார் நிர்வகத்திற்குப் பொறுப்புடையோர் ஆவர்.

# நிறுவனஞ்சார் நிர்வாகம்

***நிறுவனஞ்சார் நிர்வாகம் என்பது நிறுவனத்தின் கட்டமைப்பு மற்றும் தொடர்பாடல் குறித்து நன்கு தெளிவினைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் நிறுவனத்தின் போக்கு மற்றும் செயலாற்றுகை தீர்மானிக்கப்படுவதுடன், பணிப்பாளர் சபை நிறுவனஞ்சார் நிர்வகத்திற்குப் பொறுப்புடையோர் ஆவர்.***

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை, சிரேஷ்ட முகாமை மற்றும் ஒட்டு மொத்த ஊழியச் சமூகம் என்பன அலுவலக நடவடிக்கைகளின் போதும் ஏனைய எல்லா தேவைப்பாடுகளின் போதும் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் நற்பெயர் மற்றும் பெருமை ஆகியவற்றை உயர்த்துவதற்கு நிறுவனஞ்சார் நிர்வாகத்திற்கேற்ப ஒழுகுவது அத்தியாவசியமாகும்.

### பணிப்பாளர் சபை

- கூட்டுத்தாபனத்தின் முகாமையை நிர்வகித்தலும், கண்காணித்தலும் பணிப்பாளர் சபையின் பிரதான வகிபங்காகும்.
- பணிப்பாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் பாதுகாவலர்கள் ஆவர். அதாவது, பக்கசார்பாகவும் உச்ச நம்பிக்கையுடனும் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து இருப்பதுடன், அதன் நலனுக்காக மாத்திரம் கடமையாற்றுதல் வேண்டும்.
- பணிப்பாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் அவரவர்களுக்குரிய சட்டதிட்டங்களுக்கு இணங்க தமது கடமைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

பணிப்பாளர் சபை தலைவர், செயற்படு பணிப்பாளர், வன பாதுகாப்பு ஜெனரல், திறைசேரிப் பிரதிநிதி மற்றும் சட்டத்தரணிகள் உட்பட ஏழு உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. நிறுவனத்திற்கு முக்கியமான அனைத்து பிரதான தீர்மானங்களையும் எடுப்பதற்காக மாதாந்தம் பணிப்பாளர் சபைக் கூட்டம் நடைபெறும். பணிப்பாளர்கள் விருப்புக்குரிய தரப்பினரின் உரிமைகளைப் பாதுகாக்கும் பொறுப்பை உடையவர்களாவதுடன், கூட்டுத்தாபனத்தின் ஒட்டு மொத்த முகாமைக்கு அவர்கள் பொறுப்புடையவர்களாவர்.

### சட்டபூர்வமான பிணைப்புக்கள்

1. பணிப்பாளர் சபையினால் அனுமதிக்கப்பட்ட வருடாந்த வரவுசெலவுத் திட்டம் வருட ஆரம்பத்திற்கு முன்னர் அமைச்சிற்கு, திறைசேரிக்கு, கணக்காய்வாளர் அதிபதிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.
2. நிதியாண்டு முடிவடைந்த 60 நாட்களுக்குள் வருடாந்த அறிக்கையின் மற்றும் கணக்குகளின் வரைவினைக் கணக்காய்வாளர் அதிபதியிடம் அனுப்பி வைத்தல் வேண்டும்
3. நிதியாண்டு முடிவடைந்த 150 நாட்களுக்குள் மும்மொழிகளிலும் கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்ட இறுதிக்கணக்குகள் மற்றும் கணக்காய்வு அறிக்கையினை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்
4. பணிப்பாளர் சபையினால் அனுமதிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தினை அமைச்சிற்கு, திறைசேரிக்கு, கணக்காய்வாளர் அதிபதிக்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்

### கணக்காய்வு கமிட்டி

நிதி முகாமைத்துவ ஆற்றல்கள் நிறைந்த பணிப்பாளர் சபையின் சபையின் நிறைவேற்று அதிகாரமற்ற உறுப்பினர்கள் மற்றும் திறைசேரி பிரதிநிதி ஒருவரைக் கமிட்டி கொண்டுள்ளது. வருடாந்த நிதிக் கூற்றுக்கள், கூட்டுத்தாபனத்தின் செயலாற்றுகை, வருடாந்த கணக்காய்வுத் திட்டம், உள்ளக மற்றும் வெளிவாரி கணக்காய்வு அறிக்கைகள் ஆகியவற்றை மீளாய்வு செய்யும் நோக்குடன், இக்கமிட்டி மூன்று மாதங்களுக்கு ஒரு முறையாவது ஒன்றுகூடும்.

### முகாமைத்தவக் கூட்டம்

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட முகாமையாளர்கள் பங்குபற்றும் முகாமைத்தவக் கூட்டங்களில் உற்பத்தி, விற்பனை மற்றும் நிதி செயலாற்றுகை என்பன மீளாய்வு மற்றும் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படும். இதற்கு மேலதிகமாக, முகாமைத்துவக் கூட்டங்களில் நிறுவனத்தின் ஆரம்பப் பிரச்சினைகள் மற்றும் முத்தரப்பு பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்படுவதுடன், அவற்றிற்குத் தேவையான தீர்வுகள் குறித்து தீர்மானம் எடுக்கப்படும்.

### பிராந்திய செயலாற்றுகை முகாமைத்துவக் கூட்டங்கள்

இக்கூட்டம் விசேடமாக வன வேலைத்தளங்களுக்குப் பொறுப்பாகவுள்ள வேலைத்தள உத்தியோகத்தர்கள், விற்பனைகளுக்குப் பொறுப்பாகவுள்ள களஞ்சியசாலை உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய பிராந்திய பணிக்குழாத்தினருக்காக நடாத்தப்படும். பிராந்தியங்களின் செயலாற்றுகையைப் பாராட்டுதல் மற்றும் உற்பத்தி தொடர்பிலும் விற்பனை தொடர்பிலும் இலக்கு வைத்தல் இக்கூட்டங்களின் நோக்காகும். பல்வேறு தடங்கல்கள் மற்றும் சந்தர்ப்பங்களை இனங்காண்பதற்கும் பிரச்சினைகளுக்குரிய தீர்மானங்களை எடுப்பதற்கும் இக்கூட்டங்கள் மூலம் இயலுமாகின்றன.

### தொழில்நுட்ப மதிப்பீட்டுக் கமிட்டி

கேள்விப் பத்திரங்களை மதிப்பீடு செய்வதற்கும் சிபாரிசுகளை முன்வைப்பதற்கும் அரச கொள்வனவு சட்டதிட்டங்களுக்கு அமைய இக்கமிட்டி நியமிக்கப்படும்.

### வருடாந்த அறிக்கை

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் அதன் வருடாந்த அறிக்கையை ஒவ்வொரு வருடத்திலும் உடன்பட்டுள்ள காலத்தினுள் வெளியிடும். வருடாந்த அறிக்கை விருப்புள்ள தரப்பினரின் தேவைகளுக்காக தயாரிக்கப்படுவதுடன், கூட்டுத்தாபனத்தின் நிதி முகாமைத்துவ அமைப்பினை விருத்தி செய்வதற்கு நிறுவப்பட்ட நல்லாட்சிக்கான வழிகாட்டியுடன் இணங்குதல் வேண்டும்.

### விருப்புள்ள தரப்பினருடன் காணப்படும் தொடர்பு

பிரதான விருப்புள்ள தரப்பினருடன் சாதகமான தொடர்பினைப் பேணுவதன் முக்கியத்துவத்தினை பணிப்பாளர் சபை புரிந்து கொண்டுள்ளது. உள்ளகத் தொடர்பாடல் பிரதானமாக மின்னஞ்சல், ஏற்பாட்டுப் பத்திரங்கள், சுற்றறிக்கைகள் மற்றும் அறிவித்தல்கள் ஆகியவற்றினூடாக நடைபெறுகின்றது. அவ்வாறே கூட்டுத்தாபனத்தின் கொள்கைகள் மற்றும் பாவனைகள், கூட்டுத்தாபனத்தின் பெறுமதி மற்றும் சமூகப் பொறுப்புடன் இணங்குவதாக பணிப்பாளர் சபை உறுதிப்படுத்துகின்றது. கூட்டுத்தாபனம் அதன் உள்ளக மற்றும் வெளிவாரி சுற்றாடலைப் பாதுகாப்பதற்கு துணை புரிகின்றது.

### சட்டரீதியான தேவைப்பாடுகளுடன் இணங்குதல்

47 வருடங்களாக நாட்டின் நம்பிக்கையை ஈட்டிய பெறுமதிமிக்க அரிமரங்கள் மற்றும் மரத் தளபாடங்களை வழங்கும் முன்னோடி நாயகனாக அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் ஒப்பற்ற இடத்தினை தனதாக்கிக் கொண்டுள்ளது. அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் 1968 ஆம் ஆண்டில் கௌரவ காணி, நீர்ப்பாசன மற்றும் மின்வலு அமைச்சரால் 1957 இல 49ஐக் கொண்ட அரச கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் அதிகாரத்தின் பிரகாரம் நிறுவப்பட்டுள்ளதுடன், 1982 பெப்ரவரி 05ஆந் திகதி கொண்ட இல 178/10, 5.2ஆகிய விசேட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2009 ஆம் ஆண்டின் ஜூன் 26ஆந் திகதி கொண்ட அதிவிசேட வர்த்தமானி இல: 11907இன் படி மேலும் திருத்தப்பட்டு இற்றைப்படுத்தப்பட்டது.



# அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கை 2015

நோக்கு மற்றும் பணிக் கூற்று

இவ்வாண்டில் முகங் கொடுத்த சந்தர்ப்பங்கள் மற்றும் இடையூறுகள் குறித்து தலைவரின் மீளாய்வு

இவ்வருடத்தில் செயற்பாடுகளில் செயலாற்றுகையினை பிரத்தியேகமாகக் குறிப்பிடும் பொது முகாமையாளரின் மீளாய்வு

பணிப்பாளர்கள் மற்றும் சிரேட்ட முகாமையாளர்களின் சுருக்கமான சுயவிபரம்

கடந்த வருடத்தின் தரவுகள் உள்ளடங்கிய நிதிசார் சுருக்கம்

பணிப்பாளர் அறிக்கை

கணக்காய்வு கமிட்டியின் அறிக்கை

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

கணக்காய்வு செய்யப்பட்ட நிதிசார் கூற்று



அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் தேசிய பொருளாதாரத்திற்கு வழங்கியுள்ள பங்களிப்பு குறித்து திருப்திப்பட முடிகிறது. அரசு இயற்கை வளங்களை பாதுகாக்கும் மற்றும் பராமரிக்கும் நோக்குடன் குறிக்கப்பட்ட பிரதேசங்களில் அனுமதியற்ற மரம் வெட்டுதலைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் கூட்டுத்தாபனத்திற்குரிய மாபெரும் சவாலாகும். இது கூட்டுத்தாபனத்தின் வர்த்தக நடவடிக்கைகளில் கடும் பாதிப்பினை ஏற்படுத்துகின்றது.

பொறுப்பு மிக்க நிறுவனப் பிரஜையாக அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் பிற்பட்ட திருத்தங்களினூடாக அரசாங்கத்தின் சட்டங்கள் மற்றும் கட்டளைகளுக்கு இணங்க அதன் பணிகளை வெற்றிகரமாக மேற்கொள்கின்றது.

- 1966 இல 13ஐக் கொண்ட வன கட்டளைச் சட்டம்
- 1971 இல 38ஐக் கொண்ட நிதிச் சட்டம்
- 1954 இல 15ஐக் கொண்ட கடை மற்றும் அலுவலக ஊழியர் சட்டம்
- 1958 இல 15ஐக் கொண்ட ஊழியர் பொறுப்பு நிதியம்
- 1980 இல 46ஐக் கொண்ட ஊழியர் சேமலாப நிதியம்
- 2006 இல 10ஐக் கொண்ட வருமான வரிச் சட்டம்
- 2002 இல 14ஐக் கொண்ட கூட்டப்பட்ட பெறுமதி மீதான வரிச் சட்டம்
- 2009 இல 09ஐக் கொண்ட தேசிய கட்டியெழுப்பும் வரிச் சட்டம்

அரசாங்க சட்டதிட்டங்கள் மற்றும் கட்டளைகளுக்கு மேலதிகமாக இலங்கை கணக்கீட்டு நியமம் (ளுடுகுசுளு மற்றும் டுமுயுளு) இலங்கை கணக்காய்வு நியமம் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நடவடிக்கைகளுக்கு ஏற்புடைதாகும்.
கூட்டுத்தாபனம் இலக்குகளை அடைந்து கொண்ட அளவு மற்றும் சமூக பொறுப்புக்களை நிறைவேற்றும் அளவை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு வருடாந்த கணக்குகள் மற்றும் செயலாற்றுகையை மீளாய்வு செய்யும் அதிகாரம் அரச வர்த்தகம் தொடர்பிலான பாராளுமன்ற கமிட்டிக்கே வழங்கப்பட்டுள்ளது.

எமது கூட்டுத்தாபனத்தின் பிரதான மூலப்பொருள் மிகவும் பெறுமதியான இயற்கை வளமொன்றான மரமாகும். அவ்வாறே எமது மொத்த செயற்பாட்டு நடவடிக்கை நேரடியாகவும் மறைமுகமாகவும் சுற்றாடலுடன் தொடர்புறுகின்றது. இவ்வாறான சந்தர்ப்பங்களின் கீழ் சட்டரீதியான சட்டகத்தினுள் இணங்குவது அத்தியாவசியமாகும். எமது கூட்டுத்தாபனம் ஏற்கனவே மத்திய சுற்றாடல் அதிகாரசபை மூலம் பிறப்பிக்கப்படும் சட்டங்கள் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்கி ஒழுகின்றது. நாடு முழுதும் பரந்திருக்கும் எமது செயற்பாட்டு வலையமைப்பு அரிவாலைகள், பரிகரிப்பு பொறிகள், கொதிகலன்கள், சூளைகள் மற்றும் தளபாட உற்பத்தி நிலையங்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.
உற்பத்தி

நிலையங்களிலிருந்து அகற்றப்படும் சுற்றாடலுக்கு பாதகமான விளைவை ஏற்படுத்தும் கழிவுகளை அகற்றுவதற்கு கூட்டுத்தாபனத்தினால் கட்டுப்பாட்டுத் தொகுதியொன்று பயன்படுத்தப்படுகின்றது. இதற்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபை எமது செயற்பாட்டு நடவடிக்கைகளை சுற்றாடல் நேயமிக்கதாக மேற்கொள்வதற்கு பல்வேறு பிரிவுகளின் கீழ் சட்டங்கள் மற்றும் உபாயங்களைப் பிறப்பித்துள்ளது.

அதன் படி கூட்டுத்தாபனம் ஒலி மாசடைவு, நீரி மாசடைவு, வளி மாசடைவு, குப்பை கூலங்கள் மற்றும் ஏனைய சூழல் மாசடையும் செயற்பாடுகளுக்கு சூழல் மாசடைதலைக் குறைக்கும் வழிமுறைகளைப் பின்பற்றுகின்றது.

தளபாட உற்பத்தி நிலையங்கள் மற்றும் அரிவாலைகளைக் கொண்ட அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் பணிகள் பிரிவிற்கு மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் வருடாந்தம் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். இதன் படி, கூட்டுத்தாபனத்தின் எல்லா தொழிற்சாலைகளும் இந்நிபந்தனைகளுக்கு இயன்றளவு இணங்கி ஒழுகுவதற்கு ஆர்வங் காட்டுகின்றன.

ஏமாற்றுதல் மற்றும் ஊழல்கள் ஏற்படுவதைக் குறைப்பதற்கு கூட்டுத்தாபனம் பல்வேறு தரப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. அதன்படி வேலையிலிருந்து இடை நிறுத்துதல், ஒரு நாளைக்கான சம்பளத்தை வெட்டுதல், வருடாந்த சம்பள உயர்வினை நிறுத்துதல், பதவி உயர்வுகளைக் குறைத்தல், சம்பளத்தினை இடைநிறுத்ததல் மற்றும் நட்டத்தினை அறவிடுதல் போன்ற தண்டனைகளுக்கு ஊழியர்கள் உட்படுத்தப்படுகின்றனர். இத்தண்டனைகள் ஊழியர்களால் மேற்கொள்ளப்பட்ட ஏமாற்றுதல் மற்றும் ஊழல்களின் நிலையைப் பொருத்து வேறுபடும்.

எவரேனும் ஊழியர் ஒருவர் ஏதேனும் உபத்திரவங்களிற்கு அல்லது பாரபட்சத்திற்கு உட்படுவாராயின் அவரது பிரதானிக்கு அது குறித்து அறிவிப்பதற்கு அவ்வூழியருக்கு சந்தர்ப்பம் உண்டு. அவ்வாறான சந்தர்ப்பங்கில் தேவையான வழிமுறைகளை எடுப்பதற்கு கூட்டுத்தாபனத்தின் பிரதானிகள் மற்றும் உயர் முகாமை முனைப்புடன் செயற்படுவர்.

இவ்விதத்தில் எடுக்கப்படும் எல்லா உபாயங்களாலும் கூட்டுத்தாபனத்தின் மேன்மைக்காக நன்முறையில் நிர்வாகம் மேற்கொள்ளப்படுகின்றது. அது கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களுக்கு விருப்புடைய தரப்பினருக்கு போன்றே நாட்டிற்கும் நன்மையாக அமையும்.

ஈற்றில் நிறுவனஞ்சார் நிர்வாகத்தின் மூலம் மகாண சபை நிறுவனங்கள், அரச மற்றும் கூட்டு விதிமுறைகள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு இணங்க செயற்பட்டு நிறுவனத்தின் நற்பெயரை விருத்தி செய்வதுடன், ஊழியர் வாடிக்கையாளர் ஆகிய தரப்பினரின் பொருத்தமற்ற நடவடிக்கை காரணமாக ஏற்படக்கூடிய சர்ச்சைக்குரிய மற்றும் ஏமாற்று நடவடிக்கைகளைக் குறைத்துக் கொள்ளமுடிகின்றது.



# நீடித்து நிலைக்கும் எதிர்காலத்திற்காக

எதிர்கால சந்ததியினருக்கு தமது எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு காணப்படும் சாதமான நிலைமையை பேணிக் கொள்வதுடன், தற்கால சந்ததியினருக்கு உயர் நீடித்து நிலைக்கும் நன்மைகளைப் பெற்றுக் கொள்ளும் விதத்தில் உயிரினக்கோளத்தைப் பயன்படுத்துவதை முகாமை செய்தலே நீடித்து நிலைக்கும் அபிவிருத்தி ஆகும்.

# நீடித்து நிலைக்கும் எதிர்காலத்திற்காக...




நீடித்து நிலைக்கும் அபிவிருத்தி என்பது உலகளாவிய ரீதியில் பேச்சுவார்த்தைக்கு உட்பட்டதொரு தலைப்பாகும். நீடித்து நிலைக்கும் அபிவிருத்தி இலக்குகளை வெற்றி கொள்வதற்கு எத்தனிக்கும் பயணத்தில் இயற்கை வளங்கள் முகாமைத்துவம் மிகவும் முக்கியமானதொரு நோக்கம் எனக் குறிப்பிடலாம். இலங்கை போன்ற இயற்கை வளமிக்க நாட்டில் விசேடமாக வன முகாமைத்துவத்தின் மூலம் சமநிலையான சுற்றாடல் தொகுதியொன்றை உருவாக்குதலட் முக்கிய இடத்தை வகிக்கின்றது.

வன முகாமைத்துவம் அடிப்படையில் பிரதானமான இரு நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு முக்கியமாகும். தற்காலத்தில் வனவளங்களைப் பயன்படுத்தும் வேளையில் எதிர்கால சந்ததியினருக்கும் அதனைப் பாதுகாத்துக் கொடுப்பது வன முகாமைத்துவததின் முக்கிய நோக்கமாகும்.

மரக் கூட்டுத்தாபனமானது இம்மர வளங்களை சூழலிற்கு பாதிப்பு ஏற்படாதவாறும் காணப்படும் வளங்களிலிருந்து உச்ச பலனைப் பெற்றுக் கொண்டு மனிதனின் தேவைகளுக்குப் பொருந்தும் வகையில் பொருட்களை உற்பத்தி செய்தல், புதிய வனப்பயிர்ச் செய்கைகளை மேற்கொள்ளுதல், வழிகாட்டல்கள் மூலம் வன வளங்களை பாதுகாத்து குடும்பங்களின் தற்கால மற்றும் எதிர்கால வாழ்க்கைத் தரத்தை வளம்பெறச் செய்வதற் மூலம் நிறுவனத்தின் நீடித்து நிலைக்கும் அபிவிருத்தியின் வாயிலைத் திறப்பது முக்கியமான நோக்கங்களில் உள்ளதாகும்.








விரிவான உற்பத்திச் செயற்பாடுகளினூடாக பெரும் பகுதியினருக்கு சுற்றாடலின் அருட்கொடைகள் போய்ச் சேரும் விதத்தில் நடவடிக்கை மேற்கொண்டு உருவாக்கும் தேறிய பெறுமானங்களை இலங்கையின் நீடித்து நிலைக்கும் அபிவிருத்திக்கு பங்களித்தல்.

↓

விரிவான உற்பத்திச் செயற்பாடுகளினூடாக பெரும் பகுதியினருக்கு சுற்றாடலின் அருட்கொடைகள் போய்ச் சேரும் விதத்தில் நடவடிக்கை மேற்கொண்டு உருவாக்கும் தேறிய பெறுமானங்களை இலங்கையின் நீடித்து நிலைக்கும் அபிவிருத்திக்கு பங்களித்தல்.

↓

நிறுவனத்தின் மத்திய மற்றும் நீண்ட காலத் திட்டங்களை அடைந்து கொள்வதற்கு பல்வேறு வாடிக்கையாளர் குழுக்களைத் திருப்திபடுத்தும் விதத்தில் அரிமரம் மற்றும் மரத்தாலான உற்பத்திகளுக்கு தரநியமங்களைத் தயாரித்தல்.

↓

தரமிக்க அரிமரத்தினை நியாயமான விலையில் விற்பனை செய்வதால் பெறப்படும் வருமானத்தினை ஊழியர்களின் மற்றும் அவர்களது குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு உதவியாகக் கொள்ளல்.

↓

தனியார் காணி உரிமையாளர்களிடமிருந்து அரிமரத்தினை நியாயமான விலையில் கொள்வனவு செய்தல், அரிமரத்தினால் துணைப்பொருட்களை உருவாக்குதல், சூழல் நேயமிக்க மக்களை உருவாக்குவதற்கு வழிகாட்டல்களை வழங்குதல் போன்ற நிகழ்ச்சிகளைச் செயற்படுத்துவதன் மூலம் சமூகப் பொறுப்பினை நிறைவேற்றுவதற்கு பங்களித்தல்.

**வாடிக்கையாளர்கள்**

வாடிக்கையாளர் வியாபரத்திற்கு அரசரைப் போன்றவராவர்" அதனால் வாடிக்கையாளரைத் திருப்திபடுத்துவதன் மூலம் பெற்றுக் கொள்ளும் நன்மைகள் நீடித்து நிலைக்கும் அபிவிருத்திக்கு சாதகமான விளைச்சலை அறுவடை செய்வது போலாகும். இவ் எண்ணக்கருவினூடே எமது கூட்டுத்தாபனம் சூழல்நேய அரிமர விளைச்சலை அறுவடைச் செய்வதன் மூலம் நாட்டின் ஒட்டு மொத்த மக்களின் வாழ்க்கையினை மேம்படுத்தியவாறு, தற்கால மதிநுட்பமிக்க வாடிக்கையாளரின் பல்வே வகையிலான தேவைகளுக்குப் பொருந்தும் வகையில் நவீன, பாதுகாப்புமிகு, தரமிக்க பொருட்களையும் சேவைகளையும் வழங்குகின்றது.
வாடிக்கையாளர் திருப்தி என்பது நிறுவனமொன்று வழங்கும் பொருட்கள் மற்றும் சேவைகளைப் பயன்படுத்துவதன் மூலம் வாடிக்கையாளர் மனதில் ஏற்படும் விருப்பு ஆகும். தரமிக்க செயற்பாடுகளின் காரணமாகப் பெருந் தொகையான வாடிக்கையாளர்கள் மரக் கூட்டுத்தாபனத்தின் வாடிக்கையாளர் குழுவில் தினமும் இணைந்த வண்ணம் இருக்கின்றனர். திருப்தியடைந்த வாடிக்கையாளர் நிறுவனத்தின் வளமாகும். அதனால் அவர்களை மென்மேலும் திருப்தியுறச் செய்வது நிறுவனத்தின் எதிர்கால நிலைப்பாட்டினை உறுதிப்படுத்தும். இதனை நன்கு உணர்ந்துள்ள எமது நிறுவனம் வாடிக்கையாளரை மையப்படுத்திய நிகழ்ச்சிகள் பலவற்றை மேற்கொண்டுள்ளதுடன், அதன் மூலம், வாடிக்கையாளர் பக்கசார்பினை இனங்காண முடிகின்றது. கூட்டுத்தாபனத்தின் அனைத்து வாடிக்கையாளர்களையும் எடுத்து நோக்குகையில்

பல்வேறு பிரிவுகளின் கீழ் வகைப்படுத்தலாம் அரச துறையினைப் பிரதிநிதிப்படுத்தும் திணைக்களங்களும் பகுதி அரசாங்க நிறுவனங்களும் அரச ஊழியர்கள், தனியார் பிரிவினைப் பிரதிநிதிப்படுத்தும் தனியார் நிறுவனங்களும் அனேகமாகத் தனிப்பட்ட முறையில் பொருட்களை வேண்டும் குழுவினரும் இதில் அடங்குவர்.

அரச நிறுவனம் என்ற வகையில் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் எல்லா வாடிக்கையாளரினது தேவைகளையும் கருத்துக்களையும் இனங்கண்டு வாடிக்கையாளரை மையப்படுத்திய எமது கூட்டுத்தாபனத்திற்கே உரிய பெறுமானங்களுக்குள் ஒழுக்க விதிகளைப் பாதுகாக்கும் விதத்தில் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சூழலொன்றை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.


## வாடிக்கையாளர் திருப்தி மற்றும் உறுதிப்படுத்திக் கொள்ளல்




### ஊழியர்கள்

ஊழியர்களை திருப்திபடுத்தும் நோக்கில் "ஊழியர்களை மகிழ்வித்தல் அல்லது ஊழியரின் மனநிறைவினைப் பெற்றுக்கொள்ளுதல்" என்ற கொள்கையினை அடிப்படையாகக் கொண்டு நாம், நிறுவனத்தின் எல்லா ஊழியர்களையும் உள்ளக வாடிக்கையாளர்களாகக் கருதி நிறுவனத்தின் எல்லா செயற்பாடுகளையும் தயார்செய்துள்ளோம். அதாவது ஊழியர்களுக்கும் அவர்கள் எதிர்பார்ப்பனவற்றை விடக் கூடுதலாகப் பெற்றுக் கொடுத்து திருப்திபடுத்த வேண்டும் என்ற கருத்து எமது நிறுவனத்தின் நீண்ட கால நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நோக்காகக் கொள்ளப்படுகின்றது.
எமது நிறுவனத்தின் ஊழியர்களுக்கு தேவையானது என்ன என்பதை உறுதியாக இனங்காண்பதற்கு முடியாதுவிடினும் அனுமானத்தின் பின்னர் தேவைகளை நேரகாலத்துடன் நிறைவேற்றுவதற்கு செயற்படுவதன் மூலம் உருவாகும் மகிழ்ச்சிமிக்க ஊழியர்கள் எப்போதும் கூட்டுத்தாபனத்தின் இலக்குகளை, குறிக்கோள்களை அடைந்துகொள்வதற்கு உறுதுணையாக இருப்பர். இவ்வாறான திருப்திமிக்க ஊழியர்கள் எமது நிறுவனத்தின் பக்கசார்பான வாடிக்கையாளர்களை நீண்ட காலத்திற்கு தக்க வைத்துக் கொள்வதற்கு எப்போதும் செயற்படுவர்.
எமது நிறுவனத்தின் மிகச் சிறந்த வழிகாட்டல் தொகுப்பின் மூலம் நிறுவனத்தினுள் முக்கிய பெறுமானங்களை உருவாக்கும், எமக்கே உரிய கலாச்சாரத்தினுள் மேம்படுத்தப்பட்ட மனப்பாங்குடனான ஒன்றிணைந்து பணி புரியக்கூடிய மற்றவர்களை மதிப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளும் சிறந்த ஊழியர் தொடர்புகளினூடாக நிறுவனத்தின் நீண்ட கால முன்னேற்றத்திற்காகப் பாடுபடும் திருப்திமிக்க ஊழியர் குழாம் எமது நிறுனத்தின் முதுகெழும்பாவர். எமது கூட்டுத்தாபனம் சம்பளம் மற்றும் படிகளுக்கு மேலதிகமாக பல்வேறு வசதிகளை வழங்குகின்றது.






அரசாங்க மர் கூட்டுதத்தாபனத்தின் ஊழியர் அபிவிருத்திக்காக 2015ஆம் ஆண்டில் செயற்படுத்தப்பட்ட பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சிகள்

| பயிற்சி நிகழ்ச்சி | பங்குபற்றிய ஊழியர்கள் |
|---|---|
| அரிமரத் தரப்படுத்தல் செயலமர்வுகள் (03 நாட்கள்) | 70 |
| களஞ்சியசாலை உத்தியோகத்தர்களுக்கான 2 மாத செயலமர்வு | 23 |
| தளபாட உற்பத்தி தொடர்பில் செயலமர்வு | 12 |
| அரிமரப் பதனிடல் (03 நாட்கள்) | 14 |

**ஏனைய அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களினூடாக நடாத்தப்பட்ட ஊழியர் பயிற்சி நிகழ்ச்சிகள்**

| பயிற்சி நிகழ்ச்சி | பங்குபற்றிய ஊழியர்கள் |
|---|---|
| Wheel loader பயிற்சி | 06 |
| Excavator பயிற்சி | 05 |
| டோசர் பயிற்சி | 02 |
| Fork lift பயிற்சி | 03 |
| பர்னஸ் எண்ணெய் குறித்து செயலமர்வு | 06 |
| சரக்கிருப்புக் கட்டுப்பாடு | 52 |
| தமிழ் மொழி | 15 |
| Microsoft excel | 08 |
| அரிமரப் பயன்பாடு | 15 |


சிறந்த பயிற்சி மற்றும் மனப்பாங்கு விருத்தி மூலம் மானிட வளப் பயன்பாட்டினை உச்ச மட்டத்திற்கு கொண்டு வரவும், அதன் மூலம் நிறுவனத்தின் இலக்குகளையும் ஊழியர்களுக்கு தமது இலக்குகளையும் நிறைவேற்றிக் கொள்வதற்கான சந்தர்ப்பம் ஏற்படுகின்றது.

### சுற்றாடலும் சமூகமும்

உங்களதும் எமதும் எழில்மிகு தங்குமிடமான இவ்வழகிய சூழலிருந்து நாம் பெற்றுக் கொள்பவை ஏராளமானவை. பிறந்த நாள் முதல் எமது இறுதி மூச்சு வரை நாம் விடும் ஒவ்வொரு மூச்சும் எமது வாழ்வெனும் சங்கிலியினால் சுற்றாடலுடன் பின்னிப் பிணைந்து உள்ளது. இவ்வழகிய பூமித்தாயின் உய்விற்காக எமது கூட்டுத்தாபனம்சுற்றாடலில் ஏற்படும் தாக்கங்களைக் குறைத்தல் மற்றும் காலநிலை மாற்றங்களுக்கு ஏற்றவாறு இணங்கி நடந்து சூழல் நேய நீடித்து நிலைக்கும் அபிவிருத்தியினை அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் எப்போதும் எதிர்பார்க்கின்றது.

தற்கால இலங்கையில் காணப்படும் சட்டதிட்டங்களுக்கு இணங்கி நாட்டின் கலாசாரம், விழுமியங்கள், பழக்கவழக்கங்கள், வரலாறு, ஒழுங்குவிதிகள் ஆகியவற்றிற்கு ஏற்றவாறு வர்த்தகப் பெறுமானத்தை உருவாக்குவதுடன் சூழல் நேய செயற்பாடுகள் மூலம் சமூகத்தினை வலுப்படுத்துதல் எமது நிறுவனத்தின் எதிர்பார்ப்பாகும். சமூகத்தினை வலுப்படுத்துவதற்கு இயன்ற செயற்பாடுகளை தொடர்ச்சியாக இனங்கண்டு அவற்றை சமூகத்தின் மேம்பாட்டிற்கு வழிகோலும் விதத்தில் செயற்படுத்துவதற்கு முடியுமான பயிற்றப்பட்ட உத்தியோகத்தர் அணியினரை எமது நிறுவனம் கொண்டுள்ளது. நீடித்து நிலைக்கும் அபிவிருத்திக்காக தேவைகளை நிறைவேற்றும் சமூகம் தொடர்ந்தும் வலுப்படுத்தும் நீண்ட

வரலாற்றினைக் கொண்ட எமது நிறுவனம் தீவிரமாக செயற்படுகின்றது.
மனிதத் தேவைகளுக்கு மரம் அவசியமாகும். அதனால் நிலையான மர விளைச்சலை அறுவடை செய்தல் காடழிப்பிற்கு ஏதுவாகாத விதத்தில் மனிதத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அவசியமான அரிமரத்தினைப் பெற்றுக் கொள்ள அரிமர வனப்பயிர்ச்செய்கை முகாமைத்துவ எண்ணக்கருவினை அறிமுகப்படுத்தி, அரிமரப் பெறுமதிமிக்க தாவர இனங்களை இதற்குப் பயன்படுத்தி அழிவிற்கு உள்ளாகியிருக்கும் காடுகள், வெற்று நிலங்கள், தரிசு நிலங்கள் ஆகியவற்றை வனப்பயிர்ச் செய்கைக்குப் பயன்படுத்தி முறையாக மற்றும் விஞ்ஞான ரீதியாக ஆய்வு செய்து மற்றும் முதிர்வடைந்த மரங்களுக்குப் பதிலாக புதிய மரங்களை நடுவதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் சுற்றாடலுக்கும் தாவர இனத்திற்கும் நீண்ட கால நன்மையினைப் பெற்றுக் கொள்ளும் வகையில் நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன.
நம் எல்லோரினதும் எழில்மிகு தங்குமிடமான இவ்வழகிய சூழலிருந்து நாம் பெற்றுக் கொள்பவை ஏராளமானவை. பிறந்த நாள் முதல் எமது இறுதி மூச்சு வரை நாம் விடும் ஒவ்வொரு மூச்சும் எமது வாழ்வெனும் சங்கிலியினால் சுற்றாடலுடன் பின்னிப் பிணைந்து உள்ளது. இவ்வழகிய பூமித்தாயின் உய்விற்காக எமது கூட்டுத்தாபனம்சுற்றாடலில் ஏற்படும் தாக்கங்களைக் குறைத்தல் மற்றும் காலநிலை மாற்றங்களுக்கு ஏற்றவாறு இணங்கி நடந்து சூழல் நேய நீடித்து நிலைக்கும் அபிவிருத்தியினை அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் எப்போதும் எதிர்பார்க்கின்றது.




**மனித உரிமைகள், சூழல் பாதுகாப்பு, ஊழியர் உரிமைகள், சமூக சேவைகள் ஆகிய பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**
**மிகச் சிறந்த சமூகத்தினை உருவாக்குவதற்கு 2015ஆம் ஆண்டின் போது கூட்டுத்தாபனம் மேற்கொண்ட நிகழ்ச்சித்திடங்கள் குறித்து சுருக்கமொன்று கீழே தரப்பட்டுள்ளது.**
**மரநடுகை நிகழ்ச்சிகள் மற்றும் அதற்கு இணைவாக மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நிகழ்ச்சிகள்**

- 2015ஆம் ஆண்டில் உலக சுற்றாடல் தினத்தையொட்டி நிகழ்ச்சிகள் பல நடாத்தப்பட்டன.
- துரு ஜன மாணவர் வங்கி - மரநடுகை நிகழ்ச்சி தொடர்ந்து இவ்வாண்டிலும் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு இடையில் செயற்படுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியினூடாக வனப்பயிர்ச்செய்கை குறித்தும் அரிமர இனங்கள் குறித்தும் அம்மரங்கள் முதிர்ச்சயடைவது அண்மித்ததும் பயன்படுத்திக் கெள்வது குறித்தும் விரிவுரைகள் நடாத்தப்பட்டதுடன், பாடசாலை மானவர்களின் ஆர்வத்தினை அதிகரிக்கச் செய்வதற்கு உறுதுணையாயிற்று.

  மேலும், பண்டரவளை, பதுளை, வெலிமடை, பஸ்ஸர ஆகிய கல்வி வலயங்களை மையப்படுத்தி 5,552 மரக்கன்றுகள் பாடசாலைகளுக்கு இடையில் பகிரப்பட்டதுடன், 350 மரக் கன்றுகள் பண்டாரவளை கஹகொல்ல - ஆரண்ய சேனாசனய - விற்கு வழங்கப்பட்டது.

- அரிமரப் பரிகரிப்பு குறித்து கண்காட்சியொன்று பொலன்னறுவை மெதிரிகிரிய மத்திய மகா வித்தியாலயத்தில் நடாத்தப்பட்டது.

- பொலன்னறுவை மாவட்டத்தில் செவனபிட்டிப் பிரதேசத்தில் 20 ஹெக்டேயர் தேக்கு மரப் பயிர்ச் செய்கை செய்யப்பட்டதுடன், புளியங்குளம் மற்றும் மதவாச்சி ஆகிய அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்திற்குரிய காணிகளில் பயிர்ச்செய்யப்பட்ட தேக்கு மரப் பயிர்ச் செய்கையின் வெற்றிடத்தை நிரப்புவதற்காக 1,000 தேக்கு கன்றுகள் மீண்டும் நடப்பட்டன.

- சுற்றாடல், அரிமரப் பரிகரிப்பு மற்றும் உயிரினப் பல்வகைமை குறித்து பாடசாலை மாணவர்கள், நிறுவனங்கள், பொதுமக்கள் ஆகியோரை அறிவுறுத்தி விரிவுரைகள் ஒழுங்கு செய்யப்பட்டன.

- அரிமரம் மற்றும் சுற்றாடல் குறித்து பல்வேறு தகவல்கள் அடங்கிய துண்டுப்பிரசுரங்கள், புத்தகங்கள் ஆகியவை பாடசாலை மாணவர்க் மற்றும் பொது மக்களுக்கு இடையில் பகிர்ந்தளிக்கப்பட்டன.

- பெறுமதிமிக்க கருங்காலி போன்ற மரங்களை நடுவதற்கு ஊக்குவிக்கும் நோக்கில் பாடசாலை மாணவர்களுக்கு மற்றும் வீட்டுத் தோட்டங்களுக்கு அக்கன்றுகளைப் பகிர்ந்தளித்தல்.

- வன றோப்பா - மர நடுகை நிகழ்ச்சிக்கு செயற்படு பங்களிப்பினை வழங்குதல்.

- பொதுமக்களுக்கும் பல்வேறு நிறுவனங்களுக்கும் இடையில் பகிர்ந்தளிப்பதற்காக 88,000 மரக்கன்றுகள் பல்வேறு மர நடுகை நிகழ்ச்சிகளுக்காக பகிர்ந்தளிக்கப்பட்டன.

**குப்பைக் கூளங்களை அகற்றும் முகாமைத்துவம்**

கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவத்தினால் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் பல காலமாகக் குப்பைக் கூளங்கள், கடுதாசி, பொலித்தீன், சேதனக் கழிவுகள் என வகைப்படுத்தி வெவ்வேறாகச் சேகரித்து முறையாக அகற்றப்படுகின்றன.

**அரிமரங்களை இனங்காணல் மற்றும் உறுதிப்படுத்தும் சேவை**

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் ஆய்வுப் பிரிவிற்கு அரிமரத்தின் தரம் மற்றும் அரிமரச் சொத்துக்களுக்கு சான்றிதழ் வழங்கும் அதிகாரம் 2008 பெப்ரவரி மாதம் 25ஆந் திகதிய 1538/7 ஆம் இலக்கத்தைக் கொண்ட விசேட வர்த்தமானி மூலம் வழங்கப்பட்டுள்ளது. உண்மையான நிறை, ஈரலிப்புத் தன்மை, உள்ளடக்கம், சுருங்குதல், போரோன் பரிகரிப்பு ஆகியவற்றுக்காக அரிமரத்தின் தரத்தினைப் பரிசோதிப்பதற்கான வசதிகள் இப்பிரிவில் உண்டு.

**அரிமரத் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனங்கள் வழங்கும் சேவைகள்**

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் மிக முக்கிய திருப்பு முனையாக 2006இல் இரத்மலானை கல்தெமுல்லையில் அரிமரத் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனமொன்றினை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுத்தது. வன மற்றும் அரிமரத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவோரின் பணியினை வலுப்படுத்துவதன் மூலம் அவர்களது கொள்திறனை மேம்படுத்துவதற்கும் அறிவினை இற்றைப்படுத்தவதற்கும் இலங்கையின் தேசிய அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றுவதற்கும் அரிமரத் தொழில்நுட்பப் பயிற்சி நிறுவனம் நிறுவப்பட்டுள்ளது.






# இடர் முகாமைத்துவம்

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் தமது செயற்பாடுகள், உற்பத்தி, ஆக்கம், விநியோகம், நிதி ஆகிய பிரிவுகளில் செயலாற்றும் போது பொருளாதார மற்றும் அரசியல் சூழலில் ஏற்படக்கூடிய சிக்கல்களை இனங்காணுதல், பகுப்பாய்வு, மேற்பார்வை, மீளாய்வு, இடர் சிகிச்சை ஆகியவை மூலம் நிறுவனத்திற்கு ஏற்படக்கூடிய தாக்கங்களைக் குறைத்தல் அல்லது அகற்றுதல் இடர் முகாமைத்துவம் எனப்படும்.

# இடர் முகாமைத்துவம்

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் தமது செயற்பாடுகள், உற்பத்தி, ஆக்கம், விநியோகம், நிதி ஆகிய பிரிவுகளில் செயலாற்றும் போது பொருளாதார மற்றும் அரசியல் சூழலில் ஏற்படக்கூடிய நெருக்கடிகளை இனங்காணுதல், பகுப்பாய்வு, மேற்பார்வை, மீளாய்வு, இடர் சிகிச்சை ஆகியவை மூலம் நிறுவனத்திற்கு ஏற்படக்கூடிய தாக்கங்களைக் குறைத்தல் அல்லது அகற்றுதல் இடர் முகாமைத்துவம் எனப்படும். செயற்திறன்மிக்க நிதி, செயற்பாடுகள், ஏனைய கட்டுப்படுத்தப்பட்ட தொகுதிகள் ஆகியவற்றை இடர் முகாமைத்துவத்திற்காகக் கூட்டுத்தாபனம் பிரயோகித்துள்ளது.

பொருளாதார மற்றும் வர்த்தகக் காரணிகளில் தொடர்ச்சியாக ஏற்படும் மாற்றங்களுடன் வாடிக்கையாளர் விருப்பில் ஏற்படும் மாற்றங்களினால் பல இடர்நேர்வுகள் மற்றும் வியாபர வாய்ப்புக்கள் ஏற்படுவதால் இடர்நேர்வுகளை இனங்காணுதல், மதிப்பீடு செய்தல், முதனிலை ஒழுங்கின்படி தயாரித்தல், தேவையான இடர்நேர்வு சிகிச்சைகளை செய்தல் என்பன வர்த்தகச் செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படைக் காரணிகளாவதுடன், தீர்மானம் எடுக்கும் செயற்பாட்டின் போது இடர்நேர்வு குறித்து கவனத்திற் கொள்ளுதல் மிகவும் முக்கியமாகும்.

**01** இடர்களை இனங்காணுதல்

**02** இடர் பகுப்பாய்வு

**03** மேற்பார்வை மற்றும் மீளாய்வு

**04** இடர் சிகிச்சை

இடர்களை இனங்காணுதல் மற்றும் முகாமை செய்தல் ஆகிய செயற்பாடுகளின் இறுதிப் பொறுப்பு பணிப்பாளர் சபைக்கு உரியதாவதுடன், இடர்நேர்வு மேற்பார்வை மற்றும் இடர் முகாமைத்துவச் செயற்பாட்டின் பொருத்தப்பாட்டினைப் பரிசோதித்தல் கணக்காய்வு கமிட்டிக்குச் சாட்டப்பட்டுள்ளது. இடர் முகாமைத்துவக் கொள்கைகளை இற்றைப்படுத்தல் மற்றும் இடையறாத கண்காணிப்பு பொருளாதார மற்றும் சந்தை நிலைமைகளின் மாற்றங்களை தெளிவு படுத்தும். அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தில் பயன்படுத்தப்படும் இடர் முகாமைத்துவக் கொள்கை மூலம் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்படக்கூடிய இடர்களை இனங்காணுதல், மேற்பார்வை மற்றும் குறைத்துக் கொள்ளுதல் ஆகியவற்றிற்காகப் பிரயோகிக்கப்படும் செயன்முறைகள் மற்றும் வழிகாட்டல்கள் மிகவும் தெளிவாக உள்ளன.

இடர் முகாமைத்துவச் செயற்பாட்டின் போது ஒவ்வொரு ஊழியரக்கும் உரிய பொறுப்பு, பயிற்சி, அறிவுறுத்தல் ஆகியவற்றின் மூலம் இடர்நேர்வு கலாசாரமொன்று ஏற்படுத்தப்படும். கூட்டுத்தாபனம் முகங்கொடுக்கும் இடர்கள் மற்றும் முகாமைத்துவச் செயன்முறைகள் கீழ்வருமாறு தரப்பட்டுள்ளன.







### நிதி இடர்நேர்வு முகாமைத்துவம்

#### 1. கடன் இடர்நேர்வு

கடன்பட்டோரினால் ஏற்படும் ஏய்ப்புக்களினால் ஏற்படும் இடர்களைக் கட்டுப்படுத்துவதற்கு கூட்டுத்தாபனத்தினால் இடர்களைத் தவிர்க்கும் உபாய முறை பிரயோகிக்கப்படும். அதற்காக கீழ் குறிப்பிட்டுள்ள சிகிச்சைகள் பிரயோகிக்கப்படுகின்றன.

- ஐயப்பாடான கடனை ஒதுக்குதல் மற்றும் விசாரணைக்காகக் கூட்டுத்தாபனத்தினால் முறையான கொள்கைகள் செயற்படுத்தப்படும்.
- மாதாந்தம் கடன்பட்டோர் குறித்து பகுப்பாய்வொன்று மேற்கொள்ளப்படுவதுடன், வருடாந்தம் ஏற்படக்கூடிய இடர்களை இனங்கண்டு ஒதுக்கீடுகள் செய்யப்படும்.
- கடனட்டைகள் போன்ற முறைமைகளின் மூலம் கொடுக்கல் வாங்கல்களின் போது பணம் பெறுகை பாதுகாப்பனது என உறுதிப்படுத்திக் கொள்ளல்.
- அனேகமாக பணத்தைக் கொண்டு மாத்திரம் விற்பனைகளை மேற்கொள்வதற்கு கருத்திற்கொள்வதுடன், கடனுக்கு விற்பனை மேற்கொள்வது கூட்டுத்தாபனத்தின் கடனுக்கு விற்பனை கொள்கைகளுக்கு இணங்கும் விதமாகும்.
- எல்லா கிடைக்க வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கணக்குகள் தொடர்பில் தொடர்ச்சியாக கவனச் செலுத்தப்பட்டுள்ளது.
- தனி நபர்களுக்கு இனேகமாக கடனுக்கு விற்பனை செய்யப்படாததுடன், புதிய விற்பனை முறைமை ஒன்றாக அரச ஊழியர்களுக்கு மாத்திரம் சலுகை வட்டி வீதத்தில் “பிரசாத அபிமானீ” முறைமையின் கீழ் பொருட்கள் விற்கப்படும்.

#### 2. வட்டி வீதத்தின் மீதான இடர்நேர்வு

வட்டி வீத மாற்றம் இலாபம் மற்றும் பணப்பயாச்சல் மீது தாக்கம் செலுத்துவதால் அவ்விடரினை முகாமைப்படுத்துவதற்கு இடர் குறைக்கும் உபாய முறைமைகள் பயன்படுத்தப்படும். அதற்கு கீழ் குறிப்பிட்டுள்ள பரிகாரங்கள் பிரயோகிக்கப்படும்.

- வழங்குனர்கள் பணம் செலுத்தும் போது, முற்பணம் செலுத்தும் போது விசேட நிதிக் கொள்கைகளுக்கு இணங்க பணக் கொடுப்பனவுகளை மேற்கொள்ளுதல்.
- தாழ் இணைப்பு மட்டமொன்றைப் பேணுதல்.
- பயனுறுதிமிக்க தொழிற்படு மூலதன முகாமைத்துவம்
- நிதி இடர்நேர்வு முகாமைத்துவ முறைமைகளை நிறுவுதல்
- வங்கியுடன் கலந்துரையாடி இணக்கங்களின் படி கூட்டுத்தாபனத்தின் முதலீடுகள் மீது விசேட வட்டி வீதங்களைப் பெறுதல்.
- மிகையாகக் காணப்படும் பணத்தினை மீண்டும் தேவையான காலஎல்லைப் படி திட்டமிட்டு விசேட வட்டி வீதங்களின் கீழ் வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல்.

#### 3. திரவத்தன்மை இடர்நேர்வு

திரவத்தன்மை பிரச்சினைகளினால் ஊழியர்களின் பிரச்சினைகள் மற்றும் பிரயோகங்கள் குறித்து பிரச்சினைகள் எழுவதன் மூலம் கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளில்பாதகமான தாக்கங்கள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு இடர்களைக் குறைக்கும் உபாய முறைமைகள் கூட்டுத்தாபனத்தினால் பிரயோகிக்கப்படும். சிறந்த திரவத்தன்மை மட்டமொன்றினைப் பேணுவதற்கு மற்றும் முறையான நிதித் திட்டங்கள் மற்றும் கட்டுப்பாட்டுத் தொகுதியொன்றினை நிறுவுவதற்கு கீழ்வரும் முறைமைகள் பிரயோகிக்கப்படும்.

- காசுப்பாய்ச்சல் எதிர்வுகூர்வு மற்றும் போதியளவு பணம் மற்றும் பணத்திற்குச் சமமான சொத்துக்கள் நிலுவையினைப் பேணுதல்.
- கூட்டுத்தாபனத்திற்குரிய தேவையான போது பிணையாகப் பயன்படுத்தி எதிர்கால நிதித் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்குபொதிய சொத்துக்களைப் பேணுதல்.
- கூட்டுத்தாபனத்தின் கொள்கைசார் தீர்மானம் எடுத்தல் மையப்படுத்தப்பட்டுள்ளது.
- முறையான கடன் அறவிடும் கொள்கையொன்றினால் அறவிட முடியாத கடன் மற்றும் கடன்பட்டோர் மீதி உயர்வடைதலைத் தவிர்த்தல்.
- செலவினத்தைக் கட்டுப்படுத்துவதற்கு பொருத்தமான அதிகாரத்தினை நிறுவுதல் மற்றும் உள்ளகக் கணக்காய்வுத் தொகுதியொன்றினால் சுயாதீனக் கொள்கைகள் மற்றும் அதிகாரம் செயற்படுதல் குறித்து தொடர்ச்சியாக விசாரணை செய்தல்.

#### 4. மூலதன முதலீட்டு இடர்நேர்வு

கூட்டுத்தாபனத்தின் உறுதியான நிலைப்பாட்டிற்கு முதலீடுகள் முக்கியமாக செல்வாக்குச் செலுத்துவதனால், தற்கால மற்றும் எதிர்கால திட்டங்கள் மூலம் ஏற்படக்கூடிய இழப்புக்களைக் குறைப்பதற்கு இடர்களை முகாமைப்படுத்தும் உபாயமுறைமைகள் செயற்படுத்தப்படும். அதற்கு கீழ்வரும் செயற்பாடுகள் பிரயோகிக்கப்படும்.

- சொத்துக்களில் முதலீடு செய்யும் போது குறிப்பிட்ட படி திட்டமிட்டு கூட்டுத்தாபனத்தின் வரவுசெலவு மற்றும் செயற்படு திட்டத்தின் படி செயற்படுதல்.
- காணப்படும் எல்லா சொத்துக்களையும் உச்சளவில் பயன்படுத்துதல்
- மூலதனத் திட்டக் கொள்கைகளைச் செயற்படுத்தும் போது அரச துறையின் வியாபாரமாகக் பொறுப்புடன் செயற்படுத்துதல்.

### செயற்பாட்டு இடர் முகாமைத்துவம்

#### 1. உள்ளகக் கட்டுப்பாடுகளில் ஏற்படக்கூடிய இடர்

கூட்டுத்தாபனத்தில் காணப்படும் சொத்துக்கள் பாதுகாப்பு, செயற்பாட்டு நடவடிக்கைகளில் ஏற்படக்கூடிய தோல்விகளை இனங்காணுதல், கொள்கைகள் மற்றும் தீர்மானங்கள் மாறவேண்டிய

விதத்தினைக் காட்டிக் கொடுத்தும் இடர்களைத் தவிர்ப்பதற்கு கூட்டுத்தாபனத்தினால் கீழ்வரும் உபாய முறைமைகள் பிரயோகிக்கப்படும்.

- தொடர்ச்சியாக நேரஅட்டவணைப்படி உரிய முறையில் உள்ளகக் கணக்காய்வுகளை மேற்கொள்வதற்காக உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு அர்ப்பணிப்புடன் பணிபுரிதல்.

- அரச துறையில் வர்த்தக நிறுவனமொன்றாக பொருத்தமான நிர்வாகக் கட்டமைப்பொன்றினைப் பேணுதல். விசேடமாக பணக் கொடுப்பனவுகள், வழங்குனர்களைத் தெரிவு செய்தல், ஆட்சேர்ப்பு செயன்முறை என்பன குறித்து கூடிய கவனஞ் செலுத்துதல்.

- எல்லா நிதிச் செயற்பாடுகளும் நிதிச் சட்டத்தின் ஒழுங்குவிதிகளுக்கு மற்றும் நடைமுறையிலிருக்கும் சட்டங்கள் மற்றும் நிபந்தனைகளுக்கு அமைய மேற்கொள்ளப்படுதல்.

## 2. உற்பத்தி இடர்நேர்வு

கூட்டுத்தாபனத்தின் நிலைப்பாட்டினை உறுதிப்படுத்தும் அடிப்படை அம்சமாக உற்பத்திச் செயன்முறையினைக் குறிப்பிடலாம். முறையான உற்பத்திச் செயன்முறையொன்று இல்லாமையால் வாடிக்கையாளர் திருப்தியை எதிர்பார்க்கப்படும் மட்டத்தில் அடைந்து கொள்ள முடியாததுடன், அது கூட்டுத்தாபனத்தின் வெற்றியைப் பாதிக்கும். அதனால் உற்பத்திச் செயன்முறையில் ஏற்படக்கூடிய இடர்களை முகாமைப்படுத்துவதற்கு கீழ்வரும் வழிமுறைகள் பின்பற்றப்படும்.

- உற்பத்திச் செயன்முறையினை பல்வேறு மட்டங்களில் தரப் பரிசோதனைக்கு உட்படுத்தி, முடிவுப் பொருட்கள் வாடிக்கையாளரின் கைகளுக்குப் போய்ச் சேரும் வரை தரத்தினை உறுதிப்படுத்துதல்.
- உரிய நியமங்களற்ற உற்பத்திகளை வேறுபடுத்தி அவற்றைக் கூட்டுத்தாபனத்தின் நற்பெயருக்கு பங்கம் ஏற்படாதவாறு விற்பதற்கு அல்லது முறையான விதத்தில் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- உரிய நியமங்களுடனான அரிமரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு வன பாதுகாப்பு திணைக்களத்தினால் விடுவிக்கப்படும் வனப்பயிர்ச் செய்கைகளிலிருந்து அரிமரத்தினைப் பெற்றுக்கொள்வது மேற்கொள்ளப்படவதுடன், அவ்வாறு விடுவிக்கப்படும் அரிமரம் 35 வருடங்களுக்கு மேலானவை என்பதால் அவ் உற்பத்திகளின் தரமிக்க முடிவினை உறுதிப்படுத்தல்.

## 3. மனிதவள இடர்நேர்வு

கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளை தடைகளின்றி மேற்கொண்டுச் செல்வதற்கு அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் மனித வள இடர்நேர்வினைத் தவிர்ப்பதற்கான உபாய முறைமைகளைப் பிரயோகிக்கின்றது.

இதன் மூலம் ஊழியப் புரள்வினை குறைந்த மட்டத்தில் பேணுதல், பயிற்சிகள் மற்றும் சிறந்த வழிமுறைகள் மூலம் பொருத்தப்பாடான, தகுதியுள்ள, வினைத்திறன்மிக்க ஊழியர்களை கூட்டுத்தாபனத்திற்குள் ஈர்த்தல் மற்றும் தக்க வைத்துக் கொள்ளல், சிறந்த வேலைச் சூழலை நிறுவனத்தில் பேணுதல் ஆகியவற்றை செய்ய முடிகிறது. இதற்கு கீழ்வரும் வழிமுறைகள் கூட்டுத்தாபனத்தினால் பிரயோகிக்கப்படுகின்றன.

- சிறந்த மற்றும் சினேகபூர்மான வேலைச் சூழலொன்றை எல்லா ஊழியர் மட்டங்களுக்கு இடையிலும் பேணுதல்.
- பல்வேறு விதத்தல் ஊழியர் நன்மைகளைப் பெற்றுக் கொடுத்தல்.
- தேவையான சந்தர்ப்பங்களில் ஊழியர்களை விசேட மற்றும் பொதுப் பாடநெறிகளில் ஈடுபடுத்தல்.
- அரச நிறுவனமாக விசேட கொள்கைத் தொகுப்பின் பிரகாரம் புதிய ஊழியர்களை ஆட்சேர்த்தல்.

## 4. சரக்கிருப்பு முகாமைத்துவ இடர்நேர்வு

இடர்நேர்வுகளைக் குறைக்கும் உபாய முறைமைகளைப் பிரயோகித்து சரக்கிருப்பினால் ஏற்படக்கூடிய இடர்களைக் குறைப்பதன் மூலம் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் சரக்கிருப்பு இல்லாது போவதால் ஏற்படக்கூடிய இழப்பினைத் தவிர்த்துக் கொள்ளல், மெதுவாக நகரும் சரக்கிருப்பு ஒன்று சேர்வதால் ஏற்படும் நட்டத்தினைக் குறைத்தல், காலாவதியாகிய சரக்கிருப்பு ஒன்று சேர்வதால் ஏற்படும் நட்டத்தினைக் குறைத்தல், தரங்குறைந்த மூலப் பொருட்கள் இருப்பினைப் பெற்றுக் கொள்வதால் மற்றும் பாவிப்பதால் ஏற்படக்கூடிய நட்டத்தைக் குறைத்தல், இருப்பினைத் தேக்கி வைப்பதற்கான செலவினத்தைக் குறைத்தல் ஆகிய நன்மைகளைப் பெறலாம். அதற்காகக் கீழ்வரும் வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

- மாதாந்த விற்பனை எதிர்வுகூறல்கள் மற்றும் வருடாந்த வரவுசெலவு திட்டத்திற்குட்பட்ட உற்பத்தி இலக்குகள் குறித்து கவனத்திற் கொண்டு உற்பத்திக் கமிட்டி கூட்டங்களில் மாதாந்த உற்பத்தி இலக்குகள் தீர்மானிக்கப்படும்.

- மெதுவாக நகரும் உற்பத்திகளைச் சந்தைப்படுத்துவதற்கு பல்வேறு சந்தைப்படுத்தல் உத்திகளைப் பிரயோகித்தல். உதாரணமாக, “பிரசாத அபிமானீ தளபாட கடன் திட்டம்” போன்ற சந்தைப்படுத்தல் உத்திமுறைமைகள்.

- உற்பத்திச் செயன்முறையினை பல்வேறு மட்டங்களில் தரப் பரிசோதனைக்கு உட்படுத்தி, முடிவுப் பொருட்கள் வாடிக்கையாளரின் கைகளுக்குப் போய்ச் சேரும் வரை தரத்தினை உறுதிப்படுத்துதல்.

- உரிய நியமங்களற்ற உற்பத்திகளை வேறுபடுத்தி அவற்றைக் கூட்டுத்தாபனத்தின் நற்பெயருக்கு பங்கம் ஏற்படாதவாறு விற்பதற்கு அல்லது முறையான விதத்தில் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.





- தொடர்ச்சியாக சரக்கிருப்புப் பகுப்பாய்வினை மேற்கொண்டு மெதுவாக நகரும் இருப்புக்களை அடையாளங் கண்டு அவற்றை வருமானம் ஈட்டலுக்காகப் பிரயோகித்தல்.

- தொடர்ச்சியாக சரக்கிருப்புக்களைத் தேக்கி வைக்கும் காலம் குறித்து கவனம் செலுத்துதல்.

- காலத்திற்குக் காலம் பகுப்பாய்வு செய்து மெதுவாக நகரும் இருப்புக்களுக்கு பொருத்தமான வழிமுறைகளை மேற்கொள்ளுதல். பொருத்தமான களஞ்சியசாலை வசதிகள் மற்றும் களஞ்சியப்படுத்தும் முறைமைகளை ஒழுங்கு செய்தல்.

## 5. சுற்றாடல் இடர்நேர்வு

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தில் மேற்கொள்ளும் செயற்பாட்டு நடவடிக்கைகளினால் சுற்றாடலில் ஏற்படும் பாதகமான தாக்கங்களைக் குறைத்துக் கொள்வதற்கும், கூட்டுத்தாபனத்தின் சட்டதிட்டங்களுக்கு அமைய செயற்படுவதற்கும் இடர்நேர்வுகளைத் தவிர்க்கும் உபாய முறைகள் மூலம் கீழ்வரும் முறைமைகள் பிரயோகிக்கப்படும்.

- பல்வேறு நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்து சமூகம் மற்றும் விசேடமாகப் பாடசாலை மாணவர்கள் ஆகியோரை அறிவுறுத்தல்.
- சுற்றாடல்சார் கொள்கைகளைத் தீர்மானிக்கும் நிறுவனங்களின் கொள்கைகளுக்கு இணங்கி ஒழுகுவதை உறுதி செய்து கொள்ளல்.
- சுற்றாடல் தொடர்பில் ஆர்வமுள்ள தரப்பினருடன் நெருக்கமான தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ளல்.
- வீழ்ச்சியடையும் வனப்பயிர்ச் செய்கை எண்ணிக்கைக்குப் பரிகாரமாக மீள் வனப்பயிர்ச்செய்கை செயற்றிட்டங்களை ஆரம்பித்தல்.

## 6. சொத்துக்கள் இடர்நேர்வு

இயந்திரோபகரணங்கள் செயலிழத்தல், நெருப்பினால், திடீர் விபத்துக்களால், ஊழியர்களினால் மற்றும் திருடர்களினால் சொத்துக்களுக்கு ஏற்படக்கூடிய சேதங்களைக் குறைப்பதற்கு கூட்டுத்தாபனம் கீழ் குறிப்பிட்டுள்ள முறைமைகளால் இடர்நேர்வுகளைத் தவிர்க்கும் உபாய முறைகளைப் பிரயோகிக்கின்றது.

- சொத்துக்களுக்கு எல்லா இடர் பிரிவுகளும் உள்ளடங்குமாறு காப்புறுதியொன்றினைப் பெறல்.

- திட்டமிடப்பட்ட பராமரிப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சொத்துக்களின் பராமரிப்பினை மேற்கொள்ளல்.

- சொத்துக்களின் எல்லா நடவடிக்கைகளுக்கும் விசேட கொள்கைகளை நிறுவுதல், மேலும், உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளை உரிய நேரத்தில் மேற்கொள்ளல்

## இணங்கற் இடர்நேர்வு முகாமைத்துவம்

## 1. சட்ட மற்றும் ஒழுங்குவிதிகள் இடர்நேர்வு

சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்காமையினால் கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளில் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள், நற்பெயருக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்கள், அபராதம் மற்றும் தண்டப்பணம் செலுத்த வேண்டி ஏற்படல் போன்ற பாதகமான நிலைமைகளுக்கு முகங் கொடுக்க வேண்டியதால் ஏற்படும் இடர்களை இதன் கீழ் கொள்ளலாம். அதனால் சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகள் மாற்றமடைவதால் ஏற்படும் பாதிப்புக்களை நேரத்துடனேயே இனங்கண்டு கூட்டுத்தாபனத்திற்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களைக் குறைத்தல் மற்றும் சட்ட ரீதியான சூழலில் ஏற்படக்கூடிய மாற்றங்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்கு பலமிக்க,

விளைபயன்மிக்க, நெகிழ்ச்சிமிக்க கட்டமைப்பொன்றை ஏற்படுத்துவதற்கு இடர்நேர்வுகளைத் தடுக்கும் உபாய முறைகள் பிரயோகிக்கப்படுவதுடன், அதற்கு கீழ் குறிப்பிட்டுள்ள வழிமுறைகள் பயன்படுத்தப்படும்.

- கூட்டுத்தாபனத்தின் சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க செயற்படுதல்.
- பணிப்பாளர்கள் மற்றும் உரிய அதிகாரிகளின் அறிவுரையின் பிரகாரம் செயற்படுதல்.
- சட்ட கொள்கைகளின் போக்கு குறித்து மேற்பார்வை செய்தல்.
- அரச கொள்கைகள் மற்றும் சுற்றறிக்கைகளுக்கு இணங்க செயற்படுதல்.

## 2. தரம் குறித்து இடர்நேர்வு

அரசாங்க மரக்கூட்டுத்தாபனம் இடர்நேர்வுகளைத் தடுக்கும் உபாய முறைகளைப் பிரயோகித்து நவீன தொழில்நுட்பம் மற்றும் தர நியமங்கள் குறித்து கூடிய கவனத்தைச் செலுத்துவதன் மூலம் நிறுவனத்தினுள் காலங் கடந்த முறைகளைப் பயன்படுத்துவதால் ஏற்படும் பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொள்ளல், பொருட்கள் மற்றும் சேவைகளை குறிப்பிட்ட தரத்துடன் இருக்காமையைக் குறைத்தல், உரிய சட்டதிட்டங்களுக்கு இணங்க திட்டங்களைச் செயற்படுத்துதல் ஆகியவற்றை நிறைவேற்றுகின்றது. அதற்கு கீழ் குறிப்பிட்டுள்ள வழிமுறைகளைப் பயன்படுத்துகின்றது.

- நீண்ட கால திட்டங்களுக்கு அமைய காலங் கடந்த இயந்திரங்களுக்குப் பதிலாக புதிய இயந்திரோபகரணங்களை உற்பத்திக்குப் பயன்படுத்துதல்.யனஎயடெநன அயஉாைநெள.
- எமது உற்பத்திகளை தேசிய மற்றும் சர்வதேச மட்டத்துடன் பொருந்துவதாக உரிய நிறுவனங்களிடமிருந்து சான்றிதழ் பெறல்.
- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவினால் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகளை கூட்டுத்தாபனத்தின் வளர்ச்சிக்காக மேற்கொள்ளுதல்.
- உற்பத்தித் தரத்தைப் பாதுகாப்பதற்காக தேவையான ஆய்வு நடவடிக்கைகளுக்கு ஆய்வுகூட வசதிகளை வழங்குதல்.
- வெளிவாரி மற்றும் உள்ளகக் கணக்காய்வுகளினால் தொடர்ச்சியாகக் கண்காணித்தல்.

## உபாய முறைகள் மற்றும் வர்த்தக ரீதியான இடர்நேர்வு முகாமைத்துவம்

### 1. நற்பெயர் இடர்நேர்வு

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினால் தமது நற்பெயருக்கு ஏற்படக்கூடிய இடர்களை முகாமைத்துவம் செய்வதற்கு இடர்நேர்வுகளைக் குறைக்கும் உபாய முறைகள் பிரயோகிக்கப்படுவதுடன், அதன் மூலம் தமது நற்பெயருக்கு மற்றும் தரத்திற்கு பங்கம் ஏற்படக்கூடிய செயல்களைத் தவிர்த்தல், செயற்பாட்டு வினைத்திறன், நிதி நடவடிக்கைகளில் வெளிப்படைத்தன்மை ஆகியவை மூலம் ஆர்வமுற்ற தரப்பினருடன் நெருக்கமான தொடர்ப்பினைக் கட்டியெழுப்புவதற்கு செயற்படுகின்றது. கீழ் குறிப்பிட்டுள்ள வழிமுறைகளை நற்பெயருக்கு ஏற்படக்கூடிய இடரிகளைக் குறைப்பதற்குப் பயன்படுத்தபடுகின்றன.

- வரவுசெலவுக்குட்பட்ட இலக்குகளின் படி மாதாந்தம் வரவுசெலவு திட்ட இலக்குகளை அடையும் விதத்தில் செயற்படுதல் மற்றும் கூட்டுத்தாபனத்தின் செயலாற்றுகை எதிர்பார்க்கப்பட்ட இலக்குகளுடன் பொருந்துமா என உறுதிப்படுத்திக் கொள்ளல்.
- உற்பத்திகள் தரத்திற்கும் நியமங்களுக்கும் இணங்குவதாக உறுதிப்படுத்திக் கொள்ளல்.
- விருப்புள்ள தரப்பினருடன் சிறந்த விளைபயன்மிக்க தொடர்பாடல் முறைமைகளுடாக கொடுக்கல் வாங்கல் செய்தல்.
- கூட்டுத்தாபனத்தின் பிரதிபிம்பம் மென்மேலும் உயர வெளிவாரி நிகழ்ச்சிகளை செயற்படுத்துதல்.

### 2. சந்தை போட்டித்தன்மை இடர்நேர்வு

குறைந்த தரங்கொண்ட இறக்குமதி செய்யப்பட்ட அரிமரம் மற்றும் மரத்தாலான பொருட்கள் காரணமாக ஏற்படக்கூடிய சந்தை போட்டித்தன்மை உயர்வடைவதால் ஏற்படக்கூடியசந்தைப் பங்கு குறைவடைவதைத் தடுத்தல், பிரதான உற்பத்திகளின் விற்பனை வருமானத்தை அதிகரிக்கச் செய்தல், (அதாவது மரக்குற்றிகள், அரிமரத் துண்டங்கள், சிலிப்பர்கள், மின் கம்பங்கள், யானை வேலிக் கம்பங்கள் போன்ற வருமானங்கள்) மற்றும் புத்தாக்கங்கள் மூலம் சந்தை பங்கினை அதிகரித்துக் கொள்ளல் ஆகிய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு சந்தை போட்டித்தன்மை மூலம் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்படும் இடர்களை முகாமைப்படுத்துவதற்கு இடர்நேர்வுகளைக் குறைக்கும் உபாய முறை பிரயோகிக்கப்படும். அதற்கு கீழ் குறிப்பிட்டுள்ள வழிமுறைகள் பயன்படுத்துகின்றன.

- காணப்படும் நிலைமை கட்டுப்பாட்டு நியமங்களுக்கு அமைய இருப்பதை எப்போதும் உறுதிப்படுத்திக் கொள்ளல்.
- பல்வேறு பத்திரிகை அறிவித்தல்கள் மற்றும் மேம்பாட்டு நிகழ்ச்சிகள் மூலம் மேலும் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் நற்பெயரை வலுப்படுத்த நடவடிக்கை எடுத்தல்.
  உதாரணமாக, அரச ஊழியர்களுக்காகப் பெற்றுக் கொடுக்கும் “பிரசாத அபிமானீ” தளபாட கடன் திட்டத்தின் கீழ் 2 வருட கடனை திருப்பிச் செலுத்தும் காலத்தின் படி 10மூ வட்டி வீதத்தில் தளபாடங்களை வழங்குதல். 2013ஆம் ஆண்டு முதல் கடனட்டை முறை மூலம் கொடுக்கல் வாங்கலை ஆரம்பித்தல்.
- நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் புதிய காட்சியறைகளை நிறுவுதல், இருக்கும் காய்சியறைகளை மற்றும் விற்பனை நிலையங்களை நவீனமயப்படுத்துதல் மூலம் உற்பத்திகள் கிடைக்குந்தன்மையினைப் பேணுதல்
- புத்தாக்கங்களுக்காக ஆய்வுகளை நடாத்துதல் மற்றும் புது எண்ணக்கருக்களை நிறுவனத்தினுள் கொண்டு வருவதன் மூலம் வாடிக்கையாளர் ஈர்ப்பினை அதிகரிக்கச் செய்தல்.
- சந்தை ஆய்வுகளின் மூலம் வாடிக்கையாளரின் எதிர்பார்ப்புக்களை இனங்காணுதல்.
- வீணாதலைக் குறைத்தல் மூலம் குறைந்த செலவில் உயர் தரமிக்க பொருட்களை உற்பத்தி செய்தல்.
- பல்வேறு முறைமைகள் மற்றும் கலைகளைப் பயன்படுத்தி புதிய செயற்பாட்டு உபாயங்களைத் தயாரித்தல்.

### 3. தகவல் தொகுதி இடர்நேர்வு

சரியான தகவல்களின் பற்றாகுறை, தகவல்களின் பாதுகாப்பு, வன்பொருள் மற்றும் மென்பொருள் தொடர்பாடல் தொகுதிகள் ஆகியவற்றுடன் பின்னிப் பிணைந்துள்ள இடர்நேர்வுகளைக் குறைத்துக் கொள்ளலும் தொழில்நுட்பக் கொள்கைகளை தொடர்ச்சியாக இற்றைப்படுத்தி புதிய தொழில்நுட்பச் சூழலிற்குப் பொருந்தும் வகையில் பேணுதலும் கூட்டுத்தாபனத்தினுள் தகவலடகளழனட பாதுகாப்பினை அளவிடும் அளவீடுகளின் ஒத்திசைவான தன்மை மற்றும் நியமங்களுக்கு இணங்குதல் குறித்து எப்போதும் உறுதிப்படுத்திக் கொள்வதற்கு கீழ்வரும் உபாயமுறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

- தொடர்ச்சியாக தகவல் தொழில்நுட்பக் கொள்கைகளுக்கு இணங்கி ஒழுகுதல்.
- தரவுக் காப்புப்பிரதிகளை எப்போதும் ஒன்று சேர்த்து வெளி இடங்களில் களஞ்சியப்படுத்துதல்.
- முக்கியமான தரவுகள் தொடர்பிலான இறுவட்டுகளின் பிரதியொன்றை வைத்துக் கொள்ளல்.
- பராமரித்தல் மற்றும் ஏனைய சேவைகளுக்கு வருடாந்தம் வழங்குனர்களுடன் ஒப்பந்தங்கள் செய்துகொள்ளல்.
- வைரசுக்களைக் கண்டுபிடித்து பரிகரிக்கும் வைரஸ் எதிர்ப்பு மென்பொருள்கள், ஏனைய மென்பொருள்கள் ஆகியவற்றை உரிய காலத்தில் இற்றைப்படுத்தல், எப்போதும் இரகசிய குறியீடுகளைப் பயன்படுத்துவதன் மூலம் தகவல்களில் வெளிவாரி நபர்கள் உட்புகுவதைத் தடுத்தல்.





# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

*2015 திசெம்பர் 31ஆந் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள் குறித்து 1971 இல 38ஐக் கொண்ட நிதிச் சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை*

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව

கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்

AUDITOR GENERAL'S DEPARTMENT


මගේ අංකය / எனது இல. / My No. } ஐ஫என்/சீ/எஸ்ரீசீ/1/16/146

ඔබේ අංකය / உமது இல. / Your No. }

දිනය / திகதி / Date } 2016 செப்தெம்பர் 27

தலைவர்,

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்.

**அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 29 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கு காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

## 1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றைத் தீர்மானித்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.


අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, . - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka

+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk






## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்த நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற் கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை கணக்கீட்டு நியமங்களுடனான இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 01

ஓய்வூதிய பணிக்கொடை கடப்பாடுகளுக்காக ஒதுக்கும் போது ஏற்படும் மிகை அல்லது பற்றாக்குறை விரிவான வருமானக் கூற்றில் வேறாக வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், கூட்டுத்தாபனத்தினால் மிகை அல்லது பற்றாக்குறை இனங்காணப்பட்டு விரிவான வருமானக் கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16

(i) ஆதனங்கள் மற்றும் பொறிகள் என்பவற்றின் பயன்தரு ஆயுட்காலத்தின் இறுதியில் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் பெறுமானத்தேய்வு ஏற்பாடு திருத்தம் செய்யப்பட வேண்டிய போதிலும், ரூபா 879,187,990 கிரயமான சொத்துக்கள், முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டு உருப்படியொன்று ரூபா 5 என்ற பெறுமதியில் காண்பிக்கப்பட்டிருந்தது. இந்த சொத்துக்கள்





தொடர்ந்தும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படுமாயின் பெறுமானத்தேய்வு வீதத்தை திருத்தம் செய்வதற்கும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாதிருந்தால் அதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு சரியான முகப்புப் பெறுமதியைக் காட்டுவதற்கு அல்லது கணக்குகளின் மூலம் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ரூபா 84,467,845 கூட்டுத்தொகையான காணியில் குறிப்பான பயனுள்ள ஆயுட்காலத்துடன் கூடிய ரூபா 25,410,700 பெறுமதியான மதில், வாயிற்கதவு, எல்லை வேலிகள் என்பன குறிப்பிடப்பட்டிருந்ததுடன் 1968 ஆம் ஆண்டிலிருந்து கிரயத்திற்கு முன்கொண்டு வரப்பட்டவாறிருந்தது. அச்சொத்துக்கள் காணியின் கீழ் காண்பிக்கப்பட்டமையால் பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருக்க வில்லை. நீண்டகாலமாக கிரயத்தில் கணக்கீடு செய்யப்பட்டிருந்த காணிகளின் தற்போதைய சந்தை விலை கருத்திற் கொள்ளக் கூடியளவில் மாறியிருந்த போதிலும், அதன் நியாயமான பெறுமதியை காண்பிப்பதற்காக சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 37

நியமத்தின் பிரகாரம் நட்டத்தின் பெறுமதி இனங்காணக்கூடிய சந்தர்ப்பங்களில் நிகழத்தக்க பொறுப்புக்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும், வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட உத்தியோகத்தர் குற்றச்சாட்டுகளிலிருந்து நிரபராதியாக இருந்தமையால் செலுத்த வேண்டிய ரூபா 1,957,174 ஆன நிலுவை சம்பளத்திற்காக ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 40

ரூபா 5 பெறுமதியாக குறிப்பிடப்பட்டிருந்த கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகக் கட்டிடத்தின் ஒரு பகுதி இரண்டு அரசாங்க நிறுவனங்களுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டு மீளாய்வாண்டின் போது ரூபா 14,714,790 ஆன வருமானம் உழைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இக் கட்டிடத்தின் பெறுமதி முதலீட்டுச் சொத்துக்களின் கீழ் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட 4 வரி விடயங்கள் மற்றும் செலுத்த வேண்டிய உரிமை மூலதனப் பங்கின் பெறுமதி, வரி அறிக்கை பிரகாரம் மற்றும் வனப் பாதுகாப்புத் திணைக்களத்தின் பதிவேடுகளின் படி ஒப்பிடும் போது 21,774 முதல் ரூபா 878,986,690 வரையான வீச்சில் வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு வியாபார மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதிகளில் தனியார் கம்பனியொன்றிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 11,873,954 தொகை 30 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும், அரச மற்றும் பகுதியளவு அரச நிறுவனங்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய 5 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 1,132,198 தொகையான வைப்பொன்றும் 2 வருடங்களை விஞ்சிய ரூபா 13,018,508 கூட்டுத்தொகையான கடன் மீதியும் கணக்காய்வு திகதியான 2016 மே வரை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பிரசாத அபிமானி கடன் முன்மொழிவு திட்டத்தின் கீழ் வீட்டுத் தளபாடங்கள் பெற்றுக்கொண்ட 06 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 69,249 தொகை 2011 ஆம் ஆண்டிலிருந்து அறவீடுகள் செயலற்றுக் காணப்பட்டதுடன், குறித்த உத்தியோகத்தர்களிடமிருந்தோ அல்லது பிணையாளர்களிடமிருந்தோ அறவிடுவதற்கு 2016 மே வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கடந்த சில ஆண்டுகளில் அறவிடமுடியாக் கடனாக பாரிய பெறுமதிகள் பதிவழிப்பதற்கு நேர்ந்திருந்தமை, அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகள் நாளதுவரையாக அறவிடப்படாமை, கொடுப்பனவு தாமதமான கடனின் மீதான மிகைக்கட்டணங்களை விதிப்பதன் மூலம் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை போன்ற பல காரணங்களினால் கடன் விற்பனை தொடர்பான கட்டுப்பாடு பலவீனமான நிலைமையொன்றில் இருப்பது அவதானிக்கப்பட்டது.

(ஈ) பொருட்கள் மற்றும் சேவைகள் பெற்றுக்கொள்வதற்கும் கூட்டுத்தாபனத்தின் வேலைத்தள ஒப்பந்தக்காரர்களுக்கும் 2011 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் போது செலுத்தப்பட்ட முறையே ரூபா 95,000 மற்றும் ரூபா 13,822,462 ஆன முற்பணம் மீளாய்வாண்டிலும் தீர்வு செய்யப்பட்டிருக்கவில்லை.





(உ) வனப் பாதுகாப்பு திணைக்களத்திலிருந்து மின்சாரம், நீர் மற்றும் கட்டிட வாடகையாக ரூபா 13,223,972 தொகை 2014 ஆம் ஆண்டிலிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2010 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை உரிமை மூலதன வரியாக கூட்டுத்தாபனத்தின் பிராந்திய அலுவலகங்கள் மூலம் வனப் பாதுகாப்பு திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய தொகை ரூபா 97,540,310 ஆக இருந்தது.

(எ) இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஒப்பந்தக்காரர்களின் பிடிகாசு மற்றும் பிணை வைப்புக்கள் என்பவற்றின் கூட்டுத்தொகை ரூபா 4,913,467 தொகையும் ஓராண்டு கடந்த ரூபா 484,450 ஆன கெஙக் நேல் (Gang nail) வைப்புக்களைத் தீர்வு செய்வதற்கோ அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) நிதிப் பிரமாணம் 104(3) மற்றும் 104(4) | 2013 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் இடம்பெற்ற 14 வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் ஆரம்ப அறிக்கைகள் மற்றும் இறுதி அறிக்கைகள் என்பவற்றைச் சமர்ப்பிப்பதற்கு குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், ஆரம்ப அறிக்கை சமர்ப்பிக்கப்படாத விபத்துக்களின் எண்ணிக்கை 07 ஆக இருந்தன. |

| | |
|---|---|
| (ii) நிதிப் பிரமாணம் 571(2) | ஒப்பந்தக்காரரால் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு வைப்புக்கள் மற்றும் வழங்குனரால் வைக்கப்பட்டுள்ள மீளச் செலுத்த வேண்டிய கேள்வி வைப்புக்களுக்குரிய செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் மீளச் செலுத்த வேண்டிய போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இரண்டு ஆண்டுகளை விஞ்சிய வைப்புக்கள் ரூபா 2,082,701 ஆகவும் கேள்வி வைப்புக்கள் ரூபா 20,750 ஆகவும் இருந்தன. |
| (ஆ) கொள்வனவு வழிகாட்டல் கோவையின் | |
| (i) 2.8.4 ஆம் பிரிவு | பாரியளவிலான பெறுமதியுடைய தொழில்நுட்ப உபகரணங்களைக் கொள்வனவு செய்யும் போது அது தொடர்பாக நிபுணத்துவம் உள்ள வெளிநபர் ஒருவர் வரிசை அமைச்சிலிருந்து அல்லது கொள்வனவு நிறுவனத்திலிருந்து வெளிக் கொள்வனவு விடயம் தொடர்பான அறிவுடைய ஒருவரேனும் இருக்கவேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்தினால் அவ்வாறான நபரொருவரை கொள்வனவுக் குழுவில் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 4.2.3 ஆம் பிரிவு | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரை கிடைத்து 04 வார காலத்தில் பொருள் கொள்வனவு செய்யப்பட வேண்டிய போதிலும், இரண்டு சந்தர்ப்பங்களில் அதற்கு முரணாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை கிடைத்தன் பின்னர் 07 மாதங்கள் காலம் தாமதித்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. |
| (இ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 மற்றும் 9.4 ஆம் பிரிவுகள் | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக மூன்று உத்தியோகத்தர்கள் கம்பனியொன்றின் சேவைக்காக கூட்டுத்தாபன சேவையிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்தனர். |
| (ஈ) 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று உள்ளடக்கப் பட்டிருக்கவில்லை. மேலும் இச்சுற்றறிக்கையின் |





| | |
|---|---|
| 5.2.(சீ) பிரிவு | பிரகாரம் அரசிற்காக செய்யப்பட்ட அபிவிருத்தி செயற்பாடுகள் மற்றும் வணிக ரீதியான செயற்படுகின்ற அபிவிருத்தி செயற்பாடுகள் வெவ்வேறாக இனங்காணப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு இனங் காணப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியின் போது நிதி விளைவுகள் ரூபா 369,890,477 ஆன மிகையொன்றாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 205,997,864 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 163,892,613 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. வரிச் செலவினம் ரூபா 152,584,280 ஆல் அதிகரித்த போதிலும், மொத்த வருமானம் ரூபா 303,664,054 ஆல் அதிகரித்தமை மேற்படி நிதி விளைவுகளின் முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 4 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்யும் போது 2012 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை நிதி விளைவுகள் தொடர்ச்சியாக அதிகரித்திருந்தன. ஊழியர் ஊதியம், வரி மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றைக் கருத்திற் கொள்ளும் போது 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்கு ஒப்பாக 2013 ஆம் ஆண்டின் போது பங்களிப்பு குறைவடைந்திருந்ததுடன், மீண்டும் அது 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் போது அதிகரித்திருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் பங்களிப்பிலான அதிகரிப்பு 23 சதவீதமாகும்.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

கணக்காய்விற்காக கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான விசேட நிதிசார் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு காண்பிக்கப்பட்டுள்ளன.

| விடயம் | மீளாய்வாண்டு | முன்னைய ஆண்டு | முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மாற்ற சதவீதம் அதிகரிப்பு/ (குறைவு) |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | சதவீதம் |
| விற்பனை | 3,836,191,364 | 3,473,847,448 | 10.43 |
| விற்பனை கிரயம் | 2,079,076,399 | 2,020,396,537 | 2.90 |
| மொத்த இலாபம் | 1,757,114,965 | 1,453,450,911 | 20.89 |
| நிர்வாகச் செலவினம் | 706,105,228 | 740,913,217 | (4.70) |
| வரிக்கு முன்னரான இலாபம் | 768,699,335 | 427,222,442 | 79.93 |
| திறைசேரிக்கு செலுத்திய வரி | 50,000,000 | 25,000,000 | 100 |
| வரிக்கு பின்னரான இலாபம் | 718,699,335 | 402,222,442 | 78.68 |
| வருமான வரி | 348,808,858 | 196,224,578 | 77.76 |
| மொத்த விரிவான வருமானம் | 390,148,289 | 205,997,864 | 89.39 |
| இருப்பு சுழற்சி விகிதம் | 1.96 | 1.96 | |
| இருப்பு சுழற்சிக் காலம் (நாட்கள்) | 186 | 185 | |

(அ) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் மொத்த இலாப அதிகரிப்பு 20.89 சதவீதமாகும். முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் விற்பனைக் கிரயம் 2.9 சதவீதத்தினால் அதிகரித்திருந்த போதிலும், விற்பனை வருமானம் 10.43 சதவீதத்தினால் அதிகரித்தமை இவ்வதிகரிப்பிற்கு காரணமாக இருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் தேறிய இலாப அதிகரிப்பு 79.93 சதவீதமாகும். அதற்காக நிர்வாக செலவினம் 5 சதவீதத்தினால் குறைவடைந்தமை மற்றும் செயற்பாட்டு வருமானம் 21.85 சதவீத்தினால் அதிகரித்தமை தாக்கமளித்திருந்தன. ஏனைய செயற்பாட்டு வருமானத்திலிருந்து 18 சதவீதம் ஓய்வூதிய பணிக்கொடை மிகை ஒதுக்கீடாக இருந்ததுடன், செயற்பாட்டு வருமானத்தில் 47 சதவீதம் அறவிட முடியாக்கடன் மிகை ஒதுக்கீடு மற்றும் இருப்பு சேத மிகை ஒதுக்கீடாக





இருந்தன. ஆதலால் இந்த தேறிய இலாப அதிகரிப்பு செயற்பாட்டு நடவடிக்கைகளின் ஊடாக உருவாகியிருக்காததுடன், இதன் மூலம் நிதிசார் பெறுமதி அதிகரிப்பதை விட பெயரளவுப் பெறுமதி அதிகரிப்பதால் கூட்டுத்தாபனத்தின் செயற்திறனில் கருத்திற் கொள்ளக்கூடியளவில் அதிகரிப்பொன்று அவதானிக்கப்படவில்லை.

(இ) கூட்டுத்தாபனத்தினால் இறுதி இருப்பு ஒரே சீராக பேணப்பட்டுச் சென்ற காரணத்தினால் இருப்பு புரள்வு விகிதம் மற்றும் இருப்புச் சுழற்சிக்காலம் 1.96 மற்றும் 186 நாட்களாக இருந்தமையால் உற்பத்தி பொருட்கள் நீண்டகாலமாக களஞ்சியங்கள் இருப்பது அவதானிக்கப்பட்டமையால் கூட்டுத்தாபனத்தினால் வியாபார இருப்பினை உடனடியாக விற்பனை புரள்வாக்குவதற்குரிய தந்திரோபாயம் தொடர்பில் கவனம் செலுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

3.3 கூட்டுத்தாபனத்திற்கு எதிராக அல்லது கூட்டுத்தாபனத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட விடயங்கள்

மீளாய்வாண்டின் இறுதிவரையில் கூட்டுத்தாபனத்திற்கு எதிராக 02 தொழில் அலுவலக வழக்குகளும் 02 நடுவர் தீர்ப்பு வழக்குகளும், தொழில் நியாய சபையில் 03 வழக்குகளும், நீதவான் நீதிமன்றத்தில் 03 வழக்குகளும், மாவட்ட நீதிமன்றத்தில் 06 வழக்குகளும், உயர் நீதிமன்றத்தில் 03 வழக்குகளும், மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் 03 வழக்குகளும் மற்றும் உச்ச நீதிமன்றத்தில் 02 வழக்குகளும் உள்ளடங்கலாக 24 வழக்குகள் தொடரப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் இறுதிவரையில் கூட்டுத்தாபனத்தினால் நீதவான் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கொன்று விசாரணை செய்யப்பட்டு வருகின்றது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் கீழ் 1968 ஏப்ரல் 04 ஆந் திகதிய 14796 ஆம் இலக்கம் மற்றும் 1982 பெப்ரவரி 05 ஆந் திகதிய 178/10 மற்றும் 2001 யூன் 26 ஆந் திகதிய 1190/7 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல்களில் குறிப்பிடப்பட்ட பின்வரும் நோக்களுடன் அரச மரக்கூட்டுத்தாபனம் தாபிக்கப்பட்டுள்ளது.

(i) காடுகளிலிருந்து மரங்களை வெற்றி அகற்றுதல், அம்மரங்களை அரிந்து பலகைகள், முடிவுப் பொருட்களாக மாற்றுதல், குற்றிகளாக அரியப்பட்ட மரங்கள் மற்றும் முடிவுப் பொருட்களை விற்பனை செய்தல் மற்றும் அச்செயற்பாடுகளுக்காக காட்டு வீதிகள் நிர்மாணித்தல்.

(ii) மரங்களை குற்றிகளாக்கும் நிலையங்கள், அரியும் ஆலைகள், எண்ணைய் மற்றும் பரிசோதனை இயந்திரகூடம், மரங்களை குற்றிகளாக்கும், காயவைக்கும் அடுப்புக்கள் மற்றும் ஏனைய உபகரணங்கள் மற்றும் இடங்களை கைப்பற்றுதல், நிர்மாணித்தலும் பேணிச் செல்லலும்.

(iii) மரங்கள் மற்றும் விறகு விற்பனை களஞ்சியங்களை நடாத்திச் செல்லல், உப பொருட்கள் உற்பத்தி, விற்பனை மற்றும் மரங்களை இறக்குமதி செய்தல்.

(iv) புதிய வனப் பயிர்ச்செய்கை செயற்திட்டங்களை ஆரம்பித்தல், மீள் வன பயிர்ச்செய்கை ஏற்படுத்துதல், காடுகள் மற்றும் வன பயிர்ச்செய்கையை விஞ்ஞான ரீதியாக முகாமைத்துவம் செய்தல்.

(v) விவசாயம் சார்ந்த உற்பத்தி மற்றும் பிரம்பு இறக்குமதி செய்தல்.

(vi) மரங்களுடன் அண்மித்த முடிவுப்பொருட்கள் மற்றும் பகுதியளவிலான முடிவுப் பொருட்களை ஏற்றுமதி செய்தல் மற்றும் தனியார் காணிகளிலிருந்து மரங்ளைக் கொள்வனவு செய்தல்.

(vii) வனங்களுக்கு அண்மித்ததாக உற்பத்திகளை தயார்படுத்தல்.

(viii) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மர வகைகளை இனங்காணுதல் மற்றும் சான்றிதழ்களை வழங்குதல்.

(ix) மரக் கைத்தொழிலுடன் அண்மித்த விடயங்கள் தொடர்பாக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல், சான்றிதழ்களை வழங்குதல் மற்றும் சுற்றாடல் தொடர்பான அறிவூட்டும் நிகழ்ச்சிகளை ஒழுங்கமைத்தல்.

(x) கூட்டுத்தாபனத்திற்குரிய காணி மற்றும் கட்டிடங்களிலிருந்து முழுமையான பயனைப் பெற்றுக்கொள்வதற்காக திட்டமிடலும் முதலீடுகளை மேற்கொள்ளலும்.





மேற்குறித்த நோக்கங்களுக்கிடையே விவசாயம் சார்ந்த உற்பத்தி மற்றும் பிரம்புகள் இறக்குமதி என்ற நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) விற்பனைப் புரள்வு

(i) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் மொத்த விற்பனை புரள்வு ரூபா 396,150,785 ஆல் அதாவது 10.41 சதவீத அதிகரிப்பொன்றைக் காண்பித்ததுடன், மீளாய்வாண்டின் மரக் குற்றிகளிலிருந்து 59 சதவீதமும் அரியப்பட்ட மரங்களிலிருந்து 4.4 சதவீதமும், சிலிப்பர்களிலிருந்து 4.05 சதவீதமும் மின் கம்பங்களிலிருந்து 5.7 சதவீதமும் தளபாடப் பொருள் விற்பனையிலிருந்து 6.8 சதவீதமும் விற்பனை புரள்விற்காக பங்களிப்பினை வழங்கியிருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மரக் குற்றிகளிலிருந்து 27 சதவீத அதிகரிப்பொன்றாக இருந்ததுடன், இதற்காக தேக்கு மரக் குற்றிகளின் சராசரி விலை அதிகரிப்பும் தாக்கமளித்திருந்தன.

(ii) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் சிலிப்பர்களிலிருந்து 55.19 சதவீதத்தினாலும் மின் கம்பங்களிலிருந்து 30.66 சதவீதத்தினாலும் விற்பனை வருமானத்தில் வீழ்ச்சியொன்று தென்பட்டது. முன்னைய ஐந்தாண்டு பங்களிப்பினைக் கருத்திற் கொள்ளும் போது சிலிப்பர்கள் மற்றும் மின்கம்ப உற்பத்தி வாழ்க்கை வட்டம் குறைவொன்று அவதானிக்கப்பட்டதுடன், இதுவரை அரச மரக் கூட்டுத்தாபனத்திற்கு இந்த உற்பத்தி தொடர்பாக அரசின் தனியுரிமையாக இருந்ததுடன், இந்த உற்பத்தி பயன்பாட்டு முறைமையில் குறைவடைந்திருந்ததுடன் விற்பனை வருமானத்தை இழக்கும் அவதானமொன்று தென்பட்டது.

(ஆ) தளபாடப் பொருள் விற்பனை

2013 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2014 ஆம் ஆண்டில் 20 சதவீதமான விற்பனை அதிகரிப்பு விகிதமொன்றைக் காண்பித்த போதிலும், 2014 ஆண்டுடன் ஒப்பிடும் போது 2015 ஆம் ஆண்டின் போது 13 சதவீதம் வரை விற்பனை அதிகரிப்பு விகிதம் வீழ்ச்சியடைந்திருந்தது. தளபாட விற்பனை அரச மரக் கூட்டுத்தாபனத்தின் பிரதான வருமான மார்க்கமாக இனங் காணப்பட்டிருந்த போதிலும், இத்தளபாட விற்பனை மீளாய்வாண்டின் மொத்த விற்பனைப் புரள்வில் 6 சதவீதமான சிறு அளவொன்றாகும். அரசிற்கு மரங்கள் பெற்றுக் கொள்வதில் தனியுரிமையொன்று காணப்பட்ட போதிலும்,

புதிய தொழில்நுட்பத்துடன் தொடர்புபடுத்தி போட்டி உற்பத்திகளை சந்தைக்கு சமர்ப்பிக்காமை, போட்டித் தன்மையுடைய நெகிழ்வான மதிப்புள்ள விலைக் கொள்கையொன்று பின்பற்றப்படாமை, சந்தை ஆய்வொன்று மேற்கொள்ளாமை, நாடு பூராகவும் மேவுகை செய்யப்படும் வகையில் காட்சிக்கூடங்களை விரிவுபடுத்தாமல் இருத்தல், பதிய விற்பனை தந்திரோபாயங்களை நோக்கி தொடர்புபடாமை மற்றும் சந்தை வாய்ப்புக்களை தேடிச் செல்லாமை போன்ற விடயங்கள் தாக்கமளித்திருந்தன.

(இ) 2013/2017 காலப்பகுதிக்காக தயாரிக்கப்பட்டிருந்த கூட்டிணைக்கப்பட்ட திட்டத்திற்கு இணங்க 2015 ஆம் ஆண்டின் போது செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட இலக்குகளை நிறைவேற்றுவது தொடர்பிலான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) கீழே காட்டப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

* ஊழியர்களின் எண்ணங்களை மாற்றுவதற்கு 03 மதியுரை சேவைகளை நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்

* ஊழியர்களுக்கு சாதகமான வேலைச்சூழலொன்றுக்காக தேவையான வசதிகளை வழங்குதல் (செயற்திட்ட முன்மொழிவு)

* ஊழியர்களின் திறன்களையும் இயலுமைகளை மேம்படுத்துவதற்காக நிகழ்ச்சித்திட்டமொன்று நடாத்துதுல்.

* வலையமைக்கப்பட்ட அரியும் மரங்கள் கட்டுப்பாட்டு முறையொன்றை நிர்மாணித்தல்

* கூட்டுத்தாபன வளவிற்கு வெளியே வேறாக சேர்வர் (server) ஒன்றை ஸ்தாபித்தல்.

* கல்தெமுல்ல, பொரலந்த, கெப்பிட்டிபொல மற்றும் பூஸ்ஸ வேலைத்தளங்களுக்காக வலையமைக்கப்பட்ட இருப்புக் கட்டுப்பாட்டு முறையொன்றை வடிவமைத்தல்

* வலையமைக்கப்பட்ட ஆவண முகாமைத்துவ முறையொன்றை தலைமை அலுவலகத்தின் களஞ்சியத்திற்காக வடிவமைத்தல்





* வலையமைக்கப்பட்ட இருப்பு முகாமைத்துவ முறையொன்றை தலைமை அலுவலகத்தின் களஞ்சியத்திற்காக வடிவமைத்தல்.

* காணப்படும் அனைத்து உற்பத்திகளுக்கும் ஒப்பாக உற்பத்தி அளவை 2 சதவீத்தினால் அதிகரித்தல்

(ii) 2015 ஆம் ஆண்டின் போது நிறைவேற்றுவதற்கு இலக்கிடப்பட்ட நோக்கங்களில், வனசீவராசிகள் திணைக்களத்துடன் கலந்துரையாடி முதிர்ச்சியடைந்த தேக்கு மரங்களை பெற்றுக்கொள்ளும் இலக்கு 68 சதவீதமான அளவொன்றும் தரத்தில் உயர்ந்த அரியப்பட்ட மரங்களை இறக்குமதி செய்யும் இலக்கு 88 சதவீத அளவிலும் வலையமைப்பு புள்ளிவிபர தகவல் முறைமையொன்றை நிர்மாணித்தலின் இலக்கு 50 சதவீதமான அளவில் நிறைவேற்றுவதற்கு தவறியிருந்தது.

**4.2 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

அரச மரக்கூட்டுத்தாபனத்திற்கு சட்டரீதியான உரித்தொன்று இல்லாத காணிகளில் ரூபா 49,689,568 தொகை செலவழித்து உத்தியோகபூர்வ விடுதி, மரக் களஞ்சியங்கள் மற்றும் சுற்றுலா விடுதிகள் போன்ற 12 நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**4.3 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 12,796,781 கிரயமொன்று செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட கந்தபொல ஊழியர் விடுதி நிர்மாணிக்கும் நோக்கத்திலிருந்து விலகி உத்தியோகத்தரொருவரால் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தது. மேலும் விடுதியின் பயன்பாட்டிற்காக ரூபா 491,235 தொகை செலுத்தி 12 கட்டில்கள் மற்றும் 14 கட்டில் மெத்தைகளும் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த உபகரணங்கள் எதுவும் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டதுடன், பிரதேசத்தில் காணப்பட்ட காலநிலை நிலவரத்தைக் கருத்திற் கொள்ளாமல் ரூபா 105,000 தொகை செலவு செய்து மின்விசிறிகளும் பொருத்தப்பட்டிருந்தன.

(ஆ) ஆற்றுப் பள்ளத்தாக்கு அதிகாரசபையிடமிருந்து கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்படாத பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத இரண்டு இயந்திரங்கள் அம்பாறை மர

ஆலையில் இருந்ததுடன் இவ்வியந்திரங்களை திருத்தியமைத்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ கைதவிர்ப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 இனங்காணப்பட்ட நட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆம் ஆண்டின் போது 698,124 தொகை செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்ட 256 காபைட் வாள்களில் 100 நியமத் தரத்தில் இல்லாததன் காரணமாக கொள்வனவு செய்யப்பட்ட நிறுவனத்திற்கே மீள அனுப்பி வைக்கப்பட்டிருந்ததுடன், அதில் ரூபா 149,078 பெறுமதியான 78 வாள் 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்திருக்கவில்லை.

(ஆ) திட்டத்தை அங்கீகரித்துக்கொள்ளாமல் நுவரெலியா ஊழியர் உத்தியோகபூர்வ விடுதி நிர்மாணிக்கப்பட்டமையால் அனுமதியற்ற நிர்மாணக் கட்டணங்களாக ரூபா 44,889 தொகை மிகைக் கட்டணமாக நுவரெலியா மாநகர சபைக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) உத்தியோகத்தரொருவருக்கு உரிய காலத்தில் பணிக்கொடை செலுத்தாமையின் காரணத்தால் கூட்டுத்தாபனத்தினால் ரூபா 54,570 மிகைக் கட்டணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

### 4.5 ஒப்பந்த நிருவாகத்திலான குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மரக் களஞ்சியத்தை நிர்மாணித்தல்

(i) மீளாய்வாண்டின் போது நீர்த்தாங்கி நிர்மாணிப்பதற்காகவும் உத்தியோகபூர்வ விடுதிக்குச் செல்லும் வீதிக்கு கொங்கிரீட் இடுவதற்காகவும் முறையே ரூபா 194,100 தொகை மற்றும் ரூபா 33,120 தொகை பெறுமதியான பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும், அந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) ஊழியர் உத்தியோகபூர்வ விடுதியினையும் எல்லைச் மதிற் சுவரினையும் நிர்மாணிக்கும் போது அதற்குரிய மூலப்பொருட்களை கூட்டுத்தாபனத்தின் மூலம் வழங்குவதற்கும் தொழிலாளர் கூலியை





அளவிட்டு செலுத்தும் (Measure & Pay) அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது, எனினும் பொருட்கள் மற்றும் உழைப்பு என்பவற்றிற்காக மதிப்பீடு ஒதுக்கப்பட்டு தயாரிக்கப்படாமையால் நிர்மாணங்களின் போது எடுக்கப்பட்ட மூலப்பொருட்கள் உள்ளவாறாக தேவையான அளவிற்காக மாத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டதா என உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

(iii) ஊழியர் உத்தியோகபூர்வ விடுதியின் நிர்மாணத்திற்காக சரியான மதிப்பீடொன்று தயாரிக்கப்படாமையால் ரூபா 696,863 ஆன மிகை மதிப்பீடொன்றும் ரூபா 72,031 ஆன குறை மதிப்பீடொன்றும் தயாரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) அம்பாறை ஊழியர் உத்தியோகபூர்வ விடுதி நிர்மாணம் (A மற்றும் B)

ரூபா 33,880,099 நிர்மாணக் கிரயமான ஊழியர் உத்தியோகபூர்வ விடுதியின் பௌதீக ரீதியான பரிசீலனையின் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மதியுரை சேவை நிறுவகத்தின் பலவீனமான திட்டங்கள் மற்றும் மேற்பார்வை காரணமாக் வீடுகளின் பின்புறமாக திட்டமிடப்பட்டிருந்த (Out Door Kitchen) கதவு வெளியே திறக்கக் கூடிய வகையில் இருந்தமை, இரும்பிலான சரனேருகளால் பொருத்தப்பட்டிருந்தமையால் வீடு பாதுகாப்பில்லாமல் இருத்தல், மேல் மாடிகளில் தேங்கி நிற்கும் நீரை அகற்றுவதற்கு முறைமையொன்று தயாரிக்கப்படாமை, வடிகாண் முறையான வழிந்தோடக்கூடிய வகையில் நிர்மாணிக்கப்படாமையால் நீர் தேங்குதல், வடிகாண் முறைமை மேவுகை பாதுகாப்பற்ற வகையில் இடப்பட்டிருந்தமை, தொகுதியின் முன்பக்கமாக ஒட்டப்பட்டுள்ள இன்டர்லொக் கற்கள் முறையாக தயாரிக்கப்படாமை, பின்னால் உள்ள பகுதியின் வடிகாண் முறைமையின் சுவர் நில மட்டத்திற்கு மேல் இருத்தல் போன்ற பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

(இ) நுவரெலியா ஊழியர் உத்தியோகபூர்வ விடுதியின் தளம் மற்றும் முதலாம் மாடி நிர்மாணம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மதியுரை நிறுவகத்தினால், தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர் தொடர்பாக போதியளவு தொழிற்படு மூலதனத் தேவைப்பாடு, வங்கி வசதிகள் மற்றும் முன்னர் நிர்மாணிக்கப்பட்ட அதற்குச் சமமான செயற்பாடுகள் தொடர்பில்

திருப்தியில்லையென குறிப்பிடப்பட்டிருக்கையிலும் இந்த ஒப்பந்தத்தை வழங்கும் போது கொள்வனவுக் குழுவினால் அது தொடர்பாக கவனம் செலுத்தாமல் அந்த ஒப்பந்தக்காரருக்கு நிர்மாண நடவடிக்கைகள் கையளிக்கப்பட்டிருந்தன.

(ii) மதியுரை நிறுவகத்திற்கு கொடுப்பனவு செய்யும் போது பொறியியலாளர் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு ரூபா 237,808 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) **அரச மரக் கூட்டுத்தாபனத்திற்குரிய நுவரெலியா ஊழியர்களின் உத்தியோகபூர்வ விடுதியின் இரண்டாவது மாடி நிர்மாணம்**

கூட்டுத்தாபனத்தின் மரங்களைப் பயன்படுத்தி பூர்த்தி செய்யக்கூடியதாக இருந்த விடுதியின் சீலிங் இற்காக 128.48 சதுர மீற்றருக்காக ரூபா 513,920 தொகை செலவு செய்து பிளாஸ்ரிக் பயன்படுத்தி பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே மரங்களைப் பயன்படுத்தக்கூடிய அநேகமான இடங்களில் அலுமினியம் சட்டம் பயன்படுத்தப்பட்டு நிர்மாணம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(உ) நுவரெலியா ஊழியர் உத்தியோகபூர்வ விடுதியின் பக்கச் சுவர் நிர்மாணத்திற்காக கேள்வி கோரப்படாமல் ரூபா 682,734 இற்கு தனியார் நிறுவனமொன்றின் மூலம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

### 4.6 பதவியணியினர் நிர்வாகம்

2015 திசெம்பர் 31 இல உள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளவாறான பதவியிணயினர் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(அ) நடுத்தர முகாமைத்துவ மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 64 ஆக இருந்ததுடன், சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள எண்ணிக்கை 62 ஆக இருந்தது. ஒட்டுமொத்தமாக 02 வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும், அதில் பிரதி முகாமையாளர்கள் ஏழு பேரின் மிகை ஏனைய உத்தியோகத்தர்களின் பற்றாக்குறைக்கு ஈடுசெய்யப்பட்டிருந்தது.

(ஆ) நடுத்தர முகாமைத்துவ பதவிகளுக்கிடையே பிராந்திய முகாமையாளர்கள், பிரதி முகாமையாளர்கள் (நிதி), (சட்டம் மற்றும் நிர்வாகம்), பொறியியலாளர், முறைமை பகுப்பாய்வாளர் பதவிகளில் மிகை ஊழியர்களின் எண்ணிக்கை 7 ஆகவும் கீழ் மட்ட முகாமைத்துவத்திற்குரிய கிரய உத்தியோகத்தர், பொறியியல் உதவியாளர் (சிவில்), புலனாய்வு





உத்தியோகத்தர் போன்ற பதவிகளில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கையை விட மிகை ஊழியர்களின் எண்ணிக்கை 45 ஆகவும் முகாமைத்துவ உதவியாளர் (அரை திறனுடன்) பதவிகளில் மிகை ஊழியர்களின் எண்ணிக்கை 59 ஆகவும் இருந்தன.

(இ) கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளவாறான பதவியணியினர் என்பவற்றுடன் ஒப்பிடும் போது கூட்டுத்தாபனத்தின் நோக்கம் மற்றும் தந்திரோபாய மார்க்கங்களை அடைந்துகொள்ளும் எதிர்பார்ப்பில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு முறையான ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) உத்தியோகத்தர்களின் முறைகேடான செயற்பாடுகள் தொடர்பாக ஆரம்ப புலனாய்வொன்று நடாத்தப்பட்டதன் பின்னர் அவரிடமிருந்து ரூபா 64,329 ஐ அறவிடுமாறும் அவர் தற்போது சேவை புரியும் நிலையத்திலிருந்து இடமாற்றம் செய்யுமாறு பரிந்துரை கிடைத்திருக்கையில் அந்த உத்தியோகத்தரை நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்பட்டு முகாமையாளர் (கண்காட்சி) பதவிக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டு அவர் சேவை புரிந்த சேவை நிலையத்திற்கே நியமிக்கப்பட்டிருந்தார்.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கொள்வனவுத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொள்வனவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்த ரூபா 979,673 பெறுமதியான மூலதனத் தன்மையிலான 26 பொருட்களும் திட்டமிடப்பட்ட அளவினை விஞ்சி ரூபா 1,489,110 பெறுமதியான 12 உருப்படிகளும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டில் 522 மூலதன உருப்படிகள் கொள்வனவு செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 92 உருப்படிகள் மாத்திரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(இ) டொட் மேட்ரிக்ஸ் பிரின்டர் (Dot Matrix printer) மற்றும் லேசர் பிரின்டர் (Laser printer) கொள்வனவு செய்வதற்காக முறையே ரூபா 990,000 தொகை மற்றும் ரூபா 2,161,000 தொகை பாதீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அது கொள்வனவுத் திட்டத்தின் பிரகாரம் முறையே ரூபா 1,890,000 மற்றும் ரூபா 1,286,000 ஆக இருந்தமையால் பாதீடு மற்றும் கொள்வனவுத் திட்டத்திற்கு இடையே வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

(ஈ) கொள்வனவுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அது நடைமுறையில் சாத்தியமானதாக தயாரிக்கப்படாததன் காரணமாக வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டதுடன், கொள்வன்வுத் திட்டம் ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் செலவினங்களுக்கிடையே 20 சதவீதம் முதல் 738 சதவீதம் வரையான விலகல் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5.3 கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளினால் சுற்றாடலுக்கு ஏற்படும் பாதகமான தாக்கம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளுக்காக முழுமையாக வெட்டப்பட்ட வேலைத்தளத்தின் அளவு 605.8 ஹெக்டேயார் (1505.0 ஏக்கர்) ஆக இருந்ததுடன் புதிய காடுகளின் மேவுகைக்காக 2013 ஆம் ஆண்டிலிருந்து வழங்கப்பட்ட பங்களிப்பு 68 ஹெக்டேயர் (169 ஏக்கர்) ஆகும். முழுமையாக வெட்டுதலுடன் ஒப்பிடும் போது புதிய காடு வளர்ப்பு மேவுகைக்காக வழங்கப்பட்டுள்ள பங்களிப்பு மிகவும் குறைந்த மட்டத்தில் இருந்தது. மேலும் நிறுவகத்தின் செயற்பாடு தாவரங்களின் பேரில் தங்கியிருப்பதுடன், உற்பத்திக்காக காடுகளைப் வெட்டும் போது முதிர்ச்சியடையாத தாவரங்கள் அழிவடைதல் மற்றும் கால்நடைகளுக்கு சேதம் ஏற்படுதல் அநேகமான சந்தர்ப்பங்களில் இடம்பெற்றிருந்தது.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் உற்பத்திகளாக மரக் குற்றிகள், அரியப்பட்ட மரங்கள், சிலிப்பர்கள், மின் கம்பங்கள், யானை வேலிக் கம்பங்கள், மற்றும் வீட்டுத் தளபாடங்கள் என்பவற்றைக் குறிப்பிடலாம். சிலிப்பர்கள் அரச புகையிரத திணைக்களத்திற்கும் மின் கம்பங்கள் இலங்கை மின்சார சபைக்கும் யானை வேலிக் கம்பங்கள் வன சீவராசிகள் திணைக்களத்திற்கும் சலுகை கடன் கால அடிப்படையின் கீழ் வழங்கப்படுகின்றன. வீட்டுத் தளபாடங்கள் வழங்கும் போது அரச ஊழியர்களை மாத்திரம் இலக்காகக் கொண்டு பிரசாத அபிமான என்ற கடன் முன்மொழிவுத் திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்ததுடன், தனியார் துறையின் ஊழியர்களை இலக்காக கொள்ளாமை, பொது மக்களுக்கு சலுகை அடிப்படையில் வீட்டுத்





தளபாடங்களை வழங்காமை மற்றும் போட்டி நிறுவனங்களுக்கு ஒப்பாக வீட்டுத் தளபாடங்களின் விலை மிகவும் கூடிய விலையாக இருந்தமையால் மக்களுக்கு வழங்கும் சேவைகள் தொடர்பில் திருப்தியடைய முடியாதிருந்தது.

## 5.4 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்

பங்களாவத்தை செபல்டன் வணிகமயப்படுத்தல் காணித் துண்டில் அனுமதியற்ற மரங்களை வெட்டுவதற்கு எதிராக ஒப்பந்தக்காரர் மற்றும் கூட்டுத்தாபன ஊழியர்கள் தொடர்பாக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் எடுப்பதாக கூட்டுத்தாபனத்தின் தலைவர் 2013 யூன் 28 ஆந் திகதி அறிவித்திருந்த போதிலும் 2016 மே 20 ஆந் திகதி வரையிலும் இது தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும் | அவதானிப்புக்கள் |
| --- | --- |
| (அ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு | அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளை உரிய காலப்பகுதியில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை, வெளித்தரப்பினருக்கு செலுத்த வேண்டிய உரிமை மூலதன பங்கினைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமை மற்றும் வெவ்வேறு வைப்புக்கள் கால எல்லையை மிகைத்து இருக்கும் போது மீளச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமை |
| (ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு | கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பாதீடு பயன்படுத்தப்படாதிருந்தமை மற்றும் சரியான மதிப்பீடொன்று தயாரிக்கப்படாமை |

| | | |
|---|---|---|
| (இ) | நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | நிலையான சொத்துக்களின் உரித்தை உறுதிப்படுத்தாமை மற்றும் சொத்துக்களை முறையாக பயன்பாட்டிற்கு எடுக்காமை. |
| (ஈ) | கொள்வனவு மற்றும் ஒப்பந்த நிர்வாகம் | கொள்வனவு வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை, ஒப்பந்த நிர்வாகத்தின் போது மதியுரை சேவை நிறுவனங்களிடமிருந்து உரிய சேவைகளை முறையாகப் பெற்றுக்கொள்ளாமை மற்றும் அவ்வாறான சந்தர்ப்பங்களில் பொருத்தமான நடைமுறைகளைப் பின்பற்றி ஒப்பந்தத்தை முறையாக நிறைவேற்றாமை. |
| (உ) | பதவியணியினர் நிர்வாகம் | கூட்டுத்தாபன சட்ட விதிகள் மற்றும் பிரமாணங்களின் பிரகாரம் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுகள் வழங்கப்படாமை. |

ஒப்பம்: எச்.எம்.காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி



# வருடாந்த கணக்குகள்

*2015 டிசெம்பர் 31ஆந் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கானது*

## விபரமான வருமானக் கூற்று

| திசெம்பர் 31ஆந் திகதியுடன் முடிவடையும் | குறிப்பு | 2015 (ரூபா) | 2014 (ரூபா) |
|---|---|---|---|
| மொத்த விற்பனை | 2 | 3,836,191,364 | 3,473,847,448 |
| விற்பனை ஆகுசெலவு | 3 | (2,079,076,399) | (2,020,396,537) |
| **செயற்பாடு மீதான மொத்த இலாபம்** | | **1,757,114,965** | **1,453,450,911** |
| வேறு வருமானங்கள் | 6 | | |
| தொழிற்படு | 6.2 | 72,879,875 | 59,808,848 |
| தொழிற்படாற்ற | 6.1 | 222,980,543 | 222,826,052 |
| **மொத்த தேறிய வருமானம்** | | **2,052,975,383** | **1,736,085,811** |
| விற்பனை மற்றும் விநியோகித்தல் செலவினங்கள | 4 | (578,170,820) | (567,950,153) |
| நிர்வாகச் செலவினங்கள | 5 | (706,105,228) | (740,913,217) |
| **திறைசேரி வரியின் முன் தேறிய இலாபம்** | | **768,699,335** | **427,222,442** |
| திறைசேரிக்கு செலுத்திய வரிகள் | | (50,000,000) | (25,000,000) |
| **திறைசேரி வரியின் பின் இலாபம்** | | **718,699,335** | **402,222,442** |
| வருடத்திற்கான வருமான வரி | 7 | (348,808,858) | (196,224,578) |
| **வருமான வரியின் பின் இலாபம்** | | **369,890,477** | **205,997,864** |
| வேறு விபரமான வருமானங்கள் | | - | - |
| **வருடத்திற்கான மொத்த விபரமான வருமானம்** | | 369,890,477 | 205,997,864 |



## நிதி நிலைமைக் கூற்று

| திசெம்பர் 31ஆந் திகதியில் | Note | 2015 (ரூபா) | 2014 (ரூபா) |
|---|---|---|---|
| சொத்துக்கள் | | | |
| நடைமுறையற்ற சொத்துக்கள் | | | |
| சொத்துக்கள், பொறித்தொகுதி, இயந்திரங்கள் | 8 | 1,022,918,340 | 905,640,314 |
| அருவச் சொத்துக்கள் | 9 | 1,676,332 | 1,634,835 |
| உயிரியல் சார் சொத்துக்கள் | 10 | 5,317,379 | 4,836,929 |
| திறைசேரி வைப்புக்கள் | | 2,966,000 | 2,966,000 |
| ஊழியர் பிணை வைப்புக்கள் | | 55,275,308 | 48,717,776 |
| முதலீடுகள் | 11.1 | 523,099,646 | 491,211,954 |
| முன்செலுத்தப்பட்ட ஊழியர் நன்மைகள் | | 34,491,982 | 43,149,305 |
| பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் | 7.2 | - | 41,757,543 |
| நடைபெற்றுக் கொண்டிருக்கும் மூலதன வேலைகள | | 97,834,789 | 114,993,567 |
| மொத்த நடைமுறையற்ற சொத்துக்கள | | 1,743,579,776 | 1,654,908,223 |
| நடைமுறைச் சொத்துக்கள் | | | |
| வியாபார இருப்புக்கள் | 12 | 1,051,179,907 | 1,068,260,904 |
| வியாபார மற்றும் வேறு கடன்பட்டோர் | 13 | 725,589,567 | 1,050,972,162 |
| நிலையான வைப்புக்களில் முதலீடு | 11.2 | 1,977,265,939 | 1,574,321,125 |
| பணம் மற்றும் வங்கி மீதி | 14 | 361,223,645 | 311,305,958 |
| மொத்த நடைமுறைச் சொத்துக்கள் | | 4,115,259,058 | 4,004,860,150 |
| **மொத்த சொத்துக்கள்** | | **5,858,838,835** | **5,659,768,372** |
| உரிமைப்பங்கும் பொறுப்புக்களும் | | | |
| உரிமைப்பங்கு மற்றும் ஒதுக்குகள | | | |
| அனுமதிக்கப்பட்ட மூலதனம் | | 75,000,000 | 75,000,000 |
| அளிக்கப்பட்ட மூலதனம் | 15 | 41,503,668 | 41,503,668 |
| வருவாய் ஒதுக்கீடு | | 3,674,865,183 | 3,311,070,808 |
| | | 3,716,368,851 | 3,352,574,476 |
| ஊழியர் கடன் சுழல் நிதியம் | 16 | 236,650,441 | 230,554,340 |
| மொத்த உரிமைப்பங்கு | | 3,953,019,293 | 3,583,128,816 |
| நடைமுறையற்ற பொறுப்புக்கள் | | | |
| ஓய்வூதிய பணிக்கொடை நிதியம் | 17 | 366,887,129 | 435,931,143 |
| ஊழியர் பிணை வைப்புக்கள் | | 55,275,308 | 48,717,776 |
| பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள் | 7.2 | 2,691,425 | - |
| மொத்த நடைமுறையற்ற பொறுப்புக்கள் | | 424,853,862 | 484,648,919 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | | | |
| வருமான வரி | 18 | 291,486,919 | 232,193,834 |
| கடன்வழங்குவோர் மற்றும் திரண்ட செலவு | 19 | 1,189,478,761 | 1,359,796,803 |
| மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள் | | 1,480,965,680 | 1,591,990,637 |
| மொத்த பொறுப்புக்கள் | | 1,905,819,542 | 2,076,639,556 |
| **மொத்த உரிமைப்பங்கும் பொறுப்புக்களும்** | | **5,858,838,835** | **5,659,768,372** |

அரசாங்க மரக கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் தொடர்பான இக்கூற்று 1971 இல 38ஐக் கொண்ட நிதிச் சட்டத்தின் பிரமாணங்களின் பிரகாரம் முன்வைக்கப்பட்டுள்ளது.

**பொது முகாமையாளர்**
அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

பக்க இல 103 முதல் 109 வரையிலான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் பக்க இல 110 முதல் 119 வரையிலான கணக்குக் குறிப்புக்கள் இக்கணக்குக் கூற்றுக்களின் ஒரு பகுதியாகும். இந்நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் மற்றும் முன்வைக்கும் பொறுப்பு பணிப்பாளர் சபைக்குரியது. பணிப்பாளர் சபை சார்பாக கையொப்பமிடப்பட்டுள்ளது.

**தலைவர்**
அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்
(பணிப்பாளர் சபை சார்பாக)

**பணிப்பாளர்**

திகதி : 2016.06.21



**உரிமைப்பங்கு மாற்றங்கள் தொடர்பிலான கூற்று**

| | பங்களித்த மூலதனம்(ரூபா) | ஊழியர் கடன் சுழலும் நிதியம்(ரூபா) | தடுத்து வைத்த இலாபம் (ரூபா) | மொத்தம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 2014 ஜனவரி 01ஆந் திகதியில் மீதி | 41,503,668 | 225,543,133 | 3,110,175,859 | 3,377,222,660 |
| வருடத்தினுள் செய்யப்பட்ட செம்மையாக்கல்கள் | - | (91,708) | - | (91,708) |
| வருடத்திற்கான மொத்த விபரமான வருமானம் | - | - | 205,997,864 | 205,997,864 |
| வருடத்திற்கான ஊழியர் கடன் வட்டி | - | 5,102,915 | (5,102,915) | - |
| **2015 ஜனவரி 01ஆந் திகதியில் மீதி** | 41,503,668 | 230,554,340 | 3,311,070,808 | 3,583,128,816 |
| வருடத்தினுள் செய்யப்பட்ட செம்மையாக்கல்கள் | - | - | 369,890,477 | 369,890,477 |
| வருடத்திற்கான மொத்த விபரமான வருமானம் | - | 6,096,101 | (6,096,101) | - |
| **2015 திசெம்பர் 31ஆந் திகதியில் மீதி** | **41,503,668** | **236,650,441** | **3,674,865,183** | **3,953,019,293** |

**பணப்பாய்ச்சல் கூற்று**

| டிசம்பர் 31ஆந் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கானது | 2015 | 2014 |
|---|---|---|
| | (ரூபா) | (ரூபா) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகள் மூலம் பணப்பாய்ச்சல்** | | |
| கொடுக்கல் வாங்கல் செய்வோரிடமிருந்து பெற்ற தொகை | 4,170,532,250 | 3,114,095,334 |
| வழங்குனர்களுக்கும் ஊழியர்களுக்கும் செலுத்திய தொகை | (3,382,894,088) | (2,679,852,677) |
| தொழிற்படு செயற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட தொகை | 787,638,162 | 434,242,657 |
| வருமான வரி | (245,066,805) | (60,973,270) |
| திறைசேரிக்கு செலுத்திய விசேட வரி | (50,000,000) | (25,000,000) |
| தொழிற்படு செயற்பாடுகள் மூலம் தேறிய பணப்பாய்ச்சல் | 492,571,357 | 348,269,387 |
| **முதலீட்டு நடவடிக்கைகள் மூலம் பணப்பாய்ச்சல்** | | |
| நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்தல் உயிரியல் சொத்துக்களின் அபிவிருத்தி | (244,929,234) | (113,479,867) |
| முதலீடுகள்வள | (480,450) | (1,652,039) |
| முதலீடுகளிலிருந்து கிடைத்த வருமானம் | (434,832,507) | (294,956,339) |
| சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் பெற்ற தொகை | 206,687,772 | 353,965,156 |
| நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகள் | 7,645,869 | 6,843,786 |
| ஊழியர் கடன் சுழல் நிதியம் | 17,158,778 | (63,389,977) |
| முதலீட்டு நடவடிக்கைகள் மூலம் தேறிய பணப்பாய்ச்சல் | 6,096,101 | 5,011,207 |
| நிதி நடவடிக்கைகள் மூலம் பணப்பாய்ச்சல் | (442,653,671) | (107,658,075) |
| **பணம் மற்றும் அதற்கு சமமான சொத்துக்களின் தேறிய பெறுமானம்** | - | - |
| Net increase/(decrease) in cash and cash equivalents | 49,917,687 | 240,611,311 |
| வருட ஆரம்பத்தில் பணம் மற்றும் அதற்கு சமமான சொத்துக்கள் - குறிப்பு 14 | 311,305,958 | 70,694,647 |
| **வருட இறுதியில் பணம் மற்றும் அதற்கு சமமான சொத்துக்கள் - குறிப்பு 14)** | 361,223,645 | 311,305,958 |



# அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் - கணக்குகளுக்கான குறிப்புகள்

## 2015 திசெம்பர் 31ஆந் திகதியில் முடிவடையும் வருடத்திற்கானது

**01. விபரம் அளிக்கும் நிறுவனம்**

**1.1 கூட்டுத்தாபனமாக்கப்படல்**

1957 இல 49ஐக் கொண்ட அரசாங்கக் கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ், 1968 ஏப்பிரல் மாதம் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் ஒரு கூட்டுத்தாபனமாக தாபிக்கப்பட்டது.

**1.1.1 நிதிக் கூற்றுக்களுக்கு அனுமதி பெற்ற தினம்**

2016, ஜுன் மாதம் 21 ஆந் திகதி பணிப்பாளர் சபையில், தீர்மானிக்கப்பட்ட பணிப்பாளர் சபையின் பத்திரத்தின் படி 2015 திசெம்பர் 31ஆந் திகதியுடன் முடிவடையும் வருடத்திற்கான கூட்டுத்தாபனத்தின் நிதிக் கூற்றுக்களை வெளியிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

**1.1.2 நிதிக் கூற்றுக்களுக்கான பொறுப்பு**

நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் வெளியிடுதல் ஆகிய பொறுப்பு பணிப்பாளர் சபைக்கு உரியது.

**1.1.3 ஊழியர் எண்ணிக்கை**

2015 திசெம்பர் 31ஆந் திகதியன்று கூட்டுத்தாபனத்தின் ஊழியர் எண்ணிக்கை 2,145 ஆகும். (2014ஆம் ஆண்டில் 2,186 ஆகும்)

**1.2 முன்வைத்தற் அடிப்படை**

**1.2.1 இசைவு தொடர்பான கூற்று**

இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ள விதந்துரைக்கப்பட்ட சட்டவிதிகள் மற்றும் இலங்கை கணக்கியற் நியமங்கள் (இலங்கை கணக்கியற் நியமங்கள் மற்றும் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள்) ஆகியவற்றுக்கு இணங்க, கூட்டுத்தாபனத்தின் 2015 திசெம்பர் 31ஆந் திகதியன்று மற்றும் அக்காலப் பகுதியில் முடிவடையும் வருடத்திற்கான நிதி நிலைமைக் கூற்று, விபரமான வருமானக் கூற்று, உரிமைப்பங்கின் மாற்றங்கள் பற்றிய கூற்று, பணப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றுடக் கணக்குக் குறிப்புக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

**1.2.2 மதிப்பீட்டு அடிப்படை**

கிடைக்க வேண்டிய ஊழியர் கடன் மற்றும் வியாபார கடன்பட்டோர் நியாயமான பெறுமானத்தில் கணக்குகளில் காட்டப்பட்டுள்ளதுடன், ஏனைய பெறுமானங்கள் நிதிக் கூற்றுக்களில் சரித்திர ஆகுசெலவு மரபை அடிப்படையாகக் கொண்டு காட்டப்பட்டுள்ளன.

**1.2.3 பாவனையிலுள்ள மற்றும் நிதிக் கூற்றுக்களை முன்வைப்பதற்கான பண அலகு**

நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் முன்வைக்கப்பட்டுள்ளதுடன், அது கூட்டுத்தாபன கொடுக்கல் வாங்கலில் பயன்படுத்தப்படும் பண அலகாகும். விசேடமாகக் குறிப்பிடப்படாவிடின், அனைத்து நிதித் தகவல்களும் மிக நெருங்கிய மொத்த எண்ணைப் பயன்படுத்தி முன்வைக்கப்பட்டுள்ளன.

**1.2.4 மதிப்பீடுகளும் தீர்மானஙகளும்**

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க, நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில், முகாமைத்துவத்திற்கு பல்வேறு மதிப்பீடுகள், தீர்மானங்கள், ஊகங்கள் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டியுதுடன், அவை கணக்கியற் கொள்கைகளைச் செயற்படுத்தும் போதும், அறிக்கையிடப்படும் சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானங்கள், செலவினங்கள் அகியவற்றின் பெறுமானங்களில் தாக்கங்களை ஏற்படுத்தலாம். மதிப்பீடு மற்றும் அடிப்படை ஊகங்கள் என்பன முன்னைய அனுபவங்கள் மற்றும் ஏதேனும் சந்தர்ப்பத்தில் நியாயமானது என நம்பும் பல்வேறு விடயங்கள் ஆகியவற்றில் தங்கியுள்ளன. உண்மையான பெறுபேறானது, மதிப்பீட்டு ஊகங்கள், தீர்மானங்கள் ஆகியவற்றை விட வேறுபடலாம். மதிப்பீடுகள் மற்றும் ஊகங்கள் தொடர்ந்து மீளாய்வு செய்யப்படும். திருத்தப்பட்ட கணக்காய்வு காலப்பகுதிக்கு அவை தாக்கத்தை ஏற்படுத்தும் எதிர்காலப் பகுதிக்காக சரிப்படுத்தப்படும்.

**1.2.5 வெளிநாட்டு நாணயப் பரிமாற்றம்**

வெளிநாட்டு நாணயப் பரிமாற்றம் இலங்கை ரூபாவிற்குப் பரிவர்த்தனை செய்யப்படுவது கொடுக்கல் வாங்கல் நடைபெற்ற நாளில் இருக்கும் நாணயப் பெறுமதியின் அடிப்படையிலேயாகும்.

**1.2.6 வரி அறவிடல்**

கணக்குக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் வருமானங்கள் மற்றும் செலவினங்களை அடிப்படையாகக் கொண்டு 2006 இல 10ஐக் கொண்ட உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரமாணங்களுக்கும் பிற்காலத்தில் திருத்தஞ் செய்யப்பட்டவைக்கும் இணங்க, கணக்கிட்டதன் பின் வருமான வரிக்காக ஒதுக்குகள் செய்யப்பட்டுள்ளன.

**1.3 கணக்கீட்டுக் கொள்கைகள்**

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் உரிய கணக்குக் காலப்பிரிவிற்குள் தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**1.3.1 சொத்துக்கள் மற்றும் பெறுமதியினைக் கணக்கிடுதல்**

**1.3.1.1 சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள்**

1.3.1.1.1 இனங்காணும் அடிப்படை

சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் ஆகியவற்றின் ஆகுசெலவிலிருந்து திரண்ட தேய்மானத்தையும் சேதத்துக்குள்ளான பெறுமதியினையும் கழித்துக் கணிப்பிடப்பட்டுள்ளன. (காணி மற்றும் கட்டடங்கள் தொடர்பான நியாயமான பெறுமதியின் கீழ்) சொத்துக்களைக் கொள்வனவு செய்யும் போது, அதற்கு நேரடியாகச் செலவாகிய செலவினங்கள் இயந்திரோபகரணங்கள், பொறித்தொகுதிகள் ஆகியவற்றின் ஆகுசெலவில் உள்ளடங்கும். சொத்துக்கள் பொறித்தொகுதிகள், உபகரணங்கள் ஆகியவற்றின் வேறுபட்ட பாகங்களின் பல்வேறு விளைபயனில் நீடித்த ஆயட்காலம் இருப்பின், அவை சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் ஆகியவற்றின் வேறு உருப்படியாகக் கணக்கில் வைக்கப்படும். அனைத்து சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் ஆகியவை முதலில் ஆகுசெலவில் இனங்காணப்படும். காணி மற்றும் கட்டடங்களின் நியாயமான பெறுமதி மற்றும் முன்கொணரப்பட்ட பெறுமதி ஆகியவற்றுக்கு இடையில் குறிப்பிடத்தக்க வித்தியாசம் காணப்படின், அவை தொழில்வாண்மை மிக்க மதிப்பீட்டாளர்களால் மீள்மதிப்பீடு செய்யப்படும். சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் மீள்மதிப்பீட்டின் போது மொத்த சொத்துக்கள் தொகுதியும் மீள்மதிப்பீடு செய்யப்படும். மீள் மதிப்பீட்டின் போது அதிகரிக்கும் சொத்துக்களின் முன்கொணரப்படும் பெறுமதி மீள்மதிப்பீட்டு ஒதுக்குக் கணக்கில் வரவு வைக்கப்படும்.

சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்வதால் ஏற்படும் பெறுமதி குறைதல் அச்சொத்துக்களை முன்பொரு சந்தர்ப்பத்தில் செய்த சொத்துக்கள் மதிப்பீட்டின் காரணமாக ஏற்பட்ட பெறுமதி அதிகரிப்பு உள்ளடங்கிய மீள்மதிப்பீடு ஒதுக்கீட்டுக்கு ஈடுசெய்யப்படும். ஏனைய அனைத்து குறைவையும் விபரமான வருமானக் கணக்கில் செம்மைப்படுத்தப்படும்.

1.3.1.1..2 சொத்துக்களை விற்பனை செய்வதால் ஏற்பட்ட இலாப/ நட்டம்

சொத்துக்களை விற்பனை செய்வதால் ஏற்படும் இலாபமோ அல்லது நட்டமோ (தேறிய விற்பனையின் போது கிடைப்பனவுகளும் சொத்துக்களின் காவும் பெறுமதியின் வித்தயாசமாகக் கணக்கிடப்படும்) சொத்துக்கள் விற்பனை செய்யப்படும் ஆண்டில் வருமானக் கூற்றில் வேறு செயற்படு வருமானங்கள்/ செலவினங்களின் கீழ் காட்டப்படும்.

1.3.1.1.3 பின் ஆகுசெலவு

நிலையான தன்மையுடன் வியாபாரத்தினை மேற்கொள்வதற்கு அல்லது வியாபாரத்தின் ஈட்டும் கொள்ளளவினை அதிகரித்துக் கொள்வதற்கு சொத்துக்களை சுவீகரித்தல், விரிவாக்குதல் அல்லது விருத்தி செய்தல் ஆகியவற்றிற்காகச் செலவிடப்படும் பின் ஆகுசெலவுகள், மூலதனச் செலவினமாகக் கருதப்படுவதுடன், அவ்வாறான செலவினங்கள் சொத்துக்களில் முன்கொணரப்பட்ட பெறுமதியில் இனங்காணப்படும். அவ்வாறே சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் அன்றாட பராமரிப்பு ஆகுசெலவு இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படும்.

1.3.1.1.4 அகற்றுதல்



சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் ஆகியவற்றும் அகற்றும் போது அல்லது அவற்றைப் பாவிப்பதன் மூலம் நலனேதும் கிடைக்காவிடின், அவற்றை முன்கொணரப்பட்ட பெறுமதி கணக்குகளிலிருந்து அகற்றப்படும். இவ்வாறு சொத்துக்களை அகற்றும் போது ஏற்படும் இலாபமோ அல்லது நட்டமோ விபரமான வருமானக் கணக்கில் செம்மைப்படுத்தப்பட்டு இலாப வருமானமாகக் கருத்திற் கொள்ளப்படமாட்டாது.

1.3.1.1.5 பெறுமானத்தேய்வு

சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள் என்பனவற்றின் எல்லா பாகங்களும் மதிப்பீடு செய்யப்பட்டு விளைபயன்மிக்க ஆயட்காலம் முழுதும் நேர்கோட்டு அடிப்படையில் வருமானக் கூற்றில் பதிவழிக்கப்படும். காணி தேய்மானத்திற்கு உட்படாததுடன், உரிய தேய்மான வீதங்கள் கீழ்வருமாறு.

| | |
|---|---|
| நிலையான கட்டடங்கள் | 2.5% |
| பகுதி நிலையான கட்டடங்கள் | 30% |
| இயந்திரோபகரணங்கள் | 10% |
| வாகனங்கள் | 20% |
| பாதைகள் மற்றும் புகையிரத பாதைகள் | 5% |
| குத்தகை நிலங்கள் | 5% |
| பாதைகள் அமைத்தல் | 10% |
| தளபாடங்கள் மற்றும் பொருத்துகைகள் | 15% |
| அலுவலக உபகரணங்கள் | 15% |
| பல்வேறு சொத்துக்கள் | 20% |
| கணினிகள் | 20% |
| மின் உபகரணங்கள் | 10% |
| கருவிகள் மற்றும் உபகரணங்கள் | 20% |
| காணி அபிவிருத்தி | 10% |

**1.3.1.2 பூர்த்தியடையா வேலைகள்**

நிதி ஆண்டினுள் பூர்த்திசெய்து கொள்ள முடியாத மூலதன முதலீட்டுகளுக்குரிய மூலதனச் செலவினங்கள் உரிய ஆண்டில் முடிவுறா வேலைகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், வேலை பூர்த்தியாகி பாவனைக்குப் பொருத்தமான நிலைக்கு வந்தவுடன் அவற்றை சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்களின் கீழ் காட்டப்படும்.

**1.3.1.3 அருவச் சொத்துக்கள்**

அருவச் சொத்துக்களின் கீழ் கணினி மென்பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு செலவாகிய ஆகுசெலவு உள்ளடங்கும். அவ்வாறே இவ்வாறான அருவச் சொத்துக்கள் அதன் ஆகுசெலவை நம்பகமான முறையில் கணிப்பிட முடியுமாயின் மற்றும் அதன் எதிர்பார்க்கப்பட்ட எதிர்கால பொருளாதார நன்மைகள் கூட்டுத்தாபனத்திற்கு கிடைக்கும் போக்கு காணப்படும் எனின் மாத்திரம் இனங்காணப்படும். அருவச் சொத்துக்கள் ஆகுசெலவிலிருந்து திரண்ட தேய்மானத்தையும் சேதத்திற்குள்ளான திரண்ட பெறுமதியையும் கழித்து கணிப்பிடப்பட்டுள்ளன. விசேடமான சொத்தொன்று குறித்து பின்னர் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் மூலதனமாக்கப்படுவது அச்செலவுகளை மேற்கொள்வதன் காரணத்திலிருந்து உரிய சொத்தில் எதிர்கால வருவாய் வளர்ச்சிக்கு அது உறுதுணையாய் இருந்தால் மாத்திரமே. தேய்மானம் நேர்கோட்டு அடிப்படையில் மதிப்பிடப்பட்டு ஐந்து வருட ஆயுட்கால முழுதும் பதிவழிக்கப்படும்.

**1.3.1.4 உயிரியல் சார் சொத்துக்கள்**

“உயிரியல் சார் சொத்துக்கள்” முதிர்ந்த உயிரியல் சார் சொத்துக்கள் எனவும் முதிர்ச்சியற்ற உயிரியல் சொத்துக்கள் எனவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. விளைச்சலை அறுவடை செய்யும் மட்டத்தில் காணப்படுபவை அல்லது எப்பொழுதும் விளைச்சலை பெற்றுக்கொள்ளும் நிலைமையில் இருப்பவையே முதிர்ந்த உயிரியல் சார் சொத்துக்கள் எனப்படுகிறது. விளைச்சலைப் பெற்றுக்கொள்ள முடிந்த நிலைமையை அடையாமல் இருப்பவை முதிர்ச்சியற்ற உயிரியல் சார் சொத்துக்கள் எனப்படுகிறது.

உயிரியல் சார் சொத்துக்கள் விளைச்சல் கிடைக்கும் உயிரியல் சார் சொத்துக்கள் எனவும் நுகரும் உயிரியல் சார் சொத்துக்கள் எனவும் வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன், விளைச்சலைத் தரும் உயிரியல் சார் சொத்துக்கள் விற்பனைக்காகவும் அல்லது அறுவடை செய்வதற்காகவும் வைத்துக்கொள்ளாதவை என்பதுடன், அவை விவசாய உற்பத்திகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் அபிவிருத்தி செய்யப்படும். நுகரும் உயிரியல் சார் சொத்துக்கள் வகைக்கு அரிமரங்களைப் பெற்றுக் கொள்வதற்காகக் கட்டுப்படுத்தப்படும் மரங்களும் உயிரியல்சார் சொத்துக்களினால் விளைச்சலைப் பெற்றுக்கொள்ளும் விவசாய உற்பத்திகளும் உயிரியல் சார் சொத்துக்களாக விற்பனை

செய்யப்படுபவை உள்ளடங்குகின்றன. கடந்த கால சம்பவத்தின் பெறுபேறாக கூட்டுத்தாபனம் அவற்றை தற்காலத்தில் கட்டுப்படுத்தும் போது அவ்வுருபடிகளுடன் பிணைந்துள்ள எதிர்கால பொருளாதார நன்மைகள் வர்த்தகத்தினுள் உருவாகுதல் சாத்தியமாகுமெனின், மற்றும் அவற்றின் ஆகுசெலவு மற்றும் நியாயமான பெறுமதி நம்பகமான விதத்தில் அளவிட முடியுமாகையில் உயிரியல் சார் சொத்துக்களை நிறுவனம் இனங்காணும். அரிமங்களைப் பெறுவதற்குக் கட்டுப்படுத்தப்பட்டுள்ள மரங்களை முதன்முதலில் இனங்காண்பதுடன், எல்லா அறிக்கையிடும் காலப்பகுதி இறுதியிலும் இலங்கை கணக்கியற் கூற்றுக்கள் 41இன் பிரகாரம் அவற்றை நியாயமான பெறுமதியில் விற்பனை செய்வதற்கு ஏற்படும் ஆகுசெலவினை கழித்த பின்னர் கிடைக்கும் பெறுமானத்திற்கு பதியப்படும்.

எமது கணக்கீடுகளின் படி தேக்கு மரமொன்று முதிர்ச்சியடையும் காலம் கன்றினை நட்ட நாளிலிருந்து 35 வருடங்கள் வரையிலான காலம் எடுப்பதாகவும், தேக்கு மரத்தின் விஞ்ஞான ரீதியான வளர்ச்சி ஏற்படுவது அதன் ஆயுட்காலம் 10 வருடங்களை விட அதிகரித்த பின்பாகும்.

உயிரியல் சார் வளர்ச்சிக்கு இக்காலப்பகுதியினுள் மேற்கொள்ள வேண்டிய செலவினம் போதியதாக இன்மையால், இளம் பயிர்களின் ஆகுசெலவு அவற்றின் நியாயமான பெறுமதிக்கு சமமாகக் கொள்ளப்படும்

**1.3.1.5 நிதிசார் உபகரணங்கள்**

1.3.1.5.1 வழிவரா நிதிசார் சொத்துக்கள் கூட்டுத்தாபனத்தினால் முதலில் கடன் தொகை, கிடைக்க வேண்டிய தொகை மற்றும் வைப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட திகதியின் அடிப்படையில் இனங்காணல் மேற்கொள்ளப்படும். ஏனைய எல்லா நிதிசார் சொத்துக்களும் (இலாபம் மற்றும் நட்டத்தினூடாக நியாயமான பெறுமதியில் பெயர் குறிப்பிடப்பட்ட சொத்துக்கள் உட்பட) கூட்டுத்தாபனம் ஒப்பந்த ஒழுங்குவிதிகளுக்கு அமைய ஒரு தரப்பாக ஆகி கொடுக்கல் வாங்கல் மேற்கொண்ட திகதியின் அடிப்படையில் இனங்காணல் மேற்கொள்ளப்படும். சொத்துக்கள் முதிர்வடைகையில், காசுப் பாய்ச்சலிற்காக உள்ள ஒப்பந்த உரிமைகளின் மீது கூட்டுத்தாபனம் சொத்துக்களை மீண்டும் இனங்காணுதல் அல்லது நிதிசார் கொடுக்கல் வாங்கல்களின் போது சொத்துக்களுக்குரிய ஒப்பந்த காசுப் பாய்ச்சல் கிடைக்க வேண்டிய உரிமையுடன் கவனத்திற் கொள்ள வேண்டிய எல்லா இடர்களும் மாற்றப்படும்.

1.3.1.5.1.1 கடன் கொடுத்த மற்றும் அறவிடப்பட வேண்டிய சொத்துக்கள்
நிலையான அல்லது தீர்மானிக்க ஈயலுமான கொடுப்பனவுடனான செயற்படு சந்தையிலிருந்து பிரித்தெடுக்க முடியாத நிதிசார் சொத்துக்கள் கடன் மற்றும் கிடைப்பனவுகளாகும். இச்சொத்துக்கள் நியாயமான பெறுமானத்திற்கு அதற்குரிய நேரடிச் செலவுகளைக் கூட்டியபின் கடனைச் சேதப்படுத்தும் நட்டங்களை அகற்றிய பின் விளைபயன் மிகு வட்டி முறையைப் பிரயோகித்து அச்சொத்துக்கள் மீண்டும் இனங்காணுதல் மேற்கொள்ளப்படும். கடன்கள் மற்றும் கிடைப்பனவுகள் வியாபார மற்றும் வியாபாரமற்ற கிடைப்பனவுகளைக் கொண்டுள்ளதுடன், ஊழியர் கடன்களும் உள்ளடங்கும். காசு மற்றும் காசுக்கு சமமான சொத்துக்கள் காசு மீதிகளையும் அழைப்பு வைப்புக்களையும் கொண்டுள்ளதுடன், அழைப்பு வைப்புக்கள் உள்ளடக்கப்படுவது காசுப் பாய்ச்சல் கூற்றினை நோக்காகக் கொண்டாகும்.

**1.3.1.6 முதலீடுகள்**

1.3.1.6.1 நிலையான வைப்புக்கள் முதலீட்டு ஆகுசெலவினில் குறிப்பிடப்பட்டுள்ளன.

1.3.1.6.2 நீண்டகால முதலீட்டு ஆகுசெலவினில் குறிப்பிடப்பட்டுள்ளன.

1.3.1.6.3 அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியில் முதலீடுகள்
இம்முதலீடுகள் அரசாங்க மரக்கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களுக்கு வீட்டுக் கடன் வசதிகளை வழங்குவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1.3.1.6.4 பெறுமானத் தேய்வு
நிதிச் சொத்துக்களின் பெறுமதி குறைவாதக விடய ஆரம்ப சான்றுகள் இருக்கின்றதா என ஒவ்வொரு அறிக்கையிடும் தினத்தில் மதிப்பீட்டுக்கு உட்படுத்தி அவ்வாறு பெறுமானத் தேய்வினால் ஏற்படக்கூடிய நட்டம் வருமானக் கூற்றில் இனங்காணப்படும்.

1.3.1.6.5 லங்கா டிம்பர் பிலான்டேʻன் இன்டஸ்ரீஸ் நிறுவனத்தில் முதுலீடுகள்

இம்முதலீட்டினால் எவ்வித பங்கிலாபங்களும் இல்லை. மேலும், முதலீடு செய்யபபட்டுள்ள 30,000,000/- ரூபா தொகையினை மீளப்பெறுவதும் நிச்சயமற்றதாக உள்ளது. அதனால், பெறுமதித் தேய்வினால் ஏற்படும் நட்டம் 30,000,000/- ரூபாவாக வருமானக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

**1.3.1.7 வியாபார இருப்புக்கள்**

இருப்புக்கள், ஆகுசெலவு அல்லது மதிப்பிடப்பட்ட பணமாகும் பெறுமானம் ஆகிய இரண்டையும் விடக் குறைந்த் பெறுமானத்திலேயே மதிப்பிடப்பட்டுள்ளன. அன்பளிப்பு செய்யப்பட்ட அரிமர இருப்புக்களும், மதிப்பிடப்பட்டிருப்பது ஆகுசெலவு (இருப்பு தற்பொதைய இடத்திற்கு மற்றும் தற்போதைய நிலைக்கு கொண்டு வருவதற்கு ஏற்பட்ட ஆகுசெலவு) அல்லது மதிப்பிடப்பட்ட பணமாகும் பெறுமானம் ஆகிய இரண்டையும் விடக் குறைந்த்
பெறுமானத்திற்காகும். முதலில் பெறுதல் முதலில் வழங்குதல் என்ற அடிப்படையிலேயே ஆகுசெலவு முடிவு செய்யப்படுவதுடன், இருப்புக்களைத் தற்போதைய இடத்திற்கு மற்றும் நிலைக்கு கொண்டு வருவதற்காக ஏற்படும் அனைத்து செலவினங்களும் ஆகுசெலவிற்குள் அடங்கும். உற்பத்தி சம்பந்தமான ஆகுசெலவிற்குள் அனைத்து நேரடி செலவுகளும் சாதாரண செயற்பாட்டு மட்டத்தை அடிப்படையாகக் கொண்ட உற்பத்தி மேந்தலைச் செலவுகளும் அடங்கும்.
தேவையான சந்தர்ப்பங்களில் காலங் கடந்த, மந்தமான நிலையில் விற்பனையாகும் அல்லது தரங்குறைந்த இருப்புக்களுக்கு ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இருப்புக்கள் சேதத்திற்குள்ளாவதற்கு 15மூ ஏற்பாடு ஒதுக்கப்பட்டுள்ளது.

**1.3.2 பொறுப்புக்கள் மற்றும் ஏற்பாடுகள்**

நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை பொறுப்புகக்ளின் கீழ், கோரியவுடன் செலுத்த வேண்டிய கொடுப்பனவுகள் அல்லது நிதி நிலைமைக் கூற்றுத் திகதியிலிருந்து ஒரு வருடதத்திற்குள் செலுத்த வேண்டிய கொடுப்பனவுகள் அடங்குகின்றன. நடைமுறையற்ற பொறுப்புக்களாவன நிதி நிலைமைக் கூற்றுத் திகதியிலிருந்து ஒரு வருடத்தை விடக் கூடுதலான காலத்தினுள் செலுத்த வேண்டிய பணமாகும். நிதிக் கூற்றுக்களில் இனங்காணப்பட்ட அனைத்து பொறுப்புக்களும் கணக்கு வைக்கப்பட்டுள்ளன.

1.3.2.1 **வியாபார மற்றும் ஏனைய** செலுத்தவேண்டிய பொறுப்புக்கள்
வியாபார மற்றும் ஏனைய நடவடிக்கைகளுக்கான கொடுப்பனவுகள் உரிய ஆகுசெலவின் படி குறிப்பிடப்பட்டுள்ளன.

**1.3.2.2 ஓய்வூதியப் பணிக்கொடை**

1983, 12ஆம் இலக்கத்தைக் கொண்ட ஓய்வூதியப் பணிக்கொடைச் சட்டத்தின் பிரகாரம் தொடர்ச்சியாக 05 வருடத்தை விடக் கூடுதலான சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்திருக்கும் ஊழியர்கள் ஓய்வூதியப் பணிக்கொடையைப் பெற உரித்துடையவராவர். எனினும் அனைத்து கூட்டுத்தாபன ஊழியர்களுக்காகவும் 2014 திசெம்பர் 31ஆந் திகதியுடன் பூர்த்தி செய்துள் சேவைக்காலம் மற்றும் இறுதியாகப் பெற்ற சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு ஊழியர் ஓய்வூதியப் பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

**1.3.2.3 எதிர்பாரா பொறுப்புக்கள்மற்றும் பொறுப்புக்களுக்கான ஒதுக்கல்கள்**

கடந்தகால சம்பவமொன்றின் பிரதிபலனாக, தற்கோது நம்பிக்கையாக மதிப்பிடக்கூடிய சட்டரீயான அல்லது நியாயப்படுத்தக்கூடிய பொறுப்பொன்று இருப்பின் மற்றும் அப்பொறுப்பினை நிறைவேற்றுவதற்கு பொருளாதார நன்மைகள் ஏற்படுவது உறுதியாகும் எனின் மாத்திரம் கூட்டுத்தாபனத்தினால் ஏற்பாடுகள் ஒதுக்கப்படும்.

பணத்தால் மதிப்பிடக் கூடிய அனைத்து பொறுப்புக்களுக்கும் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய பொறுப்புக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இறக்குமதி செய்யப்பட்ட கிரியோசோட் எண்ணெய்யில் காணப்பட்ட ஒவ்வாத தன்மை காரணமாக வழங்குனருடன் கருத்து வேறுபாடு கொண்டதுடன், அதன் விளைவாக 54,490.51 அமெரிக்க டொலர் பெறுமதிமிக்க கடன் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை விடுவிக்கப்படவில்லை. இந்த முரண்பாடு தீரும் வரை வங்கி குறிப்பிட்ட தொகையைத் தடுத்து வைத்துள்ளது.

பொகவந்தலாவை செப்பல்ரன் வர்த்தக மெல்லியதாக்கல் காணிப் பரப்பில் அனுமதியின்றி மரங்களை வெட்டுவதால் அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன், விசாரணைகளின் போது வெளியாகியுள்ள சில விடயங்களின் காரணமாக இன்னும் உறுதியான முடிவொன்றை எடுக்க முடியாதாகையால், கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகளுடன் ஒன்று சேர்ந்து இவ்விடயம் தொடர்பாக விசாரணை நடத்த வேண்டும் என வன பாதுகாப்பு தலைமை அதிபர் தீர்மானித்துள்ளார்.

வன பாதுகாப்பு திணைக்களத்தினால் அரசாங்க மரக் கூட்டுத்தாகனத்திற்கு எதிராக தெஹிஅத்தகண்டிய நீதவான் நீதிமன்றத்தில் ரம்பகென்ஓய நீர்த்தேக்கத்திற்கு முழ்கடிக்கப்படும் நிலப்பரிப்பில் அரங்களை அகற்றுகையில் ஏற்பட்ட முறைகேடுகள் காரணமாக "பீ" அறிக்கையொன்று முன்வைக்கப்படினும், கூட்டுத்தாபனத்தினால் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு நிலைமை குறித்து விளக்கங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இது வரையில் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை.

2006 முதல் 2012 வரையிலான காலப்பகுதியில் அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தினால் ஊழியர் சேமலாப நிதியத்தின் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் பங்களிப்புத் தொகையினைக் கணக்கிடும் பொது வாழ்கைச் செலவுகள் கவனத்திற் கொள்ளப்படவில்லை எனக் குறிப்பிட்டு தொழில் திணைக்களத்தினால் கூட்டுத்தாபனத்திற்கு எதிராகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. இந்நிலைமையினை இணக்கத்திற்கு னொண்டு வருவதற்காக தொழில் திணைக்களம் மற்றும் அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் கலந்துரையாடி வருவதுடன், இன்னும் ஒரு இறுதித் தீர்மானத்திற்கு வரவில்லை.

2015.07.29 ஆந் திகதியின் பின்னர் சம தரப்பினராக இலங்கை வங்கி நிலையான வைப்புக் கணக்கு இல: 77777554 மற்றும் 77902580 இற்கு எதிராக வங்கி முறிகள் வழங்கப்பட்டுள்ளன.

**1.3.3 விபரமான வருமானக் கூற்று**

விபரமான வருமானக் கூற்றைத் தயாரித்து முன்வைப்பதற்கான செயற்பாடுகளுக்கேற்ப செலவினங்கள் வகைப்படுத்தல் முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு செய்வதற்கு காரணம் கூட்டுத்தாபனத்தின் செயலாற்றுகை நியாயமானதாகத் தெரிவதால் ஆகும். திரண்ட அடிப்படையில் வருமானமும் செலவினமும் இனங்காணப்பட்டுள்ளன.

**1.3.3.1 வருமானங்களை இனங்காணல்**

அரிமரங்களை விற்பதன் மூலம் கிடைத்த அல்லது கிடைக்க வேண்டிய தொகை, வர்த்தகக் கழிவுகள் மற்றும் அளவுகளுக்காகக் கொடுத்த சலுகை ஆகியவற்றைக் கவனத்திற் கொண்டு, நியாயமான பெறுமதியின் அடிப்படையில் அரிமரங்களை விற்பதன் மூலம் கிடைத்த வருமானம் கணிப்பிடப்பட்டுள்ளது. அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் மற்றும் வன பாதுகாப்பு திணைக்களத்தின் ஊழியர்களுக்கு 25வீ சலுகை விலையில் அரிமரங்களை விற்பதுடன், இச்செலவுகள் நலன்புரி வசதிகள் செலவினங்கள் தலைப்பின் கீழ் கணக்கிலிடப்பட்டுள்ளது.

**1.3.3.2 செலவினங்களை இனங்காணல்**

வருடத்திற்குள் கிடைத்திருக்கும் இலாபத்தைக் கணக்கிடுகையில் வருடத்திற்குள் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு செலவிடப்பட்ட அனைத்து செலவினங்களும் வருமானத்திலிருந்து கழிக்கப்பட்டுள்ளன. சீர்படுத்தல் மற்றும் நவீனமயப்படுத்தல் ஆகியவற்றுக்குரிய செலவினங்கள் அவை நிகழ்ந்த வருடத்தில் விபரமான வருமானக் கூற்றில் கணக்கு வைக்கப்பட்டுள்ளன.

1.3.3.2.1 வருமான வரி

வருமான வரி நடப்பு மற்றும் பிற்போடப்பட்ட வரிகளைக் கொண்டது. உரிமைப்பங்கு அல்லது வேறு விபரமான வருமானங்களினூடாக இனங் காணப்படும் உருப்படிகளுக்குரிய அளவினைத் தவிர நடப்பு மற்றும் பிற்போடப்பட்ட வரிச் செலவுகள் விபரமான வருமானக் கூற்றில் இனங் காணப்படும்.

அறிக்கையிடும் தினத்தில் நடைமுறையில் இருக்கும் வரி வீதம் மற்றும் முன்னைய வருடத்திற்காக ஒதுக்குகளைப் பயன்படுத்திக் கொண்டு, வருடத்தின் வரி வருமானம் அல்லது நட்டங்கள் மீதான செலுத்த செலுத்த வேண்டிய அல்லது கிடைக்க வேண்டிய எதிர்பார்க்கப்படும் வரித் தொகை நடப்பு வரி எனக் கொள்ளப்படுகின்றது.



வருமான வரி வீதம் 28வீ ஆவதுடன், ஐயப்பாடான பங்கிலாப வரி வீதம் 25வீ ஆகும்.

நிதி அறிக்கையிடுதலுக்காக சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களில் முன்கொணரப்பட்ட மீதி மற்றும் வரித்தொகைக்கு இடையில் தற்காலிக வித்தியாசத்தைப் பெற்றுக் கொள்வதற்கு பொறுப்புக்கள் முறைமை பாவனையின் மூலம் பிற்போடப்பட்ட வரித் தொனைக் கணக்கிடப்படும். நிதி நிலைமைக் கூற்று தினத்தில் நடைமுறையில் இருக்கும் வரி வீதத்தினைப் பயன்படுத்தி சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களில் முன்கொணரப்பட்ட தீர்க்கப்பட வேண்டிய மீதி அல்லது எதிர்பார்க்கும் பணமாக்கப்படும் தொகையின் அடிப்படையில் பிற்போடப்பட்ட வரித்தொகை கணக்கிடப்படும்.

எதிர்கால சொத்துக்களில் நுகரக்கூடிய பெறுமதிக்கு எதிராக எதிர்காலத்தில் வரி இலாபத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக நிகழ்தகவு காணப்படின், அத்தொகைக்கு மாத்திரம் பிற்போடப்பட்ட வரிச் சொத்து இனங்காணப்படும். சொத்துக்குரிய வரி வருவாயை மேலும் பெற்றுக் கொள்வதற்கு முடியாதெனின், அத்தொகைக்கு பிற்போடப்பட்ட வரிச் சொத்து பெறுமதி இறக்கஞ் செய்யப்படும்.

1.3.3..2.2 உரிமைப்பங்குகளைச் செலுத்துதல்

2015 ஆம் வருடத்திற்கான உரிமைப்பங்கு வெட்டப்பட்ட அரிமரக் கனவளவு அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளது.

1.3.3.2.3 செலவு ஒதுக்கீடு

மர ஆகுசெலவு மற்றும் அரிவாலைகளின் செலவு மாற்றம் என்பன மர இடமாற்றப் பெறுமதியின் அடிப்படையில் ஒதுக்கப்படுவதுடன், உரிய அலகுகளுக்கு எடுத்துச் செல்லும் வாடகைப் பெறுமானத்தின் அடிப்படையில் இயந்திரப் பட்டறையின் ஆகுசெலவு ஒதுக்கப்படும்.

1.3.4 நிதி நிலைமைக் கூற்றுத் தினத்திற்குப்பின்னரான நிகழ்வுகள்

நிதி நிலைமைக் கூற்று தயாரித்த தினத்திற்கு பின்னர் குறிப்பிடத்தக்க அனைத்து நிகழ்வுகளையும் கவனத்திற் கொண்டு, நிதிக் கூற்றுக்களில் உரிய குறிப்பின் கீழ் பொருத்தமான செம்மைப்படுத்தல் அல்லது ஈடுசெய்தல் மேற்கொள்ளப்பட்டன.

1.3.5 ஊழியர் கடன் சுழல் நிதியம்

இந்நிதியம் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களுக்கு கடன் பெற்றுக் கொடுக்கும் நோக்கிலேயே ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஊழியர் கடன்வட்டி வருமானம் ஏனைய வருமானங்களின் கீழ் விபரமான வருமானக் கூற்றில் தெரிவிக்கப்பட்டு, வருமான வரியினைக் கழித்ததன் பின்னர் தேறிய வட்டி வருமானம் ஊழியர் கடன் சுழல் நிதியத்திற்கு மாற்றப்படும்.

இதன் மூலம், ஊழியர் கடன் சுழல் நிதியம் கட்டியெழுப்பப்படுவதுடன், கடனைப் பெற்றுக்கொடுப்பது நிதியத்தில் உள்ள பணத்தொகையின் அளவில் மட்டுப்படுத்தப்படும்.

**1.3.6 பணப்பாய்ச்சல் கூற்று**

பணப்பாய்ச்சல் கூற்று தொடர்பான இலங்கைக் கணக்கியற் கொள்கை 07இன் பிரகாரம் நேரடி முறையைப் பயன்படுத்தி பணப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது. பணம் மற்றும் பணத்திற்கு சமமான சொத்துக்களின் பெறுமதி மாற்றங்களிலான அபாயத்தின் கீழ் விரைவாகப் பணமாக மாற்றிக் கொள்ளக் கூடிய உயர் திரவத்தன்மைமிக்க குறுங்கால முதலீடுகள் உள்ளடங்கும். பணம் மற்றும் பணத்திற்குச் சமமான சொத்துக்களில் கையிலிருக்கும் பணமீதி, வங்கிமீதி, வங்கிகளில் உள்ள குறுங்கால வைப்புக்கள் உள்ளடங்கும்.

## கணக்குகளுக்கான குறிப்புக்கள

### 02.மொத்த விற்பனை

| | 2015 (Rs.) | 2014 (Rs.) |
|---|---|---|
| குற்றிகள் - அரசாங்க காணிகளிலிருந்து பெற்ற | 2,257,131,657 | 1,774,835,926 |
| குற்றிகள் - தனியார் காணிகளிலிருந்து பெற்ற | 57,716,183 | 41,521,752 |
| மரத்துண்டங்கள் | 172,613,302 | 156,973,992 |
| சிலீப்பர்கள் - தனியார் காணிகளிலிருந்து பெற்ற | 51,284,256 | - |
| சிலீப்பர்கள் - அரசாங்க காணிகளிலிருந்து பெற்ற | 74,746,345 | 324,619,571 |
| சிலீப்பர்கள் - ஏற்றுமதி | 107,808,862 | 155,478,174 |
| மின் கம்பங்கள் - அரசாங்க காணிகளிலிருந்து பெற்ற | 54,239,413 | 48,297,160 |
| மின்கம்பங்கள் - தனியார் காணிகளிலிருந்து பெற்ற | 171,860,038 | 142,153,826 |
| யானை வேலிக் கம்பங்கள் | 62,020,251 | 195,127,486 |
| ஏனையவை | 222,846,588 | 88,672,100 |
| சட்டரீதியற்ற காட்டு அரிமரங்கள் | 21,989,976 | 23,903,788 |
| அரச காணிகளிலிருந்து அன்பளிப்பு செய்யப்பட்ட அரிமரங்கள் | 38,933,047 | 37,669,004 |
| தளபாடங்கள் | 349,568,783 | 315,497,163 |
| மொத்த விற்பனை | 269,460,443 | 238,318,417 |
| **நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான வரி** | 3,912,219,144 | 3,543,068,359 |
| கூட்டுத்தொகை | (76,027,780) | (69,220,911) |
| **தேறிய புரள்வு** | 3,836,191,364 | 3,473,847,448 |

### 03. விற்பனைச் செலவு

| | 2015 ரூபா | 2014 (Rs.) |
|---|---|---|
| அரிமரக் களஞ்சிய சாலைகள், சாலையோரக் களஞ்சிய சாலைகள் | 1,051,253,845 | 906,772,371 |
| அரிமரப் பரிகரிப்பு நிலையங்கள் | 486,500,651 | 661,198,073 |
| தளபாடப் பொறித் தொகுதிகள் | 199,687,421 | 165,251,217 |
| சாலையோர விற்பனைகள் | 341,634,483 | 287,174,876 |
| **கூட்டுத்தொகை** | **2,079,076,399** | **2,020,396,537** |

### 04. விற்பனை மற்றும் விநியோகச் செலவினங்கள்

| | 2015 (Rs.) | 2014 (Rs.) |
|---|---|---|
| களஞ்சிய சாலைகள் | 530,990,321 | 505,088,613 |
| அரிமரப் பரிகரிப்பு நிலையங்கள் | 5,775,907 | 23,390,634 |
| தளபாடப் பொறித் தொகுதிகள் | 33,163,963 | 27,587,476 |
| பிராந்திய முகாமைத்துவ அலுவலகம், பிரதான அலுவலகம் | 8,240,628 | 11,883,430 |
| **கூட்டுத்தொகை** | **578,170,820** | **567,950,153** |

### 05. நிர்வாகச் செலவினங்கள்

| | 2015 ரூபா | 2014 ரூபா |
|---|---|---|
| அரிமரப் பரிகரிப்பு நிலையங்கள் | 17,065,901 | 21,945,543 |
| தளபாடப் பொறித் தொகுதிகள் | 21,964,163 | 29,144,333 |
| பிராந்திய முகாமைத்துவ அலுவலகம், பிரதான அலுவலகம் | 660,082,480 | 683,100,131 |
| உல்லாச பங்களா | 6,992,684 | 6,723,210 |
| கூட்டுத்தொகை | **706,105,228** | **740,913,217** |

### 06.ஏனைய வருமானங்கள்

| | 2015 ரூபா | 2014 ரூபா |
|---|---|---|
| 6.1 தொழிற்படா வருமானம் குறிப்பு 6.3 | | |
| வட்டி வருமானம் - முதலீடு | 156,091,113 | 197,513,358 |
| வெளிநாட்டு நாணயமாற்றம் இலாப/(நட்டம்) | 14,336 | 1,136 |
| கட்டட வாடகை | 15,488,165 | 15,042,601 |
| பணிக்கொடை மேலதிக ஒதுக்கீடு | 40,812,838 | - |
| ஊழியர் கடன் வட்டி | 10,574,092 | 10,268,957 |
| | **222,980,543** | **222,826,052** |
| 6.2 தொழிற்படு வருமானம் குறிப்பு 6.3 | | |
| நானாவித வருமானங்கள் | 28,389,377 | 20,952,428 |
| தண்டப்பணம்- ஒப்பந்தக்கரரிடமிருந்தும் வழங்குனரிடமிருந்தும் | 823,764 | 568,079 |
| சொத்துக்கள் விற்பனையால் பெற்ற வருமானம் | 6,431,412 | 6,474,636 |
| இருப்புக்கள் சேதத்திற்கான மேலதிக ஒதுக்குகள் | 25,455,651 | 27,245,757 |
| ஐயப்பாடான கடன் மேலதிக ஒதுக்கீடுகள் | 9,072,801 | 2,003,952 |
| பழுதுகள் மற்றும் இழப்புகளுக்கான அறவீடுகள் | 1,048,605 | 1,153,737 |
| மீளச் செலுத்தாத விலைமனு வைப்புக்கள் | 1,658,265 | 1,410,260 |
| | 72,879,875 | 59,808,848 |
| கூட்டுத்தொகை | **295,860,418** | **282,634,900** |

## 6.3 ஏனைய வருமானங்களின் பகுப்பாய்வு 2015

| வருமான மூலங்கள் | விற்பனைக் களஞ்சியசாலை | அரிமரப் பதப்படுத்தல் அலகு | தளபாட உற்பத்தி அலகு | அரிமர ஆகுசெலவு | பிராந்திய அலுவலகம், பிரதான அலுவலகம் | மர அரிவாலைகள் | உல்லாச பங்களா | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| தொழிற்படா வருமானம் | | | | | | | | |
| வட்டி வருமானம் - முதலீடு | - | - | - | - | 156,091,113 | - | - | 156,091,113 |
| வெளிநாட்டு நாணயமாற்றும் இலாப/(நட்டம்) | - | - | - | - | 14,336 | - | - | 14,336 |
| கட்டட வாடகை | - | - | - | - | 15,488,165 | - | - | 15,488,165 |
| பணிக்கொடை மேலதிக ஒதுக்கீடு | 10,822,677 | 378,492 | 3,925,266 | 8,010,028 | 16,084,137 | 1,592,238 | - | 40,812,838 |
| ஊழியர் கடன் வட்டி | - | - | - | - | 10,574,092 | - | - | 10,574,092 |
| | 10,822,677 | 378,492 | 3,925,266 | 8,010,028 | 198,251,843 | 1,592,238 | - | 222,980,543 |
| நானாவித வருமானங்கள் | | | | | | | | |
| தண்டப்பணம்- ஒப்பந்தக்காரரிடமிருந்தும் | 296,615 | - | 39,252 | - | 24,718,988 | 2,274,212 | 1,060,309 | 28,389,377 |
| வழங்குனரிடமிருந்தும் | - | - | - | - | 823,764 | - | - | 823,764 |
| சொத்துக்கள் விற்பனையால் பெற்ற வருமானம் | - | - | - | - | 6,431,412 | - | - | 6,431,412 |
| இருப்புக்கள் சேதத்திற்கான மேலதிக ஒதுக்குகள் | 20,005,625 | 5,441,032 | 8,993 | - | - | - | - | 25,455,651 |
| ஐயப்பாடான கடன் மேலதிக ஒதுக்கீடுகள் | 852,551 | 7,925,603 | 294,647 | - | - | - | - | 9,072,801 |
| பழுதுகள் மற்றும் இழப்புகளுக்கான அறவீடுகள் | - | - | - | - | 1,048,605 | - | - | 1,048,605 |
| மீளச் செலுத்தாத விலைமனு வைப்புக்கள் | - | - | - | - | 1,658,265 | - | - | 1,658,265 |
| | 21,154,792 | 13,366,636 | 342,892 | - | 34,681,034 | 2,274,212 | 1,060,309 | 72,879,875 |
| கூட்டுத்தொகை | **31,977,469** | **13,745,127** | **4,268,158** | **8,010,028** | **232,932,876** | **3,866,451** | **1,060,309** | **295,860,418** |



## 07. வருமான வரி

| | | 2015 ரூபா | 2014 ரூபா |
|---|---|---|---|
| **நடப்பு வரிச் செலவு** | | | |
| நடப்பு ஆண்டிற்கான வருமான வரி | குறிப்பு 7.1 | 304,359,828 | 202,347,540 |
| முன்னைய ஆண்டிற்கான கூடிய /குறைந்த ஒதுக்கீடு | | 63 | 2,237,777 |
| | | 304,359,891 | 204,585,317 |
| **பிற்போடப்பட்ட வரிச் செலவு** | குறிப்பு 7.2 | | |
| தற்காலிக மாற்றங்களின் மீண்டெழுபவை மற்றும் மூலாரம்பம் | | 44,448,968 | (8,360,739) |
| | | 44,448,968 | (8,360,739) |
| ஆண்டிற்கான வரி அறவீடுகள் | | 348,808,858 | 196,224,578 |

### 7.1 நடப்பு ஆண்டில் இலாபத்திற்கான வருமான வரி

| | 2015 ரூபா | 2014 ரூபா |
|---|---|---|
| இலாபத்திற்கு முன்னரான வரி | 718,699,335 | 402,222,442 |
| மொத்த அனுமதிக்கப்படா செலவுகள் | 104,679,569 | 293,664,679 |
| மொத்த அனுமதிக்கப்பட்ட செலவுகள் | (411,808,542) | (423,720,740) |
| வியாபரஞ்சார் இலாபம் | 411,570,362 | 272,166,381 |
| வியாபாரமற்ற வருமானம் | 182,167,706 | 212,557,094 |
| வரி அறவிடக்கூடிய வருமானம் | 593,738,068 | 484,723,475 |
| வருமான வரியிலிருந்து 28% | 166,246,659 | 135,722,573 |
| பகிர்ந்தளிக்கக்கூடிய இலாபத்தின் மீதான பங்கிலாப வரி | 138,113,169 | 66,624,967 |
| **கூட்டுத்தொகை** | **304,359,828** | **202,347,540** |

### 7.2 பிற்போடப்பட்ட வரி

| | தற்காலிக வித்தியாசம ரூபா | வரிப் பாதிப்பு (சொத்து/பொறுப்பு) ரூபா |
|---|---|---|
| 2015 ஜனவரி 1ஆந் திகதியில் மீதி | (149,134,081) | (41,757,543) |
| வருடத்தினுள் உருவாகிய தொகை | 158,746,313 | 44,448,968 |
| 2015 திசெம்பர் 31ஆந் திகதியில் மீதி | 9,612,232 | 2,691,425 |
| | | |
| சொத்துக்கள், பொறித்தொகுதி, உபகரணங்களின் தற்காலிக வித்தியாசம் | 376,499,361 | 105,419,821 |
| இளைப்பாற்றுப் பணிக்கொடை நிதியத்தின் தற்காலிக வித்தியாசம் | 366,887,129 | 102,728,396 |
| முன்கொணரப்பட்ட வரி நட்டம | - | - |
| 2015 திசெம்பர் 31ஆந் திகதியில் மீதி | (9,612,232) | (2,691,425) |

## 08. சொத்துக்கள், பொறித்தொகுதிகள், உபகரணங்கள்

| விபரம் | ஆகுசெலவு | | | | தேய்மானங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2015.01.01. திகதியில்மீதி | கூட்டல்கள் | அகற்றுதல | 2015.12.31 திகதியில்மீதி | 2015.01.01. திகதியில்மீதி | அகற்றுதல் | ஆண்டிற்கான அறவீடுகள் | 2015.12.31 திகதியில்மீதி | 2015.12.31 திகதியில் முன்கொணரப்பட்டபெறுமதி | 2014.12.31 திகதியில் முன்கொணரப்பட்ட பெறுமதி |
| காணிகள் | 56,873,092 | 3,628,401 | 1,444,347 | 59,057,146 | - | - | - | - | 59,057,146 | 76,729,723 |
| காணி அபிவிருத்தி | 19,856,631 | 5,554,068 | - | 25,410,700 | - | - | 12,357,688 | 12,357,688 | 13,053,012 | - |
| கட்டடங்கள் | 630,353,815 | 78,563,939 | 1,667,356 | 707,250,398 | 155,350,348 | - | 14,109,113 | 169,459,461 | 537,790,937 | 475,003,467 |
| அரிமரக் கொட்டகைகள், ஏனைய கட்டடங்கள் | 19,256,777 | - | - | 19,256,777 | 18,237,618 | - | 508,130 | 18,745,748 | 511,029 | 1,019,159 |
| பாதைகளும் புகையிரதப் பாதைகளும் | 16,679,376 | 1,742,356 | - | 18,421,732 | 5,782,723 | - | 793,900 | 6,576,623 | 11,845,109 | 10,896,653 |
| இயந்திரோபகரணங்கள் | 639,552,770 | 57,624,822 | 12,917,552 | 684,260,040 | 478,966,365 | 11,994,016 | 29,577,255 | 496,549,604 | 187,710,436 | 160,586,405 |
| குத்தகைக்குரிய காணிகளும் கட்டடங்களும் | 148,311 | - | - | 148,311 | 148,311 | - | - | 148,311 | - | - |
| பாதைகளை அமைக்கும் இயந்திரங்களும் உபகரணங்களும் | 60,450 | - | - | 60,450 | 60,450 | - | - | 60,450 | - | - |
| ஆயுதங்களும் உபகரணங்களும் | 5,645,229 | 346,646 | - | 5,991,875 | 4,879,147 | - | 231,725 | 5,110,872 | 881,003 | 766,082 |
| மின்சார உபகரணங்கள் | 14,980,705 | 2,499,136 | - | 17,479,841 | 8,186,694 | - | 1,134,980 | 9,321,674 | 8,158,167 | 6,794,011 |
| வாகனங்கள் | 540,469,054 | 78,035,714 | 5,093,210 | 613,411,558 | 414,105,946 | 4,802,290 | 49,839,606 | 459,143,263 | 154,268,295 | 126,363,108 |
| தளபாடங்கள் மற்றும் பொருத்துகைகள் | 39,564,603 | 3,474,622 | - | 43,039,225 | 21,281,938 | - | 4,440,846 | 25,722,783 | 17,316,442 | 18,282,665 |
| அலுவலக உபகரணங்கள் | 32,484,131 | 834,893 | - | 33,319,024 | 25,232,171 | - | 1,782,069 | 27,014,240 | 6,304,784 | 7,251,960 |
| கணனிகளும் உதிரிப்பாகங்களும் | 56,382,226 | 7,450,367 | - | 63,832,594 | 40,313,955 | - | 5,410,577 | 45,724,532 | 18,108,062 | 16,068,271 |
| நானாவித சொத்துக்கள் | 22,119,263 | 4,453,001 | - | 26,572,264 | 16,240,452 | - | 2,417,892 | 18,658,344 | 7,913,920 | 5,878,811 |
| முன் நிர்மாணிக்கப்பட்ட கட்டமைப்புக்கள் | 4,938,333 | - | - | 4,938,333 | 4,938,333 | - | - | 4,938,333 | - | - |
| குத்தகைக்குரிய காணிகள் - இரத்தினபுரி | 680,300 | - | - | 680,300 | 680,300 | - | - | 680,300 | - | - |
| **கூட்டுத்தொகை** | **2,100,045,065** | **244,207,967** | **21,122,466** | **2,323,130,566** | **1,194,404,751** | **16,796,306** | **122,603,780** | **1,300,212,226** | **1,022,918,340** | **905,640,314** |

அறிக்கையிடும் நாளன்று ஆகுசெலவு 879,155,884.00 ரூபாவான முழுதாக கழிக்கப்பட்ட சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் தொகையொன்று கூட்டுத்தாபனத்திற்கு உரியதாகும்.

காணிகளின் கீழ் குறிப்பிட்டுள்ள காணி அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கீழிருந்து 2015ஆம் ஆண்டு முதல் அகற்றப்பட்டு காணி அபிவிருத்தி என்ற விபரத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது.

கூட்டுத்தாபனத்தினால் காணி அபிவிருத்திக்கு மேற்கொள்ளப்பட்ட செலவு 2015ஆம் ஆண்டு முதல் தயாரிக்கப்பட்டு கழிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டுகளில் திரண்ட தேய்மானப் பெறுமானம் கணக்கிடப்பட்டு மொத்த திரண்ட தேய்மானப் பெறுமானம் 2015ஆம் ஆண்டில் செலவாகப் பதியப்பட்டுள்ளது.

## 09. அருவச் சொத்துக்கள்

| விபரம் | ஆகுசெலவு | | | | தேய்மானங்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2015.01.01. திகதியில்மீதி | கூட்டல்கள் | அகற்றுதல் | 2015.12.31 திகதியில்மீதி | 2015.01.01. திகதியில்மீதி | அகற்றுதல் | ஆண்டிற்கான அறவீடுகள் | 2015.12.31 திகதியில்மீதி | 2015.12.31 திகதியில் முன்கொணரப்பட்டபெறுமதி | 2014.12.31 திகதியில் முன்கொணரப்பட்டபெறுமதி |
| கணினி மென்பொருள்கள் | 3,011,537 | 721,267 | - | 3,732,804 | 1,376,702 | - | 679,769 | 2,056,472 | 1,676,332 | 1,634,835 |
| கூட்டுத்தொகை | 3,011,537 | 721,267 | - | 3,732,804 | 1,376,702 | - | 679,769 | 2,056,472 | 1,676,332 | 1,634,835 |



## 10. உயிரியல்சார் சொத்துக்கள்

| திசெம்பர் 31ஆந் திகதியில் | 2015 ரூபா | 2014 ரூபா |
|---|---|---|
| வருட ஆரம்பத்தில் மீதி | 4,836,929 | 3,184,890 |
| மீள் நடுகை அல்லது அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு | 480,450 | 1,652,039 |
| **வருட இறுதியில் மீதி** | **5,317,379** | **4,836,929** |

கூட்டுத்தாபனத்திற்குரிய தேக்கு மரப் பயிர்ச்செய்கை புளியங்குளம், மதவாச்சி, செவனபிட்டி, வினீத்தகம ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்படுகின்றது.

## 11. முதலீடுகள்

### 11.1 முதலீடுகள் - நீண்ட கால

| திசெம்பர் 31ஆந் திகதியில் | 2015 ரூபா | 2014 ரூபா |
|---|---|---|
| நிலையான வைப்புக்களில் முதலீடு | | |
| அரச நிறுவனங்களில் தற்காலிக் நிதியக் கணக்கு | 382,550,525 | 360,226,630 |
| அரச ஈட்டு, முதலீட்டு வங்கி | 140,049,121 | 130,485,324 |
| | 522,599,646 | 490,711,954 |
| பங்குகளில் முதலீடு | | |
| காணி நிரப்பல் மற்றும் அபிவிருத்திச் சபை | 500,000 | 500,000 |
| வரையறுக்கப்பட்ட லங்கா ரிம்பர் பிலான்டேஷ்ன் நிறுவனம் | 30,000,000 | 30,000,000 |
| (-) முதலீட்டு பெறுமதி இழப்பு | (30,000,000) | (30,000,000) |
| | 500,000 | 500,000 |
| **வருட இறுதியில் மீதி** | **523,099,646** | **491,211,954** |

### 11.2 முதலீடுகள் - குறுகிய கால

| திசெம்பர் 31ஆந் திகதியில் | 2015 ரூபா | 2014 ரூபா |
|---|---|---|
| நிலையான வைப்புக்களில் முதலீடு | | |
| மக்கள் வங்கி | 738,673,524 | 696,410,412 |
| இலங்கை வங்கி | 1,238,592,415 | 877,910,713 |
| **வருட இறுதியில் மீதி** | **1,977,265,939** | **1,574,321,125** |

## 12. இருப்புக்கள்

| திசெம்பர் 31ஆந் திகதியில் | 2015 ரூபா | 2014 ரூபா |
|---|---|---|
| வியாபார இருப்புக்கள் குறிப்பு 12.1 | 916,935,326 | 919,995,872 |
| இருப்புக்களின் சேதத்திற்கான ஒதுக்கீடுகள் | (113,437,199) | (116,548,545) |
| | 803,498,128 | 803,447,328 |
| எடுத்துச் செல்லப்படும் இருப்புக்கள் | 25,131,126 | 76,743,448 |
| நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகள் | 45,183,310 | 36,902,197 |
| களஞ்சியசாலைப் பொருட்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் | 116,767,921 | 104,376,621 |
| பரிகரிப்புச் செய்வதற்கான பதார்த்தங்கள் | 41,783,742 | 27,987,940 |
| எரிபொருள் மற்றும் எண்ணெய் | 5,873,480 | 2,590,469 |
| காகிதாதிகள் | 12,942,201 | 16,212,901 |
| **வருட இறுதியில் மீதி** | **1,051,179,907** | **1,068,260,904** |

### 12.1 இருப்புக்களின் பகுப்பாய்வு

| திசெம்பர் 31ஆந் திகதியில் | 2015<br>ரூபா | 2014<br>ரூபா |
|---|---|---|
| அரசாங்க காணிகளிலிருந்து பெற்ற குற்றிகள் | 428,517,605 | 477,644,908 |
| அரசாங்க காணிகளிலிருந்து பெற்ற மரத்துண்டங்கள் | 176,236,771 | 196,148,449 |
| இறக்குமதி செய்யப்பட்ட மரத்துண்டங்கள் | 10,795,467 | - |
| தனியார் காணிகளிலிருந்து பெற்ற குற்றிகள் | 1,233,350 | 669,081 |
| அரசாங்க காணிகளிலிருந்து பெற்ற சிலீப்பர்கள் | 1,056,247 | 103,896 |
| தனியார் காணிகளிலிருந்து பெற்ற சிலீப்பர்கள் | 28,431,995 | 1,377,702 |
| அரசாங்க காணிகளிலிருந்து பெற்ற மின் கம்பங்கள் | 44,214,166 | 49,274,718 |
| தனியார் காணிகளிலிருந்து பெற்ற மின்கம்பங்கள் | 44,388,282 | 38,529,211 |
| ஏனையவை | 21,374,105 | 13,242,339 |
| தளபாடங்கள் | 160,687,338 | 143,005,568 |
| **வருட இறுதியில் மீதி** | **916,935,326** | **919,995,872** |

### 13. வியாபார மற்றும் ஏனைய கடன்பட்டோர

| திசெம்பர் 31ஆந் திகதியில் | 2015<br>ரூபா | 2014<br>ரூபா |
|---|---|---|
| வியாபாரக் கடன்பட்டோர் | 488,719,334 | 760,981,262 |
| ஐயப்பாடான கடன் ஒதுக்கீடுகள் | (40,995,580) | (49,869,309) |
| | 447,723,754 | 711,111,953 |
| பணிக்குழாத்தினரின் கடன் (குறிப்பு 13.2) | 146,612,656 | 162,274,544 |
| வேறு கடன்பட்டோர் (குறிப்பு 13.1) | 20,747,208 | 17,898,395 |
| **வைப்புக்கள் மற்றும் முன் கொடுப்பனவுகள்** | | |
| உள்நாட்டுக் கொள்வனவு முற்பணம் | 2,057,894 | 38,659,265 |
| முன்கொடுப்பனவுகளுக்கான முற்பணம் | 5,323,161 | 29,189,005 |
| அரிமரங்களை வழங்கும் ஒப்பந்தக்காரருக்கு செலுத்திய முற்பணம் | 13,822,462 | 13,001,712 |
| வைப்புக்களுக்காக கிடைக்க வேண்டிய வட்டி | 63,387,345 | 57,683,002 |
| திருப்பி அனுப்பப்பட்ட காசோலைகள் | - | 110,552 |
| கதிர்காம அஷ்டபல நிதியம் | 962,000 | 1,000,000 |
| நீதிமன்ற வைப்புக்கள் | 8,752,033 | 8,752,033 |
| மகாவெலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு | 2,413,385 | 3,817,263 |
| வனப் பாதுகாப்பு திணைக்களம் | 13,223,972 | 6,910,741 |
| துறைமுக அதிகார சபை | 563,698 | 563,698 |
| **வருட இறுதியில் மீதி** | **725,589,567** | **1,050,972,162** |

### 13.1 வேறு கடன்பட்டோர்

| திசெம்பர் 31ஆந் திகதியில் | 2015<br>ரூபா | 2014<br>ரூபா |
|---|---|---|
| நானாவிதக் கடன்பட்டோர் | 8,362,516 | 3,828,645 |
| பொது வைப்புக்கள் | 12,713,812 | 14,433,370 |
| பொது வைப்புக்களுக்கான ஒதுக்குகள் | (366,620) | (366,620) |
| விலைமனு வைப்புக்கள் | 37,500 | 3,000 |
| **வருட இறுதியில் மீதி** | **20,747,208** | **17,898,395** |

### 13.2 பணிக்குழாத்தில் கடன்பட்டோர்

| திசெம்பர் 31ஆந் திகதியில் | 2015<br>ரூபா | 2014<br>ரூபா |
|---|---|---|
| பணிக்குழாத்தினரின் கடன் | | |
| வாகனக் கடன் | 3,073,052 | 3,899,083 |
| இடர்க் கடன் | 104,696,844 | 112,815,515 |
| மின் உபகரணக் கடன் | 34,134 | 50,067 |
| மிதிவண்டிக் கடன் | 821,634 | 1,527,351 |
| மடிக்கணினி கடன் | 30,333,084 | 35,085,981 |
| தளபாடக் கடன் | 1,534,994 | 1,945,513 |
| | 140,493,741 | 155,323,510 |
| முற்பணம் மற்றும் வேறு கடன் | | |
| சம்பளம் மற்றும் படிகள் முற்பணம் | 3,000 | 7,900 |
| பயணச் செலவு முற்பணம் | 28,233 | 45,687 |
| பண்டிகை முற்பணம் | 4,240,222 | 4,239,279 |
| உள்ளகக் கடன் குறிப்புக்கள் | 894,739 | 1,767,994 |
| ஊழியர் அறவீடுகள் | 858,962 | 790,174 |
| துணிமணிக் கடன் | 93,758 | 100,000 |
| | 6,118,914 | 6,951,034 |
| **வருட இறுதியில் மீதி** | **146,612,656** | **162,274,544** |

### 14. பணம் மற்றும் வங்கி மீதி

| திசெம்பர் 31ஆந் திகதியில் | 2015<br>ரூபா | 2014<br>ரூபா |
|---|---|---|
| கையிலுள்ள பணம் | 975,777 | 959,167 |
| மாறும் காசு | 13,648,009 | 7,914 |
| இலங்கை வங்கி - நடைமுறை கணக்குகள் | 116,529,360 | 119,169,001 |
| இலங்கை வங்கி - அழைப்பு வைப்புக்கள் | 230,070,498 | 191,169,876 |
| **வருட இறுதியில் மீதி** | **361,223,645** | **311,305,958** |

## 15. பங்களிக்கப்பட்ட மூலதனம்

| திசெம்பர் 31ஆந் திகதியில் | 2015 ரூபா | 2014 ரூபா |
|---|---|---|
| இலங்கை அரசாங்க நிதியம் | 25,584,808 | 25,584,808 |
| வன பாதுகாப்பு திணைக்களத்தினால் சுவீகரிக்கப்பட்ட சொத்துக்கள் | 10,714,815 | 10,714,815 |
| உலக வங்கி உதவிகள் | 708,202 | 708,202 |
| கனேடிய மற்றும் பிரித்தானிய உதவிகள் | 4,495,843 | 4,495,843 |
| **வருட இறுதியில் மீதி** | **41,503,668** | **41,503,668** |

## 16. ஊழியர் கடன் சுழல் நிதியம்

| திசெம்பர் 31ஆந் திகதியில் | 2015 ரூபா | 2014 ரூபா |
|---|---|---|
| வருட ஆரம்பத்தில் மீதி | 230,554,340 | 225,543,133 |
| ஊழியர் கடன் வட்டி கிடைத்தல் | 6,096,101 | 5,102,915 |
| வருடத்தினுள் செய்யப்பட்ட சரிப்படுத்துகைகள் | - | (91,708) |
| **வருட இறுதியில் மீதி** | **236,650,441** | **230,554,340** |
| திசெம்பர் 31ஆந் திகதியில் பயன்படுத்தப்பட்ட நிதியத்தின் பெயரளவிலான பணமதிப்பு | 173,194,551 | 196,135,203 |
| **திசெம்பர் 31ஆந் திகதியில் பயன்படுத்தப்படாத நிதியம்** | 63,455,891 | 34,510,845 |

## 17. ஓய்வூதியப் பணிக்கொடை

| திசெம்பர் 31ஆந் திகதியில் | 2015 ரூபா | 2014 ரூபா |
|---|---|---|
| வருட ஆரம்பத்தில் மீதி | 435,931,143 | 340,599,947 |
| வருடத்திற்கான ஏற்பாடுகள் | (38,170,626) | 123,790,345 |
| வருடத்திற்குள் கொடுப்பனவுகள் | (30,873,388) | (28,459,149) |
| **வருட இறுதியில் மீதி** | **366,887,129** | **435,931,143** |

ஓய்வூதியப் பணிக்கொடைக்கான பொறுப்புக்கள் மதிப்பீட்டின் போது 1983இன் இல 12ஐக் கொண்ட ஓய்வூதியப் பணிக்கொடைச் சட்டத்திற்கு இணங்க தொடர்ச்சியாக 5 வருடங்களுக்கு மேலாக சேவைக்காலத்தினைப் பூர்த்தி செய்த ஊழியர்கள் பணிக்கொடையினைப் பெற உரித்துடையராவர். 2015 திசெம்பர் 31ஆந் திகதியில் கூட்டுத்தாபனத்தின் ஓய்வூதியப் பணிக்கொடைக்கான பொறுப்புக்கள் ஆயுகாலம் மதிப்பிடுதலின் கீழ் மதிப்பீட்டுக்கு உள்ளானது. அறிக்கையிடும் திகதியில் முக்கிய கணிப்புக்கள்.

| | 31.12.2015 | 31.12.2014 |
|---|---|---|
| விலைக்கழிவு வீதம் | 10.51% | 7.05% |
| எதிர்கால சம்பள அதிகரிப்பு வீதம் | 5% | 5% |
| ஊழியர் புரள்வு வீதம் | 4.57% | 2.77% |
| ஓய்வூதியம் பெறும் வயது (வருடங்கள்) | 60 | 60 |



## 18. வரி அறவிடல்

| திசெம்பர் 31ஆந் திகதியில் மீதி | 2015 ரூபா | 2014 ரூபா |
|---|---|---|
| செலுத்த வேண்டிய வருமான வரி வருட ஆரம்ப மீதி | 232,193,834 | 88,581,787 |
| வைப்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ள வரி | (11,066,805) | (30,153,705) |
| வருடத்திற்குள் கொடுப்பனவுகள் | (234,000,000) | (30,819,565) |
| வரிகளுக்கான குறைநிறைப்பு ஒதுக்கீடுகள் 2014 | 63 | 2,237,777 |
| வருடத்திற்கான ஒதுக்கீடுகள் | 304,359,828 | 202,347,540 |
| **வருட இறுதியில் மீதி** | **291,486,919** | **232,193,834** |

## 19. கடன்கொடுத்தோர் மற்றும் சேரும் செலவுகள்

| திசெம்பர் 31ஆந் திகதியில் | 2015 ரூபா | 2014 ரூபா |
|---|---|---|
| ஊழியர் சேமலாப நிதியம் | 13,621,019 | 14,086,637 |
| ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் | 1,634,641 | 1,698,070 |
| சேரும் செலவுகள் | 144,405,634 | 128,298,983 |
| மீளளிக்கவேண்டிய விலைமனு வைப்புக்கள் | 8,497,920 | 11,862,050 |
| பிணை வைப்புக்கள் - பணிக்குழாத்தினர் தவிர | 42,110,289 | 33,239,095 |
| செலுத்தவேண்டிய கணக்காய்வுக் கட்டணங்கள் | 2,357,828 | 3,073,028 |
| தடுத்து வைக்கப்பட்டுள்ள பணம் | 14,280,554 | 13,969,943 |
| ஏனைய கடன்கொடுத்தோர் | 72,631,161 | 165,386,186 |
| உரிமைப்பங்கு- வன பாதுகாப்பு திணைக்களம் | 856,100,427 | 964,283,581 |
| உரிமைப்பங்கு- வன ஜீவி திணைக்களம் | 297,946 | 388,363 |
| கூட்டப்பட்ட பெறுமதி மீதான வரி | 33,541,343 | 23,510,868 |
| **வருட இறுதியில் மீதி** | **1,189,478,761** | **1,359,796,803** |

## 20. உரிய தரப்பினருடனான கொடுக்கல் வங்கல்கள்

அரசாங்க மரக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் ஒருவர் மற்றும் வன பாதுகாப்புத் திணைக்களத்தின் பிரதானி வன பாதுகாப்புப் பணிப்பாளர் நாயகம் அவர்களால் கூட்டுத்தாபனத்திற்கு அரிமரங்களை வெட்டுவதற்கு வனப்பயிர்ச் செய்கையினை விடுவிக்கும் பொது தேசிய வன முகாமைத்துவத் திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்வதுடன், வன பாதுகாப்புத் திணைக்களத்தினால் 782,276,144.00 ரூபா பெறுமதியான மரங்களை வருடத்தினுள் கூட்டுத்தாபனத்திற்குப் பெற்றுக் கொடுத்துள்ளது. நிதிக் கூற்றுக்களை வெளியிடும் திகதியில் உரிய தரப்பினருடனான கொடுக்கல் வாங்கல்களின் மீதிகள் பின்வருமாறு.

| திசெம்பர் 31ஆந் திகதியில் | 2015 ரூபா | 2014 ரூபா |
|---|---|---|
| **உரிய தரப்பினருக்கு செலுத்த வேண்டிய** | | |
| வன பாதுகாப்புத் திணைக்களம் | 856,100,427 | 964,283,581 |
| | 856,100,427 | 964,283,581 |
| **உரிய தரப்பினருக்கு கிடைக்க வேண்டிய** | | |
| வன பாதுகாப்புத் திணைக்களம் | 13,223,972 | 6,910,741 |
| | 13,223,972 | 6,910,741 |

# நிதிக் கலைச்சொற்கள்

1. கணக்கியற் கொள்கைகள்
நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது மற்றும் முன்வைக்கும் போது பயன்படுத்தப்படும் விசேட மூலக்கோட்பாடுகள், அடிப்படைகள், நியமங்கள், சட்டங்கள், மற்றும் செயல் நெறிகள்.

2. தவணைமுறைக் கடன் கரைப்பு
அருவச்சொத்துக்களை அதன் விளைபயன்மிக்க ஆயுகாலத்திற்குள் முறையாகப் பகிர்ந்தளித்தல்.

3. சேரும் செலவு
வருமானம் மற்றும் செலவினங்களின் கிடைப்பனவு அல்லது கொடுப்பனவுக் காலஅளவைக் கவனத்திற் கொள்ளாது, ஒன்றையொன்று செம்மைப்படுத்தும் மூலக்கோட்பாடு.

4. பணம் மற்றும் பணத்திற்கு சமமான சொத்துக்கள்
3 மாதங்கள் அல்லது அதற்கு குறைவான காலப்பகுதியில் முதிர்ச்சியடையும் திரவத்தன்மையான முதலீடுகள்.

5. வருமான ஒதுக்கீடுகள்
முதலீடுகளுக்காக வைக்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகள்

6. பெறுமதி கூட்டல்
கூட்டுத்தாபனத்தினால் அதன் செயற்பாடுகளின் மீது உருவாக்கப்பட்ட பணத் தொகை

7. செயற்படு சுட்டுகள்
நடைமுறை பொறுப்புக்களிலிருந்து நடைமுறை சொத்துக்களைப் பிரிக்கும் போது கிடைப்பவை.

8. பெறுமானத் தேய்வுகள்
சொத்தொன்றின் தேய்வடையக்கூடிய பெறுமானத்தை அதன் விளைபயன்மிக்க ஆயுகாலத்திற்குள் முறையாகப் பகிர்ந்தளித்தல்.

9. முடுக்கிவிடுதல்
ஈடுபடுத்திய மூலதனத்திற்கு கடன் பெற்ற தொகை

10. சாதாரண பெறுமதி
அறிவுள்ள ஆதரவுமிக்க இரு தரப்பினரிடையே தூரத்தில் இருந்தவாறு கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுகையில் சொத்தொன்றை பரிமாற்றம் செய்யக்கூடிய பெறுமதி

11. சொத்துக்கள் மீதான வருவாய்
தேறிய வருமானத்தை மொத்த சொத்துக்களின் வீதமாகக் காட்டுதலாகும். இது இலாபத்தை அளவிடும் மற்றும் நிகரான வேறு நிறுவனங்களுக்கிடையில் செயலாற்றுகையை ஒப்பிடும் அளவீடாகப் பயன்படுத்தப்படும்.

12. பிற்போடப்பட்ட வரி
தற்போதைய கணக்கியற் கொள்கைகள், வரிசார் கொள்கைகளில் இருந்து வேறுபடுவதனால் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கள் ஆகும்.

